சோமு நூலக வெளியீடு—3

# அலை கடலுக்கு அப்பாலும் நகரத்தார்களின் ஆலயப் பணிகள்

'சோமலெ'

17 APR 1979

சோமு நூலகம்

சாஸ்திரி நகர் அஞ்சல் நிலையக் கட்டிடம்,
சென்னை - 600 020.

முதற்பதிப்பு — மார்ச்சு 1979

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | அணிந்துரை | |
| | முன்னுரை | 8 |
| 1. | தென் கிழக்கு ஆசியா | 11 |
| 2. | நகரத்தார்களும் சமய உணர்வும் ... | 13 |
| 3. | இலங்கை ... | 27 |
| 4. | பங்களாதேஷ் ... | 53 |
| 5. | பர்மா ... | 55 |
| 6. | சிங்கப்பூர் ... | 75 |
| 7. | மலேசியா ... | 88 |
| 8. | தாய்லாந்து ... | 112 |
| 9. | தெற்கு வியட்நாம் ... | 114 |
| 10. | இந்தோனேசியா ... | 116 |
| 11. | மொரிசியஸ் ... | 120 |
| 12. | இங்கிலாந்து ... | 121 |
| 13. | அமெரிக்கா ... | 122 |
| 14. | பிற்சேர்க்கை ... | 127 |


ஏ. ஜி. ஜி. பிரிண்டர்ஸ்,
சென்னை - 600 020.

ஓம்

# கம்பன் அடிப்பொடி சா. கணேசன் அவர்கள் வழங்கிய

# அணிந்துரை

"அலைகடலுக்கு அப்பாலும் நகரத்தார்களின் ஆலயப் பணி" என்ற நூலைப் பார்த்து மகிழ்ந்தேன். பதினான்கு அத்தியாயங்களில் பல்வேறு நாடுகளிலும் நகரத்தார்கள் தோற்றியவையும் நகரத்தார் உதவியுடன் தோன்றியவை யுமான பற்பல அறப்பணிகள் விளக்கப்பெறுகின்றன.

திரு. சோமலெ அவர்கள் பல நாடுகட்கும் சென்று பலவற்றை நேரில் கண்டவர். அந்த அனுபவத்தாலும், ஆங்காங்குள்ள அன்பர்களிடமிருந்து பெற்ற தகவல்களா லும் எத்தனை எத்தனையோ செய்திகளையெல்லாம் தொகுத்து இந்நூலில் தந்திருக்கிறார். எல்லாம் சுருக்க மாகவே இருப்பினும் போதிய அளவு விளக்கமாக உள்ளன.

இவற்றில் காணப் பெறும் செய்திகளும், விளக்கங் களும் அடுத்த தலைமுறையினருக்குப் பெரிதும் பயன்படும். இவற்றுள் சில இத் தலைமுறையினருக்கே புதினமாகும். பிற்கால வரலாறு எழுதுவோர்க்குச் சிறந்த குறிப்புகளை உதவிய பெருமையை திரு. சோமலெ அடைகிறார்.

இப் பணியாற்றிய திரு. சோமலெ அவர்களை மன மாரப் பாராட்டுகிறேன். நகரத்தார் சமூகமும், வரலாற் றுலகமும் இவ் ஆசிரியர்க்குப் பெரிதும் கடமைப் பட்டிருக் கின்றன. வாழ்க; வளர்க!

கம்பன் அறநிலை,
காரைக்குடி.
5—3—1979.

அன்பன்
**கம்பன் அடிப்பொடி**

சுந்தரத் தமிழில் சுவை குன்றாது

நூல்களைத் தரும்

## சோமு நூலகத்தின் வெளியீடுகள்

1. அமெரிக்காவைப் பார்!

— சோமலெ

விரிவான புதிய பதிப்பு விலை ரூ. 8-50

2 சைவசமயத் தோற்றமும் வளர்ச்சியும்

— டாக்டர் டி. பி. சித்தலிங்கம்

விலை ரூ. 8-00

3. அலைகடலுக்கு அப்பாலும் நகரத்தார்களின் ஆலயப் பணிகள்

— சோமலெ

4. சிதம்பரம் மூலட்டான ஈசுவரர்

எங்களிடம் கிடைக்கும் பிற நூல்கள் :

European Impact on Modern Tamil Writing and Literature

— Somalay

Rs 25 less 40%



17 APR 1979

சிங்கப்பூர் தைப்பூசத்தில் காவடி

# அலை கடலுக்கு அப்பாலும் நகரத்தார்களின் ஆலயப் பணிகள்

## முன்னுரை

நகரத்தார் என்ற சொல்லால் சுட்டப்பெறும் நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் தமிழ் நாட்டிலும் இந்தியாவில் காசி உட்பட எத்தனையோ தலங்களில் செய்திருக்கும் ஆலயப் பணிகள் நாடறிந்தவை.

இந்தியாவுக்கு வெளியே இச் சமுகத்தார் செய்துள்ள செய்துவரும் திருப்பணிகளை இந்நூலில் கூறுவோம்.

# 1. தென் கிழக்கு ஆசியா

தென் கிழக்கு ஆசியா என்ற சொற்றொடர், இரண்டாவது உலகப் போர்க் காலத்தில் எங்கும் பரவியது. இந்தத் தலைப்பில் பத்து, பன்னிரண்டு நாடுகள் அடங்கியுள்ளன.

இந்து மதம் இந்த நாடுகள் எல்லாவற்றிலும் பரவியிருப்பதாகச் சொல்லமுடியாது. சிலநாடுகளில் பௌத்தமும் வேறு சில நாடுகளில் இசுலாமும் இன்னுஞ் சில நாடுகளில் கிறித்தவமும் அரசின் ஆதரவைப் பெற்றுள்ளன.

இத்தகைய சூழ்நிலையில் திரை கடலோடித் திரவியம் திரட்டிய நகரத்தார்கள் இந்து மதத்தைச் சிலநாடுகளில் பரப்பி யிருக்கிறார்கள். இந்த நாடுகளாவன:

(அ) இலங்கை
(ஆ) பர்மா
(இ) மலேசியா
(ஈ) சிங்கப்பூர்
(உ) வியட்நாம்
(ஊ) தாய்லந்து
(எ) இந்தோனேசியா

மேற்கண்ட ஏழு நாடுகளையும் குறிக்க, தென்கிழக்கு ஆசியா என்ற பொதுச் சொற்றொடரைப் பயன்படுத்துகிறோம்.

இந்த நாடுகளில் இந்து சமயம் நகரத்தார்களால் மட்டும்தான் நிலவுகிறது என்று நாம் நிலைநாட்ட முன் வரவில்லை. இராமகிருஷ்ண இயக்கம், யாழ்ப்பாணத் தமிழர்களின் அமைப்புக்கள் ஆகியவையும் சிலநாடுகளில் செய்துவரும் சமயத் தொண்டினை நாம் மறுக்கவுமில்லை, மறைக்கவும் விரும்பவில்லை.

# 2. நகரத்தார்களும் சமய உணர்வும்

நகரத்தார்கள் எங்கெங்கே சென்றாலும் தங்களுடைய சிறப்பியல்புகளைக் கைவிடுவதில்லை.

சீனம் முதல் ஆங்கிலம் ஈருகவுள்ள எத்துணையோ மொழிகள், நகரத்தார் செவிகளில் விழுந்தாலும், தாய் மொழியாகிய தமிழ் ஒன்றே அவர்களின் செவிக்கு இனிமை பயப்பது.

இவ்வாறே பௌத்தம் முதல் பகுத்தறிவு வரை எத்துணையோ கொள்கைகள் நகரத்தார் தொழில் செய்யும் இடங்களில் அலைமோதிய போதிலும் அவர்கள் தென்னாடுடைய சிவனை வழிபடுவதிலும், சைவ சமயத்தைப் பரப்புவதிலும் தமிழ்க் கடவுளாம் முருகனுக்குக் கோயில் எடுப்பதிலுமே ஈடுபடுவர்.

செல்லுமிடமெல்லாம் அறச்செயல்களை மிகுதியாகச் செய்து தமிழ்ப் பண்பாட்டைப் போற்றிவரும் வழக்கத்தைப் பெரிதும் உடையவர்களாய் இவர்கள் தொன்றுதொட்டுத் திகழ்ந்து வருகின்றனர்.

நகரத்தார்கள் செய்திருக்கும் கோயில் திருப்பணிகளும் ஏற்படுத்தியுள்ள அறக்கட்டளைகளும் எண்ணிலடங்காதவை எனலாம்.

"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல்"

எனத் திருவள்ளுவர் கூறியதற்கு ஏற்ப தம்மாலே முடிந்த வகைகளில் எல்லாம் அறவினைகள் செய்து மகிழும் நல்லியல்பும் மாட்சிமையும், நகரத்தார்கள் பால் சிறந்து காணப்படுகின்றன.

நகரத்தார்களுடைய வாழ்க்கைமுறை, கோயிலுடன் இரண்டறக் கலந்தது. கோத்திரப் பிரிவுக்காக நகரத்தார் ஒன்பது கோயில்களைத் தங்களுக்குள் வைத்துக் கொண்டிருக்கின்றனர். ஒரு கோயிலைச் சேர்ந்தவர்கள் இன்னொரு கோயிலில்தான் திருமணம் செய்து கொள்ளவேண்டும். தங்கள் கோயிலுக்குள்தான் ஒருவரை, சுவீகாரம் செய்து கொள்ள வேண்டும்.

நகரத்தார் திருமணங்கள் கோயிலில்தான் பதிவு செய்யப்படுகின்றன. திருமணப் பதிவு அலுவலகமாக இன்றும், ஒன்பது நகரக்கோயில்கள் இருந்து வருகின்றன.

திருமண அழைப்பு, அவரவர்க்கு உரிய கோயில்களில் பதிவு செய்வதன் மூலம், அந்தக் கோயில் இறைவனுக்கும் இறைவிக்கும் கொடுக்கப்படுகிறது. இதுதான் திருமணச் சடங்கின் தொடக்கவிழா. கோயிலுக்குப் பாக்கு வைத்தல் என்ற பெயரால் இந்நிகழ்ச்சி குறிப்பிடப்படுகிறது. கோயிலுக்குப் பாக்கு வைத்த பிறகு, எக்காரணத்தாலும் திருமணம் நிறுத்தப்படமாட்டாது. அதாவது, எதிர்பாராத எந்த நிகழ்ச்சி ஏற்பட்டாலும் அதன் காரணமாகத் திருமணம் தடைப்படாது.

பாக்கு வைத்ததற்கு மறுநாள் இரவில் குலதெய்வத்தையோ, அவரவர்க்கு ஈடுபாடுள்ள ஒரு கடவுளையோ வழிபடுவதும் உண்டு. சுவாமிக்குப் படைத்தல் என்று இதற்குப் பெயர்.

இதற்கு அடுத்த நாள் மாப்பிள்ளை அழைப்பு நடைபெறுவது மரபு. இந்த நிகழ்ச்சி, பெண்வீட்டாருடைய

ஊரில் உள்ள நகரத்தார் கோயிலிலிருந்து தொடங்கும். இந்நாளில் நாகரிக முதிர்ச்சியால் இதற்கு என, வசதியான பொது இடங்கள் கட்டப்பட்டுள்ளன.

அடுத்தது திருமண நாள். மணமகனும் அவனுடைய உறவினரும் திருமணம் நடைபெறும் ஊரிலுள்ள கோயிலுக்குச் சென்று வழிபட்டபிறகு பெண்வீட்டுக்கு வந்து திருப்பூட்டுவர். ஆனால் இந்நாளில், திருமணம் நடைபெறும் நேரத்திற்கும், பிற சூழ்நிலைகளுக்கும் தக்கவாறு முன் பின்னாகக் கோயிலுக்குச் செல்லுகிறார்கள்.

பெண் அழைப்பு விழா, மணமகனுடைய ஊரில் உள்ள நகரத்தார் கோயிலிலேயே தொடங்கும்.

திருமணம் முடிவடைந்த பிறகு இயலுமானால் மணமக்கள் ஒரு திருக்குட நீராட்டு விழாவிற்கு (கும்பாபிஷேகத்துக்குச்) செல்ல வேண்டும் என்பதும் தொன்று தொட்டு நிலவிவரும் பழக்கமாகும். அல்லது, குலதெய்வக் கோயிலுக்கு மணமக்கள் அழைத்துச் செல்லப் பெறுவர். சில வீடுகளில் சுமங்கலிப் படைப்பும் ஏற்பாடு செய்யப் பெறும்

அறுபதாம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் திருமணத்தில், ஐம்பெருங்கடவுளரைத் திருவுலாச் செய்வது நகரத்தார்களுடைய பழக்கமாகும். இதனால்தான் கவியரசர் சுப்பிரமணிய பாரதியார் பாடிய பாடலில்,

"புத்தமுதாம் ஹிந்து மதப் பெருமைதனைப்
பாரறியப் புகட்டும்"

நகரத்தார் என்றும் அவர்கள்,

"ஒண்மையுயர் கடவுளிடத் தன்புடையார்"

என்றும் பாடியுள்ளார்.

நகரத்தார்களைப் பற்றி ஆராய்ந்துள்ள டாக்டர் பிலிப் சீகெல்மென் என்ற அமெரிக்கப் பேரறிஞர் பின் வருமாறு கூறியுள்ளார்:—

"பொதுவாகத் தென்னிந்தியாவிலும் சிறப்பாகச் சோழ நாட்டிலும் இன்று நாம் காணும் சிறந்த கோயில்களை வாழவைப்பவர்கள் நகரத்தார்களே. வான்பொய்ப் பினும் தான் பொய்யாக் காவிரி பாயும் பகுதிகளில் வள மான நிலங்களை வாங்கி இக் கோயில்களுக்குச் செல்வம் சேர்த்தவர்கள் நகரத்தார்களே.கோயில் நிலங்களை மேற் பார்ப்பதிலும் கோயில் நிதிகளைப் பலமடங்காகப் பெருக்குவதிலும் நகரத்தார்களுக்கு இருக்கும் திறமை ஈடு இணையில்லாதது. ஊதுவத்தியானது தன்னைப் பொசுக்கிக் கொண்டு பிறருக்கு மணம் கொடுப்பதுபோல நகரத்தார்கள் பலர் எத்துணையோ இடையூறுகளைத் தாங்கியும் இன்னல்களைச் சமாளித்தும், தொல்லைகளைப் பொறுத்துக் கொண்டும் தாக்குதல்களுக்கு ஈடு கொடுத் தும் கோயில் திருப்பணிகளை முடித்திருக்கிறார்கள். அவற்றை உள்ளபடி சொன்னாலும் கற்பனைபோலவே தோன்றும்."

நகரத்தார்கள் அனைவரும் சிவனடியார்கள் ஆவர். ஒருவரேனும் வைணவர் அல்லர். பெருமாள், தம்மை வழிபடுபவர்களைச் சிறந்த இயல்பினராக ஆக்குவதற்கு வாழ்த்துக் கூறுகிறார் என்றும், சிவபெருமான் தம்மை வழிபடுவர்களுக்குப் பொருளை வாரி வழங்கி இந்த உலகத் திலேயே எல்லா நன்மைகளையும் வழங்கிவருகிறார் என்றும் ஒரு கருத்து நிலவுகிறது.

இந்து மதம் அல்லாத பிறமதங்கள் பெருஞ்சிறப் புடன் திகழும் நாடுகளில் நகரத்தார்கள் தொழில்செய்து, அந்தநாடுகளில் உள்ள இந்துக்கள் அல்லாதவரைத் திரு மணம் செய்துகொண்டிருக்கின்றனர். எனினும், ஒருவரே

னும் மதம் மாறி இந்துமதத்தை விட்டு நீங்கவில்லை. இது இவர்களுடைய அழுத்தமான இந்துமத நம்பிக்கையைப் புலப்படுத்தும். 15-ஆம் நூற்றுண்டுவரை, பல்லவ மன்னர் சோழ அரசர்கள் ஆகியோரால் மலேசியாவில் குடியேற்றப் பெற்ற இந்துக்கள் எல்லோரும் 15 ஆம் நூற்றுண்டில் இசுலாமிய மார்க்கத்தைத் தழுவினர் என்பதை நோக்க நகரத்தாருடைய சமயப்பற்று எத்தகையது என்பது தெரியவரும்

சான்ருக இந்தோனேசியாவில் கி.பி. முதல் நூற்ருண்டு முதல் 12-ஆம் நூற்ருண்டு வரை இந்தியாவிலிருந்து தலை முறை தலைமுறையாக இந்துக்கள் சென்று குடியேறி அந்த நாட்டின் பண்பாட்டையும் நாகரிகத்தையும் உருவாக்கினர். எனினும் அந்தநாடு 15-ஆம் நூற்ருண்டில் இசுலாமியத்துக்கு அடிமைப்பட்டது.

இலங்கையில், வியாபாரம் செய்த இந்துக்கள் சிலர், கிறித்துவ சமயத்தில் சேர்ந்தனர். இந்துக்களாக இருந்து வரும் நகரத்தாரிடமிருந்து இவர்களைப் பிரித்துக் காட்டுவதற்காக இவர்களுக்குக் கொழும்புச் செட்டிமார் என்ற பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

நகரத்தார்கள் வெளிநாட்டில் தங்கியிருக்கும் போதும் இந்தியாவில் உள்ள முக்கியமான தலங்கள் சிலவற்ருேடு தொடர்பு வைத்துள்ளனர். குறிப்பிட்ட தீட்சிதர்களும், குருக்கள்மாரும் உரிய காலங்களில் அர்ச்சனை செய்து, திரு நீறு முதலிய கோயில் பிரசாதங்களை அனுப்பி வருகின்றனர். இந்தியாவில் உள்ள கோயில்களுக்குத் தாராளமாக நன்கொடைகள் வழங்கவும், அவற்றைப் புதுப்பிக்கப் பொருளுதவி செய்யவும், கடல் கடந்து உள்ள நகரத்தார் தயங்குவதேயில்லை. அவர்கள் தாயகத்துக்கு வந்ததும், தலயாத்திரை மேற்கொள்வதற்கும் தயங்குவதேயில்லை.

நகரத்தார் சிலர் மலேசியாவிலிருந்தும், பர்மாவிலிருந்தும் நேரே காசிக்குச்சென்று பிரார்த்தனை செய்துவிட்டு செட்டி நாட்டுக்கு வருவதும் உண்டு.

இந்தியாவில் நகரத்தார்களுடைய சமயப்பணிகள் பல மாநிலங்களிலும் பரவியுள்ளன. காசி விசுவநாதர் கோயிலின் கடந்த 200-ஆண்டுக்கால வரலாற்றிலும், அன்றுடப் பூசைமுறையிலும் நகரத்தார் சிறப்பிடம் பெற்றிருக்கின்றனர்.

"காசி நகரத்துக் கடவுளரைப் பேசவைத்தால்
காவிரிப்பூம் பட்டினத்தார் கலையுணர்ச்சி தோன்றவரும்!
மாசற்ற பொன்னும் மணிவயிரம் இரத்தினமும்
தூசென்று எண்ணித் தூக்கிக் கொடுத்துவந்தோம்
பண்டைத் தமிழ்மரபைப் பண்போடு காத்துவந்தோம்
அண்டை நிலங்களில் நம் ஆண்டவனை ஊன்றி
வைத்தோம்
காசி விசாலாட்சி கவிமதுரை மீனாட்சி
கட்டியுள்ள ஆடைகளும் கழுத்திலுள்ள
பொன்னகையும்
சுற்றியுள்ள மண்டபமும் தூக்கிவரும் வாகனமும்
முற்றும் அழியாத மொட்டைக்கோ புரத்தழகும்
அண்ணா மலையில் அமர்ந்திருக்கும் பேரழகும்
ஆக்கிக் கொடுத்தவர்கள் அமர்ந்திருந்து காத்தவர்கள்
நாட்டுக்கோட் டைவளர்த்த நகரத்தார் அல்லேமோ!"

என்று அரசவைக் கவிஞர் கண்ணதாசன் உணர்ச்சி வயப்பட்டுப் பாடியுள்ளார்.

அமெரிக்காவின் பெருநகரமாகிய நியூயார்க் மாநகரில் 1978-இல் ஒரு விநாயகர் கோயில் கட்டிமுடிக்கப் பெற்று குடநீராட்டு விழாவும் சிறப்பாக நடை பெற்றது. இந்தத் திருப்பணியில் மிகப் பெரிய அளவில் பொறுப்பேற்றவர்

ஐக்கிய நாடுகள் அவையில் பெரிய அலுவலராக உள்ள டாக்டர் அழகப்பன் ஆவார். இவருடைய முயற்சிக்கு இறுதிக் கட்டத்தில் திருமலை-திருப்பதி தேவஸ்தானம் பெரிய அளவில் உதவி செய்தபோதிலும், மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் உள்ள நகரத்தார்கள் மனமுவந்து வழங்கிய பணம் தான் இந்த மாபெரும் பணிக்கு அடித்தளமாக அமைந்தது.

இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்லுபவர்கள் அங்கு தங்களுடைய சமயத்தைப் பின்பற்றவும், கடவுளரை வழிபடவும் போதிய வாய்ப்பில்லாது அல்லற் படுகின்றனர். அங்கேயே பிறந்து வளரும் குழந்தைகளுக்கும் இந்து சமயமரபும், இந்தியாவின் பழைய பண்பாடும் சிறிதளாவாவது இருக்கவேண்டும். இதற்கு வேண்டிய வாய்ப்பை வழங்குவது இன்றியமையாதது ஆகும்.

இப்பொழுது நம்நாட்டினர் பலர் ஆப்பிரிக்காவில் உள்ள சுதந்திரம் பெற்ற நாடுகளிலும், மத்திய கிழக்கு நாடுகளிலும் பல தொழில்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். பள்ளிக்கூடங்களில், தொழிற்சாலைகளில், பிற நிறுவனங்களில் வேலைபார்த்து வருபவர்கள் இந்தியாவில் பெறுவதைப் போல பத்து, பதினைந்து மடங்கு சம்பளம் பெறுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு மன அமைதி கிடையாது, காரணம், அவர்களுடைய ஆன்மீகத் தேவைகளைத் திருப்தி செய்து கொள்வதற்கு வேண்டிய கோயில்களோ, மடங்களோ இல்லை. தென்கிழக்கு ஆசியாவில் வாழும் தமிழர்களுக்கு இத்தகைய குறைபாடு இல்லாதவாறு, நகரத்தார்கள் புதிய கோயில்கள் கட்டியும் பழைய கோயில்களைப் பழுது பார்த்துப் புதுப்பித்தும் சைவசமயக் கருத்துக்களைப் பரப்பியும் மேளக்காரர்களையும், தேவார ஓதுவார்களையும் அந்நாடுகளுக்கு இந்தியாவிலிருந்து வரவழைத்தும் செய்திருக்கும் பணி போற்றுதற்குரியது

தென்கிழக்கு ஆசியாவில் வாழுகின்ற செட்டியார் பலர் சிவபூசை செய்தும் வருகின்றனர். அநேகமாக

எல்லோருமே சைவசமய ஆச்சாரப்படி தங்களுடைய அன்ருட வாழ்க்கையை நடத்திவருகிருர்கள். அவர்கள் தொழில் செய்யும் இடங்களில் காலணிகளை உள்ளே எடுத்துச் செல்வதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் நகரத்தார்கள் கட்டியிருக்கும் கோயில்கள் நடுத்தரமானவை. தமிழ்நாட்டில் உள்ள கோயில்களை நோக்க இவை அளவில் பெரியவை அல்ல. அந்தக் கோயில்களில் ஆயிரக்கால் மண்டபங்களோ, நூற்றுக்கால் மண்டபங்களோ கிடையாது. ஆனல் அவை திராவிடக் கட்டிடக்கலைப் பாணியில் ராஜகோபுரங்களுடன் கவினுறவும் வண்ணப்பூச்சுடனும் கட்டப் பெற்றிருப்பதால் பார்வைக்கு அழகாக உள்ளன. அந்த நகரங்களுக்குப் பெருமை தருகின்றன; எழில் ஊட்டுகின்றன. அந்தக் கோயில்கள் நன்கு பேணப்பட்டு வருவதோடு சுத்தமாகவும் பக்தர்கள் மனத்தைக் கவரக் கூடிய வகையிலும் இருந்து வருகின்றன.

அந்தக் கோயில்கள் எல்லாம் 19-ஆம் நூற்ருண்டின் பிற்பகுதியில் கட்டப்பட்டவை. எனவே அவற்றைச் சமீப காலக் கோயில்கள் என்று சொல்லலாம். அவை பாடல் பெற்ற கோயில்களோ, புராணம் பெற்ற கோயில்களோ இல்லையென்ருலும் கடந்த சில ஆண்டுகளில் அவற்றிற்கு வருகை புரிந்திருக்கின்ற அறிஞர்கள் அவற்றைச் சிறப்பித்துப் பாடியுள்ளனர். இவ்வகையில் பர்மாவில் கம்பை சந்நிதிமுறை என்ற தோத்திரப்பாக்கள், திருப்போரூர் சந்நிதிமுறையைப் பின்பற்றிப் பாடப் பெற்றுள்ளன.

பெரும்பாலும் இந்தக் கோயில்களில் எல்லாம் உரிய ஊரில் வாழும் நகரத்தார் சமூகத்தின் பொது அமைப்பாகக் கட்டப்பட்டும், நிர்வாகம் செய்யப்பட்டும் வருகின்றன. இந்த விதிக்கு விலக்கும் உண்டு. சான்ருக இலங்கையில் கண்டிமாநகரில் உள்ள செல்வவிநாயகர் கோயிலைச் சுட்

டிக் காட்டலாம். இதைப்பற்றி இந்நூலில் பிறிதோரிடத்தில் விவரமாகக் கூறுவோம்.

கோயில்களுக்கு நகரத்தார்கள் விலைமிக்க நகைகளையும், வெள்ளித்தேர்களையும் செய்து வைத்திருக்கிறார்கள். நந்தவனங்கள் வைத்து நடத்தப்படுகின்றன. குருக்கள்களாக இருந்துவரும் பண்டாரங்கள் தவிர, தேவாரம் பாடுவதற்கு ஓதுவார்களும், நாதசுரம் வாசிப்பதற்கு இசை வாணர்களாகிய மேளக்காரர்களும் நியமிக்கப் பெற்றுள்ளனர்.

நகரத்தார்கள் மட்டுமே இந்த அறங்களுக்கு உரிய செலவுகளை ஏற்றுள்ளனர். கட்டளைகளும் அவர்களால் ஏற்படுத்தப்பட்டவையே. ஆனால் இறையருளால் உடல் நலம் பெற்றவர்களும், வளமான வாழ்வு வாழ்பவர்களும் தங்களுடைய நன்றியைத் தெரிவிக்கும் வகையில் இறைவனுக்குக் காணிக்கையாக பிற இனத்தவரும் பிற நாட்டினரும் கூட, தாங்களே வலிய உண்டியல்களில் சிறு தொகைகளைப் போடுகின்றனர்.

நகரத்தார்கள் கோயில் செலவுகளுக்காக மகமை செலுத்தும் பழக்கத்தையும் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். ஊருக்கு ஊர் இந்த ஏற்பாட்டில் மாறுதல்கள் இருக்கலாம். பொதுவாக, சொத்துக்களின் மதிப்பை இதில் கணக்கிடுவதில்லை. தொழிலில் போடப்பட்டிருக்கும் மூல தனத்துக்குத் தக்கவாறு நூறுரூபாய்க்கு ஐம்பதுபைசா வீதம் ஆண்டுதோறும் மகமை வழங்கும் பழக்கம், நிலவுவதாகத் தெரிகிறது.

ஒவ்வொரு திருவிழாவின் இறுதிநாளிலும் ஓர் ஏலம் நடைபெறும். அந்த ஏலத்தில் இறையருள் பெற்று காணிக்கையாகப் பக்தர்கள் வழங்கியுள்ள நகைகளும் பிற பொருள்களும் ஏலம் போடப் பெறும். ஒரு கும்பாபிஷேகத்தில் அல்லது ஒரு திருவிழாவில் பயன்படுத்தப்பட்ட

மஞ்சள், வெற்றிலை, எலுமிச்சம் பழம் முதலியவற்றை நகரத்தார்கள் மிகுதியான விலைக்கு வாங்குவார்கள். அந்தப் பொருளின் விலைக்கும் அவர்கள் கொடுத்து வாங்கும் தொகைக்கும் எவ்வித சம்பந்தமும் இராது. பக்திப் பெருக்கால், கோயில்களுக்குப் பெரும்பணம் சேரவேண்டுமென்ற எண்ணத்தால் இவ்வாறு ஏலத்தில் எடுப்பது மரபு.

இவ்வாறு மங்கலப் பொருள்களை ஏலத்தில் எடுப்பவர்கள், பொதுவாக வளமானவர்களாகவே இருப்பர். அவர்கள் போட்டி போட்டுக்கொண்டு இவ்வாறு எடுப்பதும் கண்கூடாகக் காணத்தக்கது. பலருடைய வாழ்வில் இது அவர்களுக்கு ஏற்படக்கூடிய வருங்கால ஏற்றத்திற்கு அறிகுறியாகவும் இருக்கிறது. இவ்வாறு ஏலத்தில் எடுப்பவர்கள் உரிய பொருள்களுக்குப் பணம் செலுத்தி, பக்தியுடனும் அச்சத்துடனும் அங்கே கூடியிருக்கின்ற நகரத்தார்களில் வயதால் மூத்தவரை வணங்குவதும் இறைவன், இறைவியரை வழிபடுவதும் வழக்கமாகும்.

கோயில்களை நிருவகிக்கும் பொறுப்பு அறங்காவலர்களுக்கு உண்டு. ஒவ்வொரு ஊரிலும் உள்ள நகரத்தார்கள் அறங்காவலர்களைத் தேர்ந்தெடுப்பதற்குச் சில வழிமுறைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதனால் அறங்காவலர் பதவி மாறி மாறி பல கிட்டங்கிகளுக்குக் கிடைக்கும். ஒவ்வொரு கிட்டங்கியிலும், மிகப்பழமையான அல்லது செல்வம் மிக்க கடைக்கே அறங்காவலர் பதவி கிடைப்பதும் உண்டு. புதிதாக வந்த கடைகள் அல்லது செல்வ வளம் குறைவாக உள்ள கடைகள் தங்களுக்கும் ஒரு தடவையாவது அறங்காவலர் பதவி வேண்டுமென்று கேட்பது உண்டு. கோயில் அறங்காவலராக இருப்பவர்கள் ஏராளமான கோயில் பணத்தைக் கையாள வேண்டியிருப்பதால் அவர்களிடம் கோயில் பொறுப்பை ஒப்புவிக்க, மற்றவர்கள் தயங்குவதும் உண்டு.

அத்தகைய சந்தர்ப்பங்களில், அறங்காவலர் பொறுப்பை ஏற்றுக்கொள்ள ஆவலாக இருப்பவர்கள், கோயில் பணத்துக்கு, பொறுப்பு அல்லது ஜாமீன் கொடுக்க முன்வருவதும் உண்டு.

சிலசமயம் ஒரு கிட்டங்கியில் அண்ணன் தம்பி இருவருக்கும் கடைகள் இருக்கக் கூடும். ஆனல் நகரத்தார் வழக்கப்படி ஒவ்வொரு தடவையும் அண்ணனுக்கே காரியத்தனம் (அறங்காவலர் பதவி) கிடைக்கும். தம்பிக்கு கிடைப்பதற்கு வாய்ப்பு இராது. இதனல் சில குடும்பங்களில் இளையவர் அடுத்த கிட்டங்கியில் ஒரு பெட்டியடியை விலைக்கு வாங்கி அதன் மூலமாகத் தம் ஆயுட்காலத்தில் ஒருதடவையாவது கோயிலில் அறங்காவலராக இருக்க முயலுவார்.

தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையத்துறை என்ற அரசாங்க அமைப்பு இருக்கிறது. கோயில்களின் நடைமுறையை மேற்பார்த்து வருவதோடு, கோயில் பணங்களைச் செலவு செய்வதிலும், சொத்துக்களை நிர்வகிப்பதிலும் ஒழுங்கீனம் நேராவண்ணம் தடுத்தும் இந்தத் துறை நல்லபணி செய்து வருகிறது. கடல் கடந்த நாடுகளில் இப்படிப்பட்ட அமைப்பு கிடையாது. ஆனல் நகரத்தார்கள் அனைவருமே கணக்குகளைச் சரிபார்த்தும், தவறு நேராதபடி கண்காணித்தும் வருகின்றனர். இந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர் யார்வேண்டுமென்றாலும், எப்போது வேண்டுமென்றாலும் கோயில் கணக்குகளைப் பார்வையிடலாம்.

நகரத்தார்களில் யாராவது ஒருவருடைய தொழில் சீர்கெட்டு, முறிந்து போகுமேயானல் எஞ்சியுள்ள சொத்துக்களை விற்று, கோயிலுக்குக் கொடுக்க வேண்டிய பாக்கிகளை முதலில் கொடுத்துவிடும் பழக்கமும் உண்டு. "சிவன் சொத்து குல நாசம்" என்பதை நகரத்தார்கள் நன்கு உணர்வார்கள்.

இந்தக் கோயில்களில் ஆண்டுதோறும் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. சீருடனும் சிறப்புடனும் பெருஞ் செலவுடனும் கொண்டாடப் பெறுகின்ற இந்தவிழாவில் தைப்பூசமும், ஆடிவேலும் மிகமுக்கியமானவை. சிங்கப் பூரும் பினங்கும், இரங்கூனும், செய்கோனும் தைப்பூசத் திருவிழாவால் புகழ்பெற்றவை. கொழும்பு மாநகரத்தில் நடைபெறும் ஆடிவேல் மிகவும் சிறப்பானது மட்டுமன்றி அதை ஒரு முறை பார்த்தவர்கள் வாழ்நாளில் மறக்க முடியாததும் ஆகும். இந்த விழாக்களில், இறையுருவத்தை நகரின் புறப் பகுதியில் ஓரிடத்துக்குத் திருஉலாவாக எடுத்துச் செல்லுவதும் உண்டு. இரங்கூனிலிருந்து பசு மந்தானுக்கும், கொழும்பிலிருந்து வெள்ளவத்தைக்கும், காலியிலிருந்து உனுவட்டுனேக்கும் இறைவுருவங்களை எடுத்துச் செல்லுவது வழக்கம். இந்த விழாக்களையொட்டி, ஏழைகளுக்கு நகரத்தார்கள் உணவு படைப்பார்கள். அவ்வாறு படைக்கும் போது, இந்துக்கள் அல்லாதார் என்ற வேறுபாடு காட்டாமல், எம்மதத்தினர்க்கும் உணவு படைப்பார்கள். நகரத்தார்கள் கோயில் தொடர்பாகச் செய்யும் எந்தச் செயலையும், பக்திசிரத்தையுடனும், நேர்மையுடனும், ஒழுங்கு முறையுடனும் நல்லெண்ணத்துடனும் செய்து வருகிறார்கள்.

பொதுவாக சுப்பிரமணியர் என்றும் முருகன் என்றும் வழங்கும் தமிழ்க் கடவுளுக்குக் கோயில் கட்டுவதிலேயே நகரத்தார் அக்கறை காட்டி வருகின்றனர். இந்த நாடுகளில் ஆகமப் பயிற்சி உடைய குருக்கள் கிடைப்பது மிக அரிதாகும். எனவே ஒரு சிவன் கோயிலை நடத்துவதை விட, சுப்பிரமணியர் கோயிலை நடத்துவது எளிதாகும். மேலும் சுப்பிரமணியருக்குக் கோயில் கட்டுவதற்கு முன்னர் அவருடைய படத்தை வைத்து எளியமுறையில் வழிபடலாம், அல்லது அவருடைய ஆயுதமாகிய வேல் ஒன்றை ஊன்றி அதற்கு வழிபாடுகள் செய்யலாம்



தண்டாயுதபாணி சுவாமி — கோலாலம்பூர்

CONNEMAR
17 APR 1979



சன்னசி ஆண்டவர் கோயில் — மாசிமகம்

கடல் கடந்த நாடுகளில் நகரத்தார்களுடைய சமுதாய வாழ்வு கோயில்களோடு பின்னிப் பிணைந்தது.

சமூகத்தைச் சேர்ந்த அனைவரும் கோயில்களில் தான் கூடி, பெருமக்களை வரவேற்பார்கள். தொழில் சம்பந்தமான பொது முடிவுகளைச் செய்வதற்கும் வட்டி விகிதங்களை நிர்ணயிக்கவும் கோயிலில்தான் கூட்டம் நடத்துவார்கள். இவ்வாறு நடத்தும் கூட்டங்களுக்குத் தலைவர் என்று ஒருவரையேனும் நியமிப்பதில்லை. காரணம் சுப்பிரமணியரை, நகரத்தார்கள் "செட்டி முருகன்" என்று உரிமையோடு அழைப்பதால் அவன் தலைமையிலேயே கூட்டத்தை நடத்துவதாகக் கருதுவர்.

விக்கிரகங்கள் யாவும் இந்தியாவிலிருந்து செய்து கடல் கடந்த நாடுகளுக்குக் கொண்டுபோய்ப் பிரதிட்டை செய்வதென்று, நகரத்தார் வழக்கப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். காஞ்சி காமகோடி பீடம் பெரியவர்களாகிய வணக்கத்திற்குரிய சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்களைப் போன்ற ஆதீன கர்த்தர்களின் கருத்துக்கு இணங்க, சிற்ப சாஸ்திர முறைப்படி அனுபவம் நிறைந்த ஸ்தபதிகளைக்கொண்டு இந்த விக்கிரகங்களைச் செய்வது வாழையடி வாழையாக இருந்துவரும் வழக்கமாகும்.

தமிழ் நாட்டில் கோயில் இருக்குமிடத்திலெல்லாம் ஒரு குளமும் இருக்கும். கோயிலுக்கும் குளத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் ஆயிரக்கணக்கான பிச்சைக்காரர்கள் இருப்பார்கள். கோயிலுக்குச் செல்லும் பக்தர்களிடம் சில்லறைக் காசுகள், தேங்காய் மூடி, பழம் முதலியவற்றைக் கேட்டு இவர்கள் கொடுக்கும் தொந்தரவுகள் சொல்லிமுடியாது. இத்தகைய விரும்பத்தகாத காட்சிகளை, தென்கிழக்கு ஆசியாவில் உள்ள கோயில்களில் காண இயலாது.

அந்த நாடுகளிலுள்ள கோயில்களில் சுத்தமான கிணறுகளும், தூய்மையான கழிவறைகளும், துப்புரவான குளியலறைகளும், தங்குதடையின்றித் தெளிவாகவரும் தண்ணீர்க் குழாய்களும் இருக்கின்றன. எனவே எல்லோரும் கோயில் வாயிலில் தங்கள் உடலைச் சுத்தப்படுத்திக் கொண்டு வழிபட இயலுகிறது.

இனி ஒவ்வொரு நாட்டிலும் இயங்கும் கோயில்களைப் பற்றிச் சில விவரங்களைக் கூறுவோம்.

# 3. இலங்கை

முத்தமிழால் வைதாரையும் வாழவைப்பவன் முருகன். எனவே நகரத்தார்கள் எங்கே சென்றாலும் முருகனுக்குக் கோயில் எடுப்பதிலேயே முன் நிற்பார்கள். இலங்கை நகரத்தார்கள், அவர்கள் அந்த நாட்டுக்குச் சென்ற கி. பி. 1820-ஆம் ஆண்டு முதல் கதிர் வேலாயுதக் கடவுளுக்குச் சிறப்புச் செய்து வருகின்றனர். கொழும்பு மாநகரிலும், இலங்கை எங்குமுள்ள சிற்றூர்களிலும் இதற்காக ஆலயங்கள் அமைத்துள்ளனர்.

கொழும்புச்செட்டியார் தெருவில் பழைய கதிர்வேலாயுத சாமி கோயிலும், புதிய கதிர் வேலாயுதசாமி கோயிலும் நகரத்தார்களால் கட்டப் பெற்றிருக்கின்றன. செட்டியார் தெரு என்பது இலங்கையில், அமெரிக்காவில் வால்ஸ்ட்ரீட் எனப்படும் தெருவைப் போலச் சிறப்புடையது. 150 ஆண்டுகளுக்கு மேலாக அரிசிவிற்பனை, நகை வியாபாரம், கொடுக்கல் வாங்கல் தொழில்கள் ஆகியவை இப்பகுதியில் சிறந்து விளங்கியதால், இலங்கையின் பொருளாதாரத்திற்கு செட்டியார் தெருவே அச்சாணியாக இருந்து வந்திருக்கிறது.

செட்டியார் தெருவில் உள்ள பழைய கதிரேசன் கோயில் 1820-அளவில் கட்டப்பெற்றது. இந்தக்கோயிலை நிருவகிப்பதற்குப் பலத்த போட்டி இருந்தது. தேவகோட்டை, ஒக்கூர் ஆகிய ஊர்களைச் சேர்ந்தவர்களின் ஆட்சியிலேயே இந்தக் கோயில் பெரும்பாலும் இருந்து வந்திருக்கிறது.

இந்தக் கோயிலின் ஆட்சியில் இடம்பெற இயலாமற் போனவர்கள் 1850 ஆம் ஆண்டில் ஒரு புதிய கோயில்

கட்ட முடிவு செய்தனர். இவர்கள் பெரும்பாலும் இரப்பர், தேயிலைத் தோட்டங்களுக்குத் தேவையான அரிசியை விற்பனை செய்தவர்கள் ஆவர். இவ்வாறு புதிதாகக் கொழும்புக்கு வந்து சேர்ந்தவர்கள் மட்டுமே இந்தக்கோயி லில் சேர்த்துக்கொள்ளப் பட்டார்கள். இதனால் இந்தக் கோயிலுக்குப் புதியகதிரேசன் கோயில் என்று பெயர் ஏற் பட்டது.

இரண்டு கோயில்களும் இணைந்தும் குழப்பமின்றியும் செயல்பட்டு வந்திருக்கின்றன. திருவிழாக்களை ஒரு கோயிலை விட மற்றொரு கோயில் இன்னும் சிறப்பாகச் செய்வதில் இரண்டு கோயில்களுக்கு மிடையே போட்டி வளர்ந்திருக்கிறது. இது வரவேற்கத்தக்க போட்டியே ஆகும்.

ஓர் ஆண்டுத் திருவிழாவைப் பழைய கோயிலாரும் அடுத்த ஆண்டுத் திருவிழாவைப் புதிய கோயிலாரும் என்று மாறி மாறி நடத்துகிறார்கள். பழைய கோயிலார் ஒரு மரத்தேர் செய்திருந்தார்கள். பின்னர் ஏற்பட்ட புதுக் கோயிலார் செல்வத்தில் புரண்டு, ஒன்றரை லட்சம் ரூபாய் செலவில் ஒரு வெள்ளித்தேர் செய்தார்கள்.

இரண்டு கோயில்களுக்குமே ஏராளமான நகைகளும் விலை மதிக்கமுடியாத இரத்தினக் கற்களும், நந்தவனங் களும் ஏராளமான சொத்துக்களும் உள்ளன.

இரண்டு கோயிலாரும் சேர்ந்து பேட்டைப் பகுதியில் உள்ள ஏனைய இந்துக் கோயில்களுக்கு ஆதரவு நல்குகின்றனர்; யாழ்ப்பாணத் தமிழர்கள், செட்டியார் தெருவில் சிறப்புடன் நடத்திவரும் விநாயகர் கோயிலில் ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் நகரத்தார்கள் (கோயில்கள் இரண்டும் சேர்ந்து) ஏழைகளுக்கு அன்னம் பாலிக்கிறார்கள்.

பெரி. செ. கு. என்ற நகரத்தார் குடும்பத்தார், செட்டியார் தெருவுக்கு அருகேயுள்ள மேட்டுத்தெரு சுப்பிரமணிய சுவாமி கோயிலில் ஏராளமான அறக்கட்டளைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

ஆடிவேல் திருவிழா, சாதி மத வேறுபாடு இன்றி இலங்கைவாழ்மக்கள் அனைவராலும் கொண்டாடப்பெற்று வருகிறது. செட்டியார்தெருவில் உள்ள நகரத்தார் கோயில்களுக்கு இதுதான் ஒவ்வொரு ஆண்டிலும் தலைமையான திருவிழாவாகும். இந்த நாட்கள், நகரத்தார் தொழில் நிறுவனங்களுக்கு விடுமுறைக் காலமாகும். ஆடிவேல் நாளன்று பேங்குகளும் சில அலுவலகங்களும் விடுமுறை விடுகின்றன.

கதிர் வேலாயுதக் கடவுளை வழிபட்டு வந்த நகரத்தார்கள் கதிர்காமத்தின் பெருமையை உணர்ந்தனர். அதன் விளைவாக ஒவ்வொரு ஆண்டும் ஆடித்திங்களில் முழுநிலா அன்று, நகரத்தார் ஒருவர் வேல் ஒன்றினைக் கதிர்காமத்தில் கொண்டு போய்ச் சேர்ப்பது வழக்கமாக இருந்து வருகிறது. இரண்டு வாரங்களுக்கு முன்னரே இந்த வேல் யாத்திரை தொடங்கிவிடும். இன்னிசைப் பல்லியங்கள் முழங்கக் கட்டியம் கூறிக்கொண்டு சிவநேயச் செல்வர்கள் புடைசூழ இந்தப் பாதயாத்திரை புறப்படும். காவடி எடுப்போரும் காணிக்கை செலுத்துவோரும் இதில் கலந்து கொள்வர். ஆடித் திங்கள் முழு நிலாவன்று, இவர்கள் கதிர்காமத்தை அடைவார்கள். அங்கே கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அய்யன் திருமுன்னர், வேல்கள், காவடிகள், காணிக்கைகள் ஆகியவற்றைச் செலுத்திய பிறகு அங்கிருந்து கொழும்புக்குத் திரும்புவார்கள். புனிதமான இந்த யாத்திரை நிறைவேற ஒரு மாதம் ஆகும்.

உலகப் போக்கிலும் காலவேகத்திலும் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் காரணமாக ஒவ்வோர் ஆண்டும் கதிர்காமம்

போய் வருவது எளிதில் இயலாததை உணர்ந்த பழைய கதிர் வேலாயுத சுவாமி கோயில் நகரத்தார்கள், கொழும்பையடுத்த பம்பலப்பிட்டி என்ற சுற்றுப்புறப் பகுதியில் ஓர் இடம் வாங்கினர். அங்கு ஓர் ஆலயம் அமைத்து அதற்கு உபய கதிர்காமம் எனப் பெயரிட்டு அழைக்கலாயினர். இதுபோலவே புதுக்கதிர் வேலாயுத சுவாமி கோயில் நகரத்தார்களும் வெள்ளவத்தையில் ஓர் இடம் வாங்கி ஆலயம் அமைத்தனர். அவர்களும் தங்கள் கோயிலை உபய கதிர்காமம் என்ற பெயரால் வழங்கினர்.

தொடக்கத்தில் கொழும்பிலிருந்து கதிர்காமத்தலத் திற்கு ஆடி நிறைமதிக்கு வேல்யாத்திரை சென்றது போல் இப் புதிய ஆலயங்கள் அமைந்த பின், பழைய கதிர் வேலாயுத சுவாமி பம்பலப்பிட்டி உபய கதிர்காமத்திற்கும் புதுக் கதிர் வேலாயுதசாமி வெள்ளவத்தை உபய கதிர் காமத்திற்கும் யாத்திரை சென்று வருவது வழக்கமாக இருந்து வருகிறது. ஆனால் பழைய புதிய இரு கதிர் வேலாயுத சுவாமிகளும் ஓர் ஆண்டிலேயே இந்த யாத்திரையை மேற் கொள்ளுவதில்லை. ஒவ்வோராண்டும் மாறி மாறி இரு கதிர் வேலாயுத சுவாமிகளும் இந்த வேல் யாத்திரையை மேற் கொள்ளுகிறார்கள்.

பழைய புதிய கதிர்வேலாயுத சுவாமிகள் முறை வைத்துக் கொண்டு மேற் கொள்ளும் இந்த விழா, வேல் விழா என்ற பெயரில் இலங்கையின் தேசியத் திருவிழா வாக நடைபெறுகிறது. இந்த வேல் விழாவை ஒரு களியாட்டம் என்றே கூறவேண்டும். ஒரு முறை வேல் விழாவைக் கண்டவர்கள் அந்தத் திருக்காட்சியைத் தங்கள் வாழ்வில் என்றும் மறக்க முடியாது. இலங்கை யில் இதைவிடச் சிறந்த திருவிழா வேறொன்றுமில்லை. நகரத்தார் பெண் மக்கள் பலர் இவ் விழாவைக் காண இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருவது 1950 வரை வழக்கமாக இருந்து வந்தது.

ஆடிப் பௌர்ணமி நாளன்று எந்தக் கோயிலில் அந்த ஆண்டில் விழா நடக்க இருக்கிறதோ அந்தக் கோயிலில் அன்பர்கள் வெள்ளம் போல் கூடுவர். அன்று நடக்கும் மகேசுவர பூசையும் அன்னதானமும் மிகச் சிறப்பாக இருக்கும். அதிகாலையில் செட்டியார் தெருவில் இன்னிசை முழங்கும். அதே சமயம் கதிர் வேலாயுதக் கடவுள் ஓராண்டு வெள்ளி இரதத்திலும் மறு ஆண்டு தங்கரதத்திலும் எழுந்தருளுவார். நகர்ப் புறத்தின் முக்கிய வீதிகள் வழியாகத் திருஉலாச் செல்லும். பேட்டையைத் தாண்டிக் கோட்டைப் பகுதிக்குள் சென்றவுடன் கூட்டம் பெருகி, திரு உலாவின் வேகம் குறையும். உபய கதிர்காமமாகிய பம்பலப்பிட்டி அல்லது வெள்ளவத்தையை அடைய அன்று மாலை ஆகிவிடும்.

மூன்று நாட்கள் உபய கதிர்காமத்தில் தங்கியிருந்து, பல்லாயிரக்கணக்கான பக்தர்களுக்குத் திருக் காட்சியளிக்கும் ஈசன் திருக்கோலங் கண்டு எண்ணம் நிறைவுற்ற அன்பர்கள் வயிறும் நிறைந்து அகங்களிப்பர்.

நான்காம் நாள் மாலை உபய கதிர்காமத்திலிருந்து புறப்பட்டு இரவெல்லாம் உலா நடத்தி ஐந்தாம் நாள் காலை தம் திருக்கோயிலுக்குத் திரும்பி வருவார் கதிர் வேலாயுத சுவாமி. இவ்வாறு நடைபெறும் திரு உலா, முன்னைய திரு உலாவை விடக் கவர்ச்சியாக இருக்கும். அப்போது இலங்கையின் தலைமை அமைச்சர் உள்பட அரசியல் தலைவர்களும், வெளி நாட்டுத் தூதுவர்களும், சிங்களப் பொது மக்களும் இதில் பங்கு கொள்வர். வேல் விழாக் காலத்தில் சைவ சமயத்தினர் மட்டுமல்லாது வேறு பல சமயத்தினரும் பக்தியுடன் வந்து ஈசன் திருக்கோலத்தை கண்ணாரக் கண்டு கசிந்துருகி நெஞ்சாரத் தொழுது காணிக்கையும் செலுத்திச் செல்லுவர்.

இரு கதிர் வேலாயுத சுவாமிகளுக்கும் தங்க வயிர நவரத்தின நகைகளும், வெள்ளி அங்கிகளும், கட்டிடங்

களும், தென்னந் தோப்புகளும், நந்தவனங்களும் தனித் தனியே இருக்கின்றன. இரு கோயில்களின் மொத்தச் சொத்து மதிப்பு ரூபாய் அறுபது லட்சமென்று 1963-இல் கொழும்பு செட்டியார் சேம்பர் ஆப் காமர்ஸ் மதிப்பிட்டது. கோயில்களுக்குச் சொந்தமான கட்டிடங்களில் உள்ள கடைகள் வாடகைக்கு விடப்பட்டுள்ளன.

1971-ஆம் ஆண்டில் இலங்கையில் அரசியல் நிலை குழப்பமாக இருந்தது. எங்கும் வன்முறை தாண்டவம் ஆடியது. எனவே ஆடி வேல் விழாவை நடத்துவதில்லை என்று நகரத்தார் முடிவு செய்திருந்தனர். ஆனால் ஆடி வேல் விழா வழக்கம்போல் நடத்தப்பெற வேண்டுமென்று அரசினர் வற்புறுத்தி நகரத்தார்களுக்கு வேண்டிய பாதுகாப்புக் கொடுக்க முன் வந்தார்கள். விழா அமைதியாகவும் செம்மையாகவும் கலவரமின்றியும் நடைபெற்றது.

**கதிர்காமம்**

கதிர்காமத் திருத்தலத்தில் நகரமடம் ஒன்று இருக்கிறது. அங்கு முதன் முதலாக ஏற்பட்ட மடம் இதுதான். ஆடிப் பௌர்ணமியன்று கதிர்காமத்து ஐயன் திருவிழா வரும் போது நகர மடத்தின் எதிரில் பூசை ஆராதனை முதலியன தொன்றுதொட்டு நிகழ்கின்றன.

கதிர்காமம் கொழும்பிலிருந்து 320 கி. மீ. தொலைவில் இருக்கிறது. இந்த வழியில், காலி, மாத்தறை, அம்பாந் தொட்டை, திசமாரகம் என்ற முக்கிய நகரங்கள் உள்ளன. கதிர்காம ஆண்டவனின் ஆலயம் மாணிக்க கங்கையின் கரையில் எழுப்பப்பட்டுள்ளது. புனிதமான இந்த ஆற்றில் நீராடிய பிறகுதான் கதிர்காம யாத்திரை தொடர்ந்து மேற்கொள்ளப்படும். கதிர் காமம் செல்லும் பயணிகள் கதிரமலைக்கும் விபூதிமலைக்கும் செல்வக் கதிர்

காமத்திற்கும் சென்று இறைவழிபாடு இயற்றுவார்கள். செல்வக்கதிர்காமம் அடர்ந்த காட்டின் இடையில் அமைந்துள்ளது. ஆகவே செல்வக் கதிர்காமத்திற்குச் செல்ல விரும்புவோர் விழாக் காலங்களில் தான் அதுவும் கூட்டமாகச் செல்லுவார்கள். ஒவ்வொரு சமயம் இவ்வழியில் யானை போன்ற காட்டு விலங்குகள் குறுக்கிடும். ஆனால் அரோகரா என்ற தெய்வ முழக்கம் கேட்டவுடன் அவை விலகிச் செல்லும். முருகன் திருவருளால் அடியார்கள் ஒரு காலும் வன விலங்குகளின் தொல்லைக்கு ஆளானதில்லை.

ஆடிப் பௌர்ணமிவிழா நாளில் கதிர் காமத்தில் மட்டுமல்லாது இலங்கை முழுவதும் அரோகரா முழக்கம் நிறைந்து ஒலிக்கும்.

1971 - மார்ச்சு மாதத்தில் இலங்கை அரசாங்கம் கதிர்காமத்தை ஒரு புனிதத் தலமாக அறிவித்து, அங்கேயிருந்த கடைகளையும் கட்டிடங்களையும் தரைமட்டமாக்கிற்று. இந்த நடவடிக்கையால் நகரமடமும் பாதிக்கப் பட்டது. மாணிக்க கங்கை ஆற்றின் தென் கிழக்குப் பகுதியில் நகரமடம் கட்டிக் கொள்ள இலங்கை அரசினர் இடம் ஒதுக்கியுள்ளனர். புதிதாக மடம் கட்டுவதற்கு நகரத்தார் தயங்குகின்றனர்.

### திருக்கேதீச்சுரம்

இராமன் சிவ வழிபாடாற்றிய தலம் இராமேச்சுரமானது. அதுபோலவே கேது, சிவ வழிபாடாற்றிய தலம் கேதீச்சுரமானது. இலங்கையிலேயே தேவாரப் பாடல்கள் பெற்ற தலங்கள் திருக்கேதீச்சுரம், திருக் கோணமலை என்ற இரண்டுமே.

திருக்கேதீச்சுரம், இலங்கையின் மேற்குக் கரையில், தலைமன்னாரிலிருந்து 32. கி. மீ தொலைவில் மாந்தோட்டம்

என்னும் ஊரில் உள்ளது. மாந்தோட்டம் என்பது இங்கிருந்த துறைமுகத்தின் பெயராகும். இலங்கைத் துறைமுகங்களில் கிரீஸ், ரோம் ஆகிய நாடுகளுடன், இந்தத் துறைமுகத்திற்கு மட்டுமே வணிகத் தொடர்பு இருந்து வந்தது. 17-ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கீசியர் இந்தக் கோயிலை அழித்தனர். இவ்வாறு தரைமட்டமாக்கப் பெற்ற புராதனக் கோயில் இருந்த இடம் 1893 அளவில் கண்டுபிடிக்கப்பட்டது. அப்போது போர்த்துக்கீசியர் ஆட்சிக்கு முன் பூஜிக்கப்பட்டு வந்த கணேச சிவலிங்க விக்கிரங்கள் வெளிக் கிளம்பின.

சேர். கந்தையா வைத்தியநாதன் என்ற பெருமகன் இலங்கை அரசில் வெளிநாட்டு அமைச்சுப் பொறுப்பை ஏற்றிருந்த அலுவலர். சைவப் பெரியாராகிய அவர் "திருக்கேதீஸ்வர வெளியீடுகள்" என்னும் நூலைத் தொகுத்துத் திருத்தி 1957-இல் பதிப்பித்தார். அந்நூலில் பின் வரும் தகவல்கள் உள்ளன.

"ஆரம்ப காலம் தொடங்கி யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் உள்ள நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் இவ்வாலயத்தில் ஊக்கம் எடுத்து உழைத்து வந்தனர். காலக் கிரமத்தில் கொழும்பில் இருக்கும் பழைய புதிய கதிரேசன் கோயில்களால் இக்கோயில் பரிபாலிக்கப்பட்டு வந்தது. இப்பொழுது திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச் சபையினரால் தெரிவு செய்யப்பட்ட பஞ்சாயத்தால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. சபையின் பிரமாணப்படி இப்பஞ்சாயத்தில் பழைய புதிய கதிரேசன் கோயில்களின் அவ்வப் போதைய பிரதிநிதிகள் இருவர் எப்பொழுதும் இடம் பெறுவர்."

பொதுவாக நகரத்தார்களும், குறிப்பாக திரு. பழனியப்ப செட்டியார் என்ற நகரத்தார் அன்பரும் திருக்கேதீச்சுரத்தில் செய்த பணிகளைப் பாராட்டி, 1893-ஆம்

ஆண்டு மார்கழி மாதம் 13 ஆம் தேதி 'இந்து சாதனம்' என்ற இதழ் பின்வரும் தகவலை வெளியிட்டது.

"நித்தியக் கருமம் முடித்துத் திருக்கேதீச்சுர நாதருடைய திருவடிகளைத் தியானித்துக் கொண்டு சைவர்களெல்லாரும் இன்றைக்கு 12 மணிக்கு முன் யாழ்ப்பாணக் கச்சேரியில் வந்து கூடினார்கள். இந்த விஷயத்தில் போல் வேறொன்றிலும், சைவர்கள் ஒற்றுமையுடையவர்களாய் திரளவில்லை. நாட்டுக் கோட்டைச் செட்டியார் சகலரும் அங்கு வந்தார்கள். 25 சதம் சம்பாதிக்கிற கூலிக்காரரர் தாமும் வந்தார்கள். பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கும் இந்த நாள் விடுதலை நாளாய் இருந்தது. எல்லாரும் ஒற்றுமையுடையவர்களாய் தங்கள் தங்களால் இயன்ற பொருளுபகரித்து நாட்டுக் கோட்டை நகரத்தாரையே சைவர்களுடைய உபயோகத்துக்காக அந் நிலத்தை வாங்கும்படி ஏற்பாடு செய்து கொண்டனர்.

"மதுரை, கொழும்பு முதலிய இடங்களில் உள்ள சைவர்களும் பணம் எவ்வளவானாலும் அனுப்ப ஆயத்தம் என்று தந்தி மூலம் அறிவித்தார்கள். இறுதியில் திரு. பழனியப்பச் செட்டியாருடைய கேள்விப்படி மூவாயிரத்தொரு நூறு ரூபாவாக மூன்றும் முறை கூறி அவருக்குக் கொடுக்கப்பட்டது. சுந்தரமூர்த்தி நாயனார் சுவாமிகள் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகத்தில் "பாலாவியின் கரை மேல் திடமாயுறைகின்றான் திருக்கேதீச்சரத் தானே" என்ற அருள்வாக்குப்படி அவரங்கே திடமாய் உறைகின்ற அந்த விசேடம் தான் இந் நிலம் இவ்வளவு சொற்ப விலையில் எமக்கு ஆக்கியது. அருள்வாக்கு ஒன்றும் பொய்ப்பதில்லை."

வித்துவ சிரோன்மணி ந. ச. பொன்னம்பலம் பிள்ளை அவர்கள் செய்த உரையோடு கூடிய திருக்கேதீச்சரத் தேவாரத் திருப்பதிகங்களும், திருக்கேதீச்சர மகிமை

என்னும் சிவ நூலும் சேர்ந்து 1935-இல் மீண்டும் அச்சிடப்பட்டபொழுது, நல்லூர் த. கைலாச பிள்ளை அவர்கள் எழுதிய முகவுரையில் பின்வருமாறு கூறியிருக்கிறார்கள்.

"இவ்வளவு பெருமை பெற்ற திருக்கேதீச்சரமானது இதற்கு முன் நானூறு ஐந்நூறு வருஷங்களிற் போலும் யாதோ காரணத்தால் கிலமாய் விட்டது. இதைப் புதுப்பிக்க விரும்பி, ஆங்கீரச ஆண்டு ஐப்பசி மீ (1872) நாவலரையா அவர்கள் ஒரு விஞ்ஞாபனம் வெளியிட்டார்கள். அது கண்டு அப்போது அதில் முயற்சித்தவர் அத் திருக்கேதீச்சரத்துக்கு சமீபத்திலுள்ள விடத்தற்றீவு என்னுமிடத்திலிருந்த வி. வேலுப்பிள்ளை என்பவர். ஐயா அவர்களுக்குப் பின் இ. இராமப்பிள்ளை வைத்தியர், வை. ஆறுமுகப்பிள்ளை, த. இராகவப்பிள்ளை முதலானோரும் சில நாட்டுக் கோட்டை நகரத்தாரும் இப்பணியைத் தலை மேற் கொண்டு புரிவாராயினர்."

1970-ஆம் ஆண்டில் ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டத்தைச் சேர்ந்த சுவாமி சரவணமுத்து அவர்கள் இந்நூலாசிரியர்க்கு (சோமலெ) எழுதிய கடிதத்தில் பின்வருமாறு தெரிவித்திருக்கிறார்கள் :-

"புதைந்து கிடந்து சின்ன பின்னமாக இக்கோயில் கிடந்த காட்டுப் பகுதியான 40 ஏக்கர் பரப்பை பகிரங்க ஏலத்தில் விலைக்கு வாங்க முன் வந்தவர் திருவாளர் ராம. அரு. பழனியப்பச் செட்டியார் என்ற நகரத்தாரே ஆவார். மேலும் நகரத்தார்கள் தான் காசி (வாரணசி) யிலிருந்து சிவலிங்கம் கொண்டு வந்து பிரதிட்டை செய்து 1903 ஆம் ஆண்டு சூன் மாதம் 28ஆம் நாளில் கும்பாபிஷேகம் செய்தார்கள். அதன்பின்னர் இக்கோயிலின் திருவாகம் மாதர்ப்பையில் தொழில் செய்த நகரத்தார்கள் வயப்பட்டது. அவர்கள் 1919-மார்ச்சு முதல் நாளில், கொழும்பிலுள்ள பழைய, புதிய கதிரேசன்

கோயில்களிடம் திருக்கேதீச்சரக் கோயிலின் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தனர். 1951 வரை இந்த நிலை இருந்து வந்தது. இந்த 32 ஆண்டுக் காலத்தில் நகரத்தார்கள் 80 ஏக்கர் பரப்புள்ள நெல் வயல்களையும், கட்டிடங்களையும் விலைக்கு வாங்கி இக்கோயிலுக்கு நன்கொடையாக வழங்கினர். கோயிலில் பணி செய்த குருக்கள்மார், கணக்குப்பிள்ளை, ஏவலாள் ஆகியோருடைய சம்பளங்களை நகரத்தாரே ஏற்றுக் கொண்டனர். பண்ணையில் பெரியதொரு கிணறு வெட்டி அதிலிருந்து பீலிகைகள் மூலம் கோயிலுக்குக் குடிதண்ணீர் வசதி செய்யப் பெற்றது.

1952 முதல் யாழ்பபாணத் தமிழ்ப் பெருமக்கள் ஒரு குழு நியமித்து இக்கோயிலை மேற்பார்வையிட்டு வருகின்றனர். இக்குழுவில் பழைய, புதிய கதிரேசன் கோயில்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படிருக்கிறது. நகரத்தார்களுக்கு முதல் மரியாதையும் இருந்து வருகிறது.

நகரத்தார்கள் இக்கோயில் நிருவாகத்தை ஏற்றுக் கொள்ளுமுன் திருக்கேதீச்சரம் ஒரு காடாக இருந்தது. அந்தக் காடும் கூட அயல்நாட்டினரும், அயல் மதத்தவருமான ஆங்கிலேயர் கையில் இருந்தது. 1951-இல் நகரத்தார்கள் நன்கு கட்டப்பபெற்ற ஒரு கோயிலையும், பத்துலட்சம் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களையும், யாழ்ப்பாணத் தமிழ்ப் பெருமக்களிடம் ஒப்படைத்தனர்.

யாத்திரை செல்லும் நகரத்தார்கள் தங்குவதற்கு திருக்கேதீச்சரத்தில் நகரத்தார் மடம் ஒன்று உள்ளது.

### நீர் கொழும்பு

இவ்வூர் நகரத்தார்களால் மாரியம்மன் கோயில் ஒன்று கட்டப் பெற்றுள்ளது. நாள்தோறும் பூசை முதலியன இடையருது நடைபெற்று வருகின்றன. நவராத்திரி விழா சிறப்பாக நடத்தப் பெறுகிறது. ஒரு

நந்தவனமும் இரண்டு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களும் கோயிலின் உடைமையாயுள்ளன.

## காலி

கதிர் வேலாயுத சுவாமி ஆலய மொன்றுள்ளது. காலியிலிருந்து 5 கி.மீ. தொலைவில் உணுவட்டுனை என்ற ஒரு சிற்றூரில் உடபய கதிர்காமக் கோயிலொன்று கட்டப் பெற்றுள்ளது. காலப் பூசைகள் செவ்வனே நடைபெற்று வருகின்றன. பத்து லட்சம் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் உள.

## இரத்தினபுரி

நவரத்தினங்களுக்குப் பெயர் பெற்ற ஊர் இது. இதையடுத்துள்ள திருஆணைக் கட்டியில் முருக பக்தர்களான நகரத்தார் வேலனுக்கோர் ஆலயம் அமைத்துள்ளனர். சிறப்பாக நடைபெறும் தைப்பூச விழாவன்று ஆண்டவன் இரத்தினபுரி வரை இரதத்தில் உலாவந்து செல்லுவது வழக்கம். ஓர் இலட்சம் ரூபாய் சொத்து உண்டு 1950 வரை தான் நகரத்தார்கள் இவ்வூரில் தொழில் செய்தனர். எனவே அந்த ஆண்டில் கோயிலையும் சொத்துக்களையும் உள்ளூர் இந்துக்களிடம் ஒப்பு வித்து அவர்களே நடத்திவர ஏற்பாடு செய்தனர்.

## கம்பளை

ஒன்றரை இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கு உரியது, இங்குள்ள கதிரேசன் ஆலயம். ஆண்டு தோறும் சிறப்புற நடைபெறுவது தைப்பூச விழா. தைப் பூச விழாவன்று, எவ்வளவு பேர் வந்தாலும் தங்கு தடையின்றி அன்னம் பாலிக்கப்படுகிறது. இலங்கையை விட்டுப் பெரும்பாலும் நகரத்தார்கள் வெளியேறி விட்டதால் நிலையான நிதியிலிருந்து கிடைக்கும் வட்டி முதலிய வருவாய்கள் குறைந்து விட்டன. இப்போது உண்டியல்

வருமானத்தைக் கொண்டுதான் கோயில் இயங்கி வருகிறது.

இவ்வூரிலும் சுற்றுப்புறத்திலும் வாழும் பல இனத்த வரும் இக்கோயிலில் பல திருவிழாக்களைத் தங்கள் உபய மாகச் செய்ய முன் வந்திருக்கிறார்கள். கோயிலார் வெளி யிடும் திருவிழாப் பட்டியலில் நன்கொடையாளர் பெயர் கள் குறிப்பிடப்படுகின்றன.

இக்கோயில் இறைவனைச் சிங்களவர்கள் "கதிர்காம தெய்யோ" (கதிர்காமத்துத் தெய்வம்) என்று வழிபடு கின்றனர். தைப்பூசம் சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது.

**காவலப்பிட்டி**

இங்குள்ள கதிரேசன் கோயிலுக்கு மூன்று இலட்சம் ரூபாய் சொத்து உள்ளது. பூசைகள் நன்ருக நடைபெற்று வருகின்றன. வாடகை வருமானத்தைக் கொண்டுதான் இக்கோயில் நடத்தப்பட்டு வருகிறது. 750 பேர் அமர்ந்து இருக்க வசதியான ஒரு மண்டபம் 1969-இல் கட்டப் பெற்றது.

**மாதம்பை**

இவ்வூரில் எப்பொழுதுமே நகரத்தார் கடைகள் மிகக் குறைவாகவே இருந்தன. பிள்ளையார் கோயில் அமைக்கப் பெற்று பூசைகள் செவ்வனே நடைபெற்று வருகின்றன. ஓர் இலட்சம் ரூபாய்ச் சொத்துக்கள் உண்டு.

**குருநாக்கல்**

கதிரேசன் கோயிலில் கால பூசைகள் முறையுற நடந்து வருகின்றன. பங்குனி உத்திர விழா சிறப்பு

மிக்கது. ஐந்து லட்ச ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் உண்டு. 1971-இல் பெரும்பாலும் நகரத்தார்களுடைய நன்கொடையைக் கொண்டு ஒரு இராஜகோபுரம் கட்டப் பெற்றது.

பாடுரா

இது மௌண்ட் லவினுவுக்கு அருகில் உள்ள சிற்றூர். தேவகோட்டை நகரத்தார் சிலர் இங்கு கதிர் காமத்து இறைவனுக்குக் கோயில் கட்டியிருக்கிறார்கள். உள்ளூர் மக்கள் காவடி எடுக்கின்றனர். இக்கோயிலைச் சுற்றி அங்கப் பிரதட்சணம் செய்கின்றனர்.

பூசலா

இங்கும் நகரத்தார் ஒரு கதிரேசன் கோயில் கட்டி யிருக்கிறார்கள். மாசிமகத் திருவிழா நடைபெறுகிறது. அன்று ஏழைகளுக்கு உணவு படைக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம்

1914 ஆம் ஆண்டில் முதல் உலகப் போர் தொடங் கும் வரை நகரத்தார்கள் யாழ்ப்பாணத்தில் பெரிய அளவில் தொழில் செய்தார்கள். இரங்கூன், அரிக்கன், நாகப்பட்டினம் ஆகிய துறைமுகங்களிலிருந்து யாழ்ப் பாணத்துக்குக கப்பல் கப்பலாக அரிசி வரவழைத்து வியாபாரம் செய்தனர். அந்நாளில் அவர்கள் கட்டிய சிவன் கோயில் வண்ணார் பொன்னையில் செட்டி சிவன் கோயில் என்ற பெயரில் இன்றும் திகழ்கிறது.

இந்நகரில் நகரத்தார் நிறுவியுள்ள கதிர் வேலாயுத சுவாமி ஆலயத்தில் சித்திரைத் திருவிழா மிகச் சிறப் புடன் நடைபெறுகிறது. ஏழு லட்சம் ரூபாய்ச் சொத்துக் கள் இருக்கின்றன.

முன்னீச்சுரம்

மாதம்பையிலிருந்து 11 கி. மீ. தொலைவில் உள்ளது. ஆவணி மாதப் பௌர்ணமி விழா ஆண்டு தோறும் முப்பது நாள் தேர்த் திருவிழாவாக நடைபெறுகிறது. விழாக் காலத்தில் நகர விடுதியில் அன்னதானம் நடைபெறுகிறது. நகர விடுதியின் மதிப்பு ஐம்பதாயிரம் ரூபாய் இருக்கும்.

கண்டி

கடல்சூழ் இலங்கையின் அழகு நகரமாக விளங்கும் கண்டி, இந்த நாட்டின் பழமையான தலைநகரம். இந் நகரம் புத்தருடைய பற்கோயில் கொண்டு பெரும்புகழ் பெற்றது.

இந்நகரின் புகழுக்கு ஏற்ப நகரத்தார்கள் ஒரு பெரிய கோயிலை இங்கே கட்டி இந்தியாவில் உள்ள தரும புரம் ஆதீனத்துக் கோயில்களைப் போல நடத்தி வருகிறார் கள். கோயில் நிர்வாகிகள் வெளியிடும் திருவிழாப் பட்டியலைப் பார்த்தால் மலைப்பாகவும் வியப்பாகவும் இருக்கும்.

இக்கோயிலின் பெயர் செல்வ விநாயகர் கோயில் என்பதாகும். இது 1800 ஆம் ஆண்டு அளவில் தேவ கோட்டை அரு லெ. சிவ. ந. குடும்பத்தாரால் கட்டப்பட்ட தாகச் சொல்லப்படுகிறது.

விநாயகர் தான் இங்கு வழிபடப்பெறும் பிரதான மூர்த்தி. மீனாட்சி சோமசுந்தரம் ஆகிய கடவுளர்க்கும் காளியம்மனுக்கும் தனித்தனிச் சந்நிதிகள் கட்டப் பெற் றிருக்கின்றன.

1940—ஆம் ஆண்டில் மேற்படி குடும்பத்தார் ஆறு லட்சம் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களைக் கோயிலுக்கு

வழங்கி விட்டு, தங்களுடைய தொழிலை முடித்துக் கொண்டு இலங்கையினின்றும் வெளியேறினர். ஆனால் அவர்கள் விட்டுச் சென்ற வீடுகளிலிருந்தும் 40 கடைகளி லிருந்தும் கிடைக்கும் வாடகை வருமானத்திலிருந்து அவர்களுடைய புகழ் என்றும் நின்று நிலவுகிறது. இக் கோயிலுக்கு ஆண்டுதோறும் ரூ 60,000 செலவு செய்யப் படுகிறது.

கண்டியிலிருந்து 5 கி.மீ. தொலைவில் வரலாற்றுச் சிறப்புமிக்க மாவெலி கங்கை என்ற ஆற்றின் கரையில் அமைந்துள்ள தென்னக்கும்பற என்ற இடத்தில் இக் கோயிலுக்குரிய நந்தவனங்களும் ஏழு ஏக்கர் பரப்புள்ள தென்னந் தோப்பும் சிறியதொரு விநாயகர் கோயிலும் உள்ளன. பங்குனி உத்திரத்தன்று செல்வ விநாயகர் கோயிலிலிருந்து மூன்று ரதங்களில் தென்னக்கும்பறவுக்கு இறையுருவங்கள் எழுந்தருளுகின்றன. இந்த ரதங்கள் யாவும் மேற்படி தேவகோட்டை நகரத்தார் குடும்பத் தாரால் வழங்கப் பெற்றவை. திருவிழாச் செலவுகளை மத்திய மாகாணத்து இந்துமாமன்றம் என்ற அமைப்பு ஏற்றுக் கொள்ளுகிறது.

இப்போது பண்டாரங்கள் ஐந்து பேரும் பிராமணக் குருக்கள் நான்கு பேரும் இக்கோயிலில் பணியாற்று கின்றனர்.

ஆடிமாதத்தில் புத்தர் பெருமானின் பற்கோயிலில் ஒருமாத காலத்திற்கு "பெரஹரா" என்ற பௌத்த சமய விழாவைக் கொண்டாடுவர். அந்தத் திருவிழாவின் கடைசி நாளில் பௌத்தசமயத்தார் மாவெலி கங்கைக்குச் சென்று செல்வவிநாயகர் கோயிலில் தேக்கி வைக்கப் பெற் றுள்ள ஆற்று நீரைக் கொண்டு வருவார்கள். புத்தர் பெரு மானின் பற்கோயில் அறங்காவலராக இருக்கும் "திசவ" என்ற பட்டம் உடைய பதினொரு பேரும் இந் நிகழ்ச்சிக் காகச் செல்வ விநாயகரை வழிபட்டு, கோயில் மரியாதை

களை ஏற்ற பின்னர் யானை மீது அமர்ந்து பற்கோயிலுக்கு ஊர்வலமாகத் திரும்புவார்கள்.

சிங்களவர்களும் முஸ்லிம்களும் செல்வ விநாயகர் கோயிலில் வழிபடுவது நாள் தோறும் காணத்தக்க காட்சி ஆகும்.

## திருக்கோணமலை

காலி நகரத்தார்கள் திருக்கோணமலையில் உள்ள பாடல்பெற்ற கோயிலுக்கு, பெரியதொரு வெள்ளித் தேரை வழங்கியுள்ளனர்.

## சிவனடிபாதம்

நகரத்தார் பலர் இம்மலைப் பகுதிக்குச் சென்று இங்குள்ள சிவன் கோயிலில் வழிபட்டு, காணிக்கை செலுத்தி சூரியோதத்தையும் சூரிய அஸ்தமனத்தையும் வணங்குகின்றனர்.

## துறவிகள் வருகை

இந்தியாவிலிருந்து துறவிகளையும், சைவ சித்தாந்த அறிஞர்களையும் நகரத்தார்கள் இலங்கைக்கு வரவழைத்து சைவசமயச் சொற்பொழிவுகளை, பெரிய அளவில் ஏற்பாடு செய்திருக்கின்றனர். இவ்வகையில் இவர்கள் செய்திருக்கும் பணிகளைச் சைவ பரிபாலன சங்கத்தாரும், யாழ்ப்பாணத் தமிழ் அறிஞர்களும், ஏனையோரும் பெரிதும் பாராட்டியுள்ளனர்.

# கண்டி ஸ்ரீ செல்வ விநாயகர் கோவில்
# மீனாட்சி அம்பிகா சமேத சோமசுந்தரேஸ்வர சுவாமி
# விரோதிகிருது வருஷ விஷேஷாதிகள் 1971 – 1972

| தமிழ் மீ | வ | ஆங்கில மீ | வ | விஷயம் | உபயம் |
|---|---|---|---|---|---|
| சித்தி | 1 | ஏப் | 14 | விரோதிகிருது வருஷப்பிறப்பு | க. குமாரசாமி |
| | 6 | | 19 | நடேசர் அபிஷேகம் | நந்தன் அச்சகம் |
| | 9 | | 22 | பிரதோஷம் | கோவில் |
| | 24 | மே | 7 | ,, | ,, |
| | 27 | | 10 | சித்திரைப் பௌர்ணமி | ஆதப்பச் செட்டியார் |
| வை | 8 | | 22 | பிரதோஷம் | கோவில் |
| | 23 | ஜூன் | 6 | ,, | ,, |
| | 24 | | 7 | வைகாசி விசாகம் | வீரையா பிள்ளை |
| ஆனி | 6 | | 20 | பிரதோஷம் | கோவில் |
| | 16 | | 30 | நடேசர் அபிஷேகம் ஆனி உத்தரம் | ராமகிருஷ்ணஸ் |
| | 22 | ஜூலை | 6 | பிரதோஷம் | கோவில் |
| ஆடி | 3 | | 19 | ,, | ,, |

| தமிழ் மீ | உ | ஆங்கில மீ | உ | விஷயம் | உபயம் |
| --- | --- | --- | --- | --- | --- |
| | 19 | ஆக | 4 | ,, | கோவில் |
| ஆவ | 1 | | 18 | ,, | ,, |
| | 8 | | 24 | விநாயக சதுர்த்தி | முத்துக்குமார் |
| | 18 | செப் | 3 | நடேசர் அபிஷேகம் | செல்வன் கபே |
| | 31 | | 16 | பிரதோஷம் | கோவில் |
| புர | 4 | | 20 | நவராத்திரி ஆரம்பம் | கோ. ஆறுமுகம் |
| | 5 | | 21 | ,, 2-ம் நாள் | பெ. நடேச பிள்ளை |
| | 6 | | 22 | ,, 3-ம் நாள் | வி. டி. செல்ல துரை |
| | 7 | | 23 | ,, 4-ம் நாள் | க. நடேசன் |
| | 8 | | 24 | ,, 5-ம் நாள் | எம். பி. முத்தையா |
| | 9 | | 25 | ,, 6-ம் நாள் | அ. துரைசாமிப் பிள்ளை |
| | 10 | | 26 | ,, 7-ம் நாள் | எம். தியாகராஜா, சுப்பையா |
| | 11 | | 27 | ,, 8-ம் நாள் | ஆறுமுக நம்பி |
| | 12 | | 28 | சரஸ்வதி பூஜை 9-ம் நாள் | நெஷனல் டிரேடிங் கார்ப்பரேஷன் |
| | 13 | | 29 | மானம்பூ, விஜயதசமி 10-ம் நாள் | எம். சிவஞானம் |
| | 14 | | 30 | திருவோணம் | மாவிலை சின்னையா கங்காணி |
| | 16 | அக் | 2 | பிரதோஷம் | கோவில் |
| | 17 | | 3 | நடேசர் அபிஷேகம் | டி. எஸ். பாலசுப்பிரமணியம் |

| தமிழ் மீ | வ | ஆங்கில மீ | வ | விஷயம் | உபயம் |
|---|---|---|---|---|---|
| | 30 | | 16 | பிரதோஷம் | கோவில் |
| | | | | புரட்டாசி கடைசி சனி | எஸ். பி. கே. சுப்பையா பிள்ளை |
| ஐப். | 1 | | 18 | தீபாவளி | கோவில் |
| | 3 | | 20 | கந்தசஷ்டி ஆரம்பம் | க. மருதாயி அம்மாள் |
| | 4 | | 21 | ,, 2-ம் நாள் | ஆசாரிமார் |
| | 5 | | 22 | ,, 3-ம் நாள் | ஜனதா கார்ப்பரேசன் |
| | 6 | | 23 | ,, 4-ம் நாள் | முத்தம்மாள் |
| | 7 | | 24 | ,, 5-ம் நாள் | சேனைத் தலைவர் |
| | 8 | | 25 | சூரன் போர் 6-ம் நாள் | இரட்ணராஜா |
| | 9 | | 26 | திருக்கல்யாணம் | வைத்திலிங்கம் பிள்ளை, ராமசாமிப் பிள்ளை |
| | 14 | | 31 | பிரதோஷம் | கோவில் |
| | 29 | நவம் | 15 | ,, | ,, |
| கார் | 6 | | 22 | சோமவாரம் | ஆர். எம். நாகலிங்கம் |
| | 13 | | 29 | ,, | எஸ். ஆர். சாமி அன் கோ |
| | 14 | | 30 | பிரதோஷம் | கோவில் |
| | 15 | டிசம் | 1 | திருக்கார்த்திகை தீபம் | ராஜா ஸ்டோர்ஸ் |
| | 20 | | 6 | சோமவாரம் | ஸ்ரீ'லங்கா பார்மஸி |
| | 27 | | 13 | ,, | அ. சு. ப, கடை |

| தமிழ் மீ | உ | ஆங்கில மீ | உ | விஷயம் | உபயம் |
|---|---|---|---|---|---|
| | 29 | | 15 | பிரதோஷம் | கோவில் |
| மார் | 1 | | 16 | காலை 5-30 தனுமாத பூஜாரம்பம் | ,, |
| | 8 | | 23 | திருவெம்பாவை ஆரம்பம் | ,, |
| | 14 | | 29 | பிரதோஷம் | ,, |
| **1972** | | | | | |
| | 17 | ஜன | 1 | நடேசர் ஆருத்ரா அபிஷேகம் | பனையகாட் கம்பெனி |
| | 29 | | 13 | பிரதோஷம் | கோவில் |
| தை | 1 | | 15 | தைப்பொங்கல் | ,, |
| | 14 | | 28 | பிரதோஷம் | ,, |
| | 16 | | 30 | தைப்பூசம் | சின்னத்துரை |
| | 21 | பெப் | 4 | அஸ்தநட்சத்திர சகஸ்ர சங்காபிஷேகம் | பாலகிருஷ்ணு ஸ்டோர்ஸ் |
| | 29 | | 12 | பிரதோஷம் | கோவில் |
| மாசி | 1 | | 13 | மஹா சிவராத்திரி | கணேசானந்த பவான் |
| | 14 | | 26 | பிரதோஷம் | கோவில் |
| | 15 | | 27 | நடேசர் அபிஷேகம் | சந்திரா கிரைண்டிங் மில் |
| | 16 | | 28 | மாசிமகம் | கே ரட்ணவேல் |
| | 30 | மார் | 13 | பிரதோஷம் | கோவில் |

| தமிழ் மீ | தமிழ் வ | ஆங்கில மீ | ஆங்கில வ | விஷயம் |
|---|---|---|---|---|
| பங் | 2 | | 15 | காளியம்மன் திருவிழா |
| | 6 | | 19 | உற்சவகர்மாரம்பம் |
| | 7 | | 20 | கொடியேற்றம் 1-ம் திருவிழா |
| | 8 | | 21 | 2-ம் திருவிழா |
| | 9 | | 22 | 3-ம் திருவிழா |
| | 10 | | 23 | 4-ம் திருவிழா |
| | 11 | | 24 | 5-ம் ,, |
| | 12 | | 25 | 6-ம் ,, |
| | 13 | | 26 | 7-ம் ,, |
| | 14 | | 27 | 8-ம் ,, பிரதோஷம் |
| | 15 | | 28 | தேர்த் ,, |
| | 16 | | 29 | தீர்த்தம், புஷ்ப பல்லக்கு |
| | 17 | | 30 | திருக்கல்யாணம் |
| | 29 | ஏப் | 11 | பிரதோஷம் |

உபயம்

கந்தசாமி செட்டியார் கோவில்
,,
ராஜப்பிரியர், பழனியாண்டிப்பிள்ளை
மாரிக் கங்காணியார்
நாச்சியப்ப செட்டியார்
திருவிழங்க நகரத்தார்
அறந்தாங்கி நாட்டார்
சமையற்காரப் பிள்ளைகள்
அண்ணாமலைத் தேவர்
ம. மா. இந்துமா மன்றம்
வை சி. சி கு. கடை
அசோகா மாணவர் ஹாஸ்டல் கோவில்

கோவில் காரியாலயம்,
கண்டி. போன்: 7677

**வ. சாத்தப்ப செட்டியார்**
டிரஸ்டி.

உ

சிவமயம்



# கம்பளை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில்

# விரோதிகிருது வருட உபயங்கள் 1971 - 1972

| தமிழ்த் திகதி | | உபயங்கள் | உபயகாரர்கள் |
|---|---|---|---|
| சித்திரை | 1 | விரோதிகிருது வருஷப் பிறப்பு | ந. ரா. பெ. வே. |
| ,, | 13 | கார்த்திகை | செலக் சன்ஸ் |
| ,, | 27 | சித்திரா பூரணை | செ. கரு. கருப்பபிள்ளை சன்ஸ், செ. பெ. செல்லமுத்துப்பிள்ளை |
| வைகாசி | 10 | கார்த்திகை | R.M.நடராஜாபிள்ளை V.R.M.V.A. |
| ,, | 24 | வைகாசி விசாகம் | வ. பழ. வ. |
| ஆனி | 6 | கார்த்திகை | ஜயலட்சுமி ஸ்டோாஸ் |

| தமிழ்த் திகதி | | உபயங்கள் | உபயகாரர்கள் |
|---|---|---|---|
| ஆடி | 1 | கார்த்திகை | சபா பீடி இண்டஸ்ரீஸ் |
| ,, | 18 | 18ம் பெருக்கு | நடராஜா அன் கோ |
| ,, | 29 | கார்த்திகை | கணபதி கார்ப்பரேஷன் |
| ஆவணி | 8 | விநாயக சதுர்த்தி | நூர்ஜஹான் அன் கோ. |
| ,, | 12 | வருஷாபிஷேகம் | பொ ர. வைத்தியலிங்கம் பிள்ளை |
| | | காலை: 1008 சங்காபிஷேகம் | |
| | | பகல்: அன்ன தானம் | |
| | | இரவு: சுவாமி வெளி வீதி வருதல் | |
| ,, | 25 | கார்த்திகை | பொ.ரெங்கநாதபிள்ளை, அப்பர்சீனுப்பிட்டி |
| புரட்டாசி | 13 | மஹர் நோம்பு (விஜய தசமி) | பெரி. மு. கருப்பையாபிள்ளை, ரம்பொடை |
| ,, | 21 | கார்த்திகை | ராஜேந்திரா டெக்ஸ்டைல்ஸ், கொழும்பு |
| ஐப்பசி | 3 | ஸ்கந்த ஷஷ்டி உற்சவாரம்பம் | வ. பழ வ. |
| ,, | 4 | ,, ,, உற்சவம் | மு. ரெங்கராஜ், சிட்டி லாட்ஜ் |
| ,, | 5 | ,, ,, உற்சவம் | எம். அரவாண்டியா பிள்ளை |
| ,, | 6 | ,, ,, உற்சவம் | மூ. தங்கவேல் பிள்ளை அன் கோ. |
| ,, | 7 | ,, ,, உற்சவம் | லங்கா சர்வீஸ் ஸ்டேசன் |
| ,, | 8 | சூரசம்ஹார உற்சவம் | கணக்கப்பிள்ளைகள் |
| ,, | 9 | திருக்கல்யாண உற்சவம் | வே. அண்ணாமலை, ஓர்வெல் |
| ,, | 10 | மஞ்சநீர் உற்சவும் | சி. மு. சு. பொன்னையா, ஸ்டோர் பீல்ட் |

| தமிழ்த் திகதி | | உபயங்கள் | உபயகாரர்கள் |
|---|---|---|---|
| ஐப் | 18 | கார்த்திகை | நடராஜாஸ் |
| கார்த்திகை | 6 | கார்த்திகை சோமவாரம் | ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ், வட்டதெனிய |
| ,, | 13 | ,, ,, | ஆ. சி. நாகலிங்கம் பிள்ளை அன் கோ |
| ,, | 15 | திருக்கார்த்திகை உற்சவம் | மு. சுப. சுப்பிரமணியம் செட்டியார் |
| ,, | 20 | கார்த்திகை சோமவாரம் | லங்கா மெடிக்கல்ஸ் |
| ,, | 27 | ,, ,, | சி. பாலுசாமி |
| மார்கழி | 13 | கார்த்திகை | மு. அரப்பளியா பிள்ளை |
| ,, | 17 | ஆருத்ரா தரிசனம் | நடராஜா கார்ப்பரேசன் |
| தை | 1 | தைப் பொங்கல் | சரஸ்வதி ஸ்டோர்ஸ் |
| ,, | 11 | கார்த்திகை | ஸ்ரீ சந்திரா ஸ்டோர்ஸ் |
| ,, | 15 | தைப்பூச உற்சவாரம்பம் இரவு சுவாமி வெளி வீதி வருதல் | மு. வேலாயுதம் பிள்ளை |
| ,, | 16 | தைப்பூசம் (மஹேஸ்வர பூஜை) | நகரத்தார் |
| ,, | 17 | பட்டுச் சாத்துதல் | நகரத்தார் |
| | | உற்சவம், இரவு சுவாமி வெளி வீதி வருதல் | நா. செல்லையாபிள்ளை, மைல்ஸ்டோரஸ் |
| ,, | 28 | இடும்பன் பூஜை | நகரத்தார் |
| மாசி | 1 | மஹா சிவராத்திரி | அ. சிதம்பரம்பிள்ளை, வெளியங்கந்தை |
| ,, | 9 | கார்த்திகை | அம்பிகா ஸ்டோர்ஸ் |

| தமிழ்த் திகதி | | உபயங்கள் | உபயகாரர்கள் |
|---|---|---|---|
| பங்குனி | 6 | கார்த்திகை | க. நடேசன் ஆசாரியார் |
| ,, | 16 | பங்குனி உத்தரம் | பொரா. வைத்தியலிங்கம் பிள்ளை |
| பரிதாபி வருஷம் | | | |
| சித்திரை | 1 | பரிதாபி வருஷப் பிறப்பு | ந. ரா. பெ. வே. |

கம்பளை,
8—4—71.

இங்ஙனம்,
**நகரத்தார், கம்பளை.**

# 4. பங்களா தேஷ்

நகரத்தார்களுக்கு உரிய ஒரு கோயில் அரிக்கனில் இருந்தது. ஆங்கிலத்தில் அக்யாப் என்ற பெயரால் வழங்கும் இவ்வூர் பர்மாவின் எல்லையில், பங்களாதேஷ் நாட்டில் இப்போது இருக்கிறது. கதிரேசன் கோயில் என்ற பெயருடைய இந்த ஆலயம், ஆற்றுத் துறைமுகத்திலிருந்து 200 மீட்டர் தொலைவில் உள்ளது.

19-ஆம் நூற்றுண்டின் தொடக்கம் முதல் அரிக்கன் அரிசி வியாபாரத்திலும் கொடுக்கல் வாங்கல் தொழிலிலும் புகழ்பெற்றது. தஞ்சாவூர் அரிசி, பர்மிய அரிசி ஆகியவை இங்கு வரவழைக்கபெற்று, இங்கிருந்து பற்ருக் குறைப் பகுதிகளான இன்றைய மேற்கு வங்காளம், பங்களாதேஷ் மற்றும் வடஇந்தியப் பகுதிகளுக்கும் இலங்கைக்கும் தனிக் கப்பல்களில் அனுப்பப்பட்டன. இந்த வியாபாரத்தில் நகரத்தார்களின் கடைகள் 30 க்குமேல் ஈடுப்பட்டன. எல்லாக் கடைகளும் ஒரே கட்டிடத்தில், முதல் மாடியில் தங்கள் அலுவலகங்களை வைத்துக்கொண்டிருந்தன இந்தப் பெரிய மாளிகையின் கீழ்த் தளத்தில் கோயில் இருக்கிறது.

அரிக்கனில் பெரிய திருவிழாவாக மாசிமகம் கொண்டாடப்பட்டது. அங்கிருந்து 9 கி. மீ. தொலைவிலுள்ள தமாகே என்ற ஊருக்கு கதிரேசக் கடவுளின் உருவம் சிறியதொரு வெள்ளித் தேரில் எடுத்துக் செல்லப் பெற்றது.

அரிக்கன் அரிசிக் கடைக்காரர்கள் செல்வத்தில் புரண்டனர் என்பதற்கு ஒரு சான்று கூறலாம். எல்லாக் கடைகளும் தேவைப் பட்டபோது, தனிக் கப்பல்களை

வாடகைக்கு எடுத்துக் கொண்டன. சில கடைகளுக்குச் சொந்தக் கப்பல்களே இருந்தன. கப்பல்கள் போவது வருவது பற்றி, தங்கள் கிளைகளுக்கு இவர்கள் தந்தியடித்த வண்ணமாக இருந்தனர். இத்தகைய பெரிய கடைகளில் ஒன்று நேமத்தான் பட்டி மெ. மெ. பழ. கடை. இந்தக் கடை முதலாளியை அரிக்கன் பழநியப்ப செட்டியார் என்று அனைவரும் குறிப்பிட்டுவந்தனர். செட்டிநாட்டவர் மூன்று நான்குபேர் எங்கேயோ சென்று கொண்டிருந்த போது தந்திக் கம்பிகளின் ஆட்டத்தைக் கண்டதும் அரிக்கன் பழநியப்பா அலறுதடா உன் தந்தி என்று தொடங்கி ஒரு நாட்டுப்பாடல் பாடினராம்.

இந்தக் குடும்பத்தார்தான் புதுக்கோட்டை மாவட்டம் விராலி மலையில் மலைமீது சுப்பிரமணியருக்குக் கட்டப் பட்டிருக்கும் கோயிலை அழகாகவும் விரிவாகவும் புதுப் பித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அரிக்கன் நகரத்தார்கள் சட்டிகாமம் (சிட்டகாங்) என்ற துறைமுக நகரில் ஒரு சத்திரமும் கோயிலும் கட்டி, அவற்றையும் நடத்தி வந்தனர்.

# 5. பர்மா

1850முதல் இரண்டாம் உலகப்போர் ஆசியாவுக்குப் பரவிய 1941 வரை நகரத்தார்கள் வேறு எந்த நாட்டையும் விட பர்மாவில்தான் கூடுதலாக முதலீடு செய்தனர். இதற்குத் தக்கவாறு இந்த நாட்டில் தான் நகரத்தார் கோயில்களின் எண்ணிக்கையும் மிகுதியாக இருந்தது. 62 ஊர்களில் முருகனுக்குக் கோயில்களையும் ஒரு பெருமாள் கோயிலையும் நடத்தி வந்தனர்

ஆசிய நாடுகளிடையே பர்மா சீரும் சிறப்புமாக இருப்பதற்கு அதன் ஏற்றுமதி முக்கிய காரணமாகும். ஆசிய மக்களுக்கு இன்றியமையாத உணவாகிய அரிசியை அயல் நாட்டாருக்கு அளிக்கும் வாய்ப்பு அதற்குக் கிடைத்துள்ளது. அதை, தங்கள் மூலதனத்தையும் பாட்டாளி மக்களின் உழைப்பையும் கொண்டுவந்து நிறைவேற்றிய பெருமை நகரத்தார்களைச் சேரும்.

'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்னும் முதுமொழிக்கிணங்க நகரத்தார்கள் 19-ஆம் நூற்றுண்டின் முற்பகுதியில் கல்கத்தாவில் வியாபாரம் செய்த தொடர்பால் அங்கிருந்து பாய்மரக் கப்பல்களில் பர்மாவுக்குப் போயினர். ஆங்கிலேயர்கள் பர்மாவை முற்றிலும் தங்களின் ஆட்சியின்கீழ்க் கொண்டு வந்த பிறகு பர்மாவில் நிலையாக வாழ்ந்ததும், கீழ் பர்மாவில் உள்ள சதுப்பு நிலங்களை வேளாண்மை செய்ய மூலதனம் கொடுக்க முற்பட்டனர்.

முதலில் மோல்மீனில் குடியேறினர். நாளடைவில் பர்மா நாடெங்கும் சின்னஞ்சிறு ஊர்களிலும் பரவி தங்கள்


கொடுக்கல் வாங்கல் தொழிலை அந்நாட்டின் முன்னேற்றத்திற்கு உகந்த வகையில் செய்துவந்தனர். பெரும்பாலான நிலங்கள் நகரத்தார்களின் உதவியால் வேளாண்மைக்குக் கொண்டு வரப்பெற்றன.

பர்மாவில் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்கம் 1923-இல் தோன்றியது. பர்மாவில் தொழில் செய்யும் எல்லா நாட்டுக்கோட்டைச் செட்டியார்களும் உறுப்பினராயினர். ஏறத்தாழ 150ஊர்களில் 1250 கடைகள் வரை இருந்தன.

சிவ தலங்களிலெல்லாம் தலைமைத் தலமாக விளங்கும் காசி விசுவநாதர் கோயிலில் திருவனந்தல், உச்சிக்காலம், அர்த்தசாமம் ஆகிய முக்கிய வழிபாடுகள் நடைபெறுவதற்கான ஏற்பாட்டைச் செய்து அதற்குத் தேவையான பணங்களை வழங்கியவர்கள் பர்மா நகரத்தார்களே ஆவார்கள். இதற்காக ஸ்ரீ காசி நாட்டுகோட்டை நகரச் சத்திரம் மானேஜிங் சொசைட்டி என்ற சபையை 1934-இல் இரங்கூனில் அமைத்தனர். 1962 வரை இச்சபை இயங்கிற்று. பிறகு அதன் சொத்துக்களும் பொறுப்புக்களும் காரைக்குடியில் தலைமை அலுவலகம் வைத்து இயங்கும் குழுவுக்கு மாற்றப்பெற்றன.


பர்மா நகரத்தார்கள் ஆண்டுதோறும் தைப்பூச நாளில் மகமை வசூலித்து, மேற்கண்ட ஸ்ரீ காசி நாட்டுக் கோட்டை நகரச் சத்திரம் மானேஜிங் சொசைட்டிக்கு வழங்கினர். அந்தப் பணங்களை அடித்தளமாகக் கொண்டு தான், இன்றைய காசி முதலிய வடஇந்தியச் சத்திரங்கள் விரிவான நிலையில் நடைபெறத் தொடங்கின.

1933-இல் பர்மா நகரத்தார் சங்கத்தின் செயற்குழு கூடி, அந்த நாட்டில் நகரத்தார்கள் நடத்திவந்த எல்லாக் கோயில்களையும் ஹரிஜனங்களுக்குத் திறந்து விடுவது என்று முடிவு செய்தது.



ஆறறை — ரெங்கூன்

PUBLIC LIBRARY



தண்டாயுதபாணி கோயில் — பசுமந்தான்

பர்மாவில் நகரத்தார்களின் அன்றாட வாழ்வு, பக்தியுடன் கூடியதாக, கடவுட் பற்றுடன் இரண்டறக் கலந்ததாக இருந்தது அவர்களுடைய கோயில் விழாக்களையும் புறத்தோற்றங்களாகிய சிவ சின்னங்களையும் கண்ட பர்மியர் நகரத்தார்களின் இயல்புகளில் மயங்கி மரியாதை காட்டினர்.

நகரத்தார் கோயில்கள் 62 எனினும், நகரத்தார் தொழில் செய்த பல சிற்றூர்களில் கோயில்கள் இல்லை. எனவே, சில கோயில்கள் பல ஊர்களில் வாழ்ந்த நகரத்தார்களுக்குப் பொதுவாக அமைக்கப்பட்டன. சான்றாக பக்கோ மாவட்டத்து நவுலியப்பன் என்ற ஊரில் இருந்த கோயில் தோபி, பைஞ்சுலோ, சருட்டக்கா, சூச்சின் என்ற ஊர் நகரத்தார்களுக்கும் பொதுவானது. இந்த ஊர் நகரத்தார்களும் வழங்கிய மகமையைக் கொண்டு நவுலியப்பன் நகரத்தார்கள், கோயில் நிர்வாகத்தை நடத்தி வந்தனர். தமிழர், பர்மியர் ஆகிய அனைவருக்கும் திருக்கார்த்திகையன்று அன்னம் பாலிக்கப்பட்டது. பிள்ளையார் (கல்) விக்கிரகத்துக்கும் தண்டாயுதபாணி (வெண்கல) உருவத்துக்கும் பூசைகள் செய்ய, ஒரு பண்டாரம் இருந்துவந்தார். தண்டாயுதபாணியின் திருவுருவத்துக்கு மாசி மகத்தன்று இந்நகர் வீதிகள் வழியாக உலா நடைபெற்றது.

பர்மா முழுவதும், திருவிழா நாட்களில் நகரத்தார் கோயில்களின் இறையுருவங்களுக்குப் பர்மியர் பட்டாடைகளை வழங்கி வழிபட்டு வந்தனர்.

சூம்பியோ என்னும் ஊரில் நகரத்தார்கள் பௌத்தத் துறவிகளான பொங்கிகள், பர்மிய அலுவலர்கள் ஆகியோருடைய உதவியுடன் நவம்பர் மாதத்தில் மூன்று நாட்களுக்குப் புத்தர் பெருமானுக்கு ஒரு பெரிய விழாவைக்

கொண்டாடினர். அன்று இரவு, சூம்பியோப் பெருமக்களுக்கு நகரத்தார் ஒரு விருந்து வைத்து, பர்மிய மொழியில் நாடகங்களும் கலை நிகழ்ச்சிகளும் நடத்தினர்.

கம்பையிலுள்ள முருகன் கோயிலுக்கு திருக்கார்த்திகை நாளன்று வருகை புரிந்த அனைவருக்கும் நகரத்தார்கள் அறுசுவை உணவு படைத்தனர். இவ்விழாவைக் காண பர்மாவின் மூலை முடுக்குகளிலிருந்தும் தமிழர்கள் திரளாக வருவது அன்றும் இன்றும் வழக்கமாக இருந்து வருகிறது.

ஈந்தட்டா என்னும் ஊரில் பர்மியர்களுடைய முக்கியமான திருவிழாக்களை நடத்தும் பொறுப்பையும் அவற்றுக்கு உரிய செலவுகளையும் நகரத்தார் ஏற்றுக் கொண்டனர். பர்மியர்கள், திங்கட்கிழமைகளிலும் வெள்ளிக்கிழமைகளிலும் கூட்டம் கூட்டமாக — ஆடவரும் பெண்டிரும் — நகரத்தார் கோயிலுக்கு வந்தனர். அக்கோயில் பூசாரியிடம் இந்த ஆண்டில் நெல் விலை ஏறுமா? இறங்குமா? மகசூல் எப்படி இருக்கும்? என்ற கேள்விகளைப் பர்மியர் கேட்டுவந்தனர். அவர் கூறும் பதில்களை தேவ வாக்காகக் கருதினர். அவை பெரும்பாலும் பலித்தன.

ஜப்பானியர் இந்த நகரத்தின்மீது பலமுறை குண்டு வீசியும் இந்தக் கோயில் சேதப்படாமல் தப்பித்தது. இக்காரணத்தாலும் பர்மியர்களுக்கு இந்தக் கோயிலிலும் பூசாரியிடத்திலும் இருந்த நம்பிக்கை மேலும் பெருகியது.

**இரங்கூன் :**

பர்மாவில் இந்துக்களின் கோயில்கள் அனைத்திலும் செல்வத்தால் முதல் இடம் பெற்ற கோயில் இதுவே. அவ்வப்போது தேர்ந்தெடுக்கப் பெற்ற நகரத்தார் சிலர் இக்கோயிலை நிர்வகித்து வருகின்றனர். இரங்கூன் நாட்டுக்

கோட்டைச் செட்டியார்களின் தர்ம பரிபாலனசபை என்ற அமைப்பு 1935-இல் ஏற்பட்டது. இதன் பொறுப்பில் உள்ள நிறுவனங்கள் வருமாறு :

1. மொகல் தெரு 112 — 122 எண்களில் உள்ள ஆறறை தண்டாயுதபாணி கோயில்
2. பசுமந்தான் தண்டாயுதபாணி கோயில்
3. இரங்கூனிலிருந்து 10 கி. மீ. தொலைவிலுள்ள கம்பையில் ஒரு மடம்.

பரிபாலன சபையின் ஆதரவில் பர்மாவெங்கும் புகழ் பெற்ற தைப்பூச விழா கொண்டாடப் படுகிறது. இரங்கூனிலிருந்து பசுமந்தானுக்கும் பிறகு பசுமந்தானிலிருந்து இரங்கூனுக்குமாக நடைபெறும் சுவாமி புறப்பாட்டைக் காண ஆயிரக்கணக்கான மக்கள் கூடுகின்றனர். ஏழைகட்கு உணவு படைப்பது, இசை நிகழ்ச்சிகள், பக்தியைப் பரப்பும் நாடகங்கள் ஆகியவை எல்லாம் இவ்விழாவில் இடம் பெறுகின்றன. தேவாரம் ஓதப்படுகிறது. பர்மாவிலுள்ள இந்திய அரசாங்கத் தூதுவர் அலுவலகத்தின் உதவியுடன் தமிழ்நாட்டுக் கோயில்கள் பற்றிய திரைப் படங்களும் காட்டப்படுகின்றன. எல்லாச் சாதிகளையும் சேர்ந்த செல்வர்கள், பணம் செலவு செய்து உடற்கட்டான காளை மாடுகளை விலைக்கு வாங்கிவைத்து வளர்த்து, தங்கள் மாடுகள் இறைவனின் வெள்ளித்தேரை இழுத்துச் சென்றன என்ற பெருமையைச் சேர்த்துக் கொண்டனர்.

இந்த இறையுருவங்களுக்கு விலை மிக்க நகைகள் அணிவிக்கப் பெற்றன. அபிஷேகங்களும் சிறப்பாகச் செய்யப்பெற்றன. கோயில் மடைப்பள்ளியில் சமைத்த உணவு, பிரசாதமாக முருகன் அடியார்கட்கு வழங்கப் பட்டது. பல்லாயிரம் ஏழைகட்கு உணவும், சில நூறு முக்கியமானவர்கட்கு உணவும் தனித்தனியே படைக்கப் பட்டன.

ஆறறைக் கோயில் 1890-இல் கட்டப்பட்டதாகத் தெரிகிறது. ஆறு அறைகள் (வீடுகள்) கொண்ட ஒரு தொகுப்பான பெரிய கட்டிடமாக இருப்பதால் இவ்வாறு பெயர் பெற்றது இந்த ஆறறைக்கு, ஆறு கதவுகள் உண்டு. இவற்றின் கதவு எண்கள் 112, 114, 116, 118, 120, 122 என்பன. ஒவ்வொரு அறையிலும் ஏறத்தாழ 30 கடைகள் இருந்தன. இந்த மூன்று மாடிக் கட்டிடத்தின் தரைமட்டத்தில் கடைகள் இருந்தன. முதல் மாடியில் கோயில் இருக்கிறது. இது நகரத்தார் தொழில் செய்யும் பகுதியில் இருப்பதால், பொதுமக்கள் இங்கு வருவது அரிது. நகரத்தார்கள் மட்டுமே வழிபடு கிறார்கள் என்று சொல்லலாம். இந்தக் கோயிலின் தனிச் சிறப்பு, பர்மா நாடெங்கும் தொழில் செய்த நகரத்தார்கள் இங்கே கூட்டம் நடத்தித்தான் வரலாற்றுச் சிறப்புமிக்க எத்தனையோ முடிவுகளைச் செய்திருக்கிறார்கள்.

எந்த நகரத்தாரும் பர்மா மண்ணில் மிதித்ததும், ஆறறைக் கோயிலில் வழிபடுவதும், தாய்நாட்டுக்குத் திரும்பக் கப்பல் ஏறுவதற்கு முன் அங்கு வழிபடுவதும் வழக்கம். திதி முதலிய முன்னோர் வழிபாட்டு நிகழ்ச்சிகளை நகரத்தார்கள் இக்கோயிலில் நடத்துகிறார்கள். நகரத் தார்கள் சிறப்பாகக் கடைப்பிடிக்கும் (திருக்கார்த்திகைக் குப்பிறகு 21 ஆம் நாளில் சஷ்டியும் சதயமும் கூடும் போது) பிள்ளையார் நோன்பு, இங்குதான் கொண்டாடப் படுகிறது.

நாள்தோறும் ஒவ்வொரு காலத்திலும் பூசைகள் விரிவாக நடைபெறுகின்றன. நகரத்தார்கள் பல அறை களிலிருந்தும் வந்து இங்கு வழிபடுகின்றனர். விலைமிக்க கனத்த நகைகள் இந்த முருகப் பெருமானுக்கு அணிவிக் கப்படுகின்றன. பட்டாடை முதலியவற்றை இந்த இறைவனுக்கு உடுத்துவதை. ஒரு சிலர் சிறந்த கலையாக வளர்த்துள்ளனர்.

இந்த முருகன்மீது, இராமச்சந்திரபுரம் அன்பர், குங்கிலியம் பழ. சண்முகம் அவர்கள் பின்வரும் வெண்பாவை இயற்றியுள்ளார்கள். இது சலவைக்கல்லில் இக்கோயிலில் பொறிக்கப் பெற்றுள்ளது.

ஆண்டவனே ! ஓம் முருகா !
ஆறறை மேல்எம் தொண்டைப்
பூண்டவனே ! கோவில் கொண்டு,
புண்ணியனே ! — வேண்டுவமே
தாய்நாடு சென்றாலும்
தான்மறவோம் யாண்டுமுளாய் !
தாய்தந்தை வேறுளரோ சாற்று.

பசுமந்தான் தண்டாயுதபாணி கோயில் 1900-ஆம் ஆண்டு அளவில் இராஜ கோபுரத்துடன் கட்டி முடிக்கப் பட்டது. அதன் அருகே கட்டப்பட்ட விசாலமான பெரிய மடம், கார்த்திகை, தைப்பூச நாட்களில் வரும் ஏராளமான பேர் ஒரே சமயம் உணவு உண்ணுவதற்கு ஏற்ற உணவு மண்டபத்துடனும் கலை நிகழ்ச்சிகளும் கதா காலட்சேபங்களும் நடத்துவதற்கு ஏற்ற மன்றத்துடனும் கூடியது.

இந்தக் கோயில் 1942-இல் ஜப்பானியர் குண்டு வீச்சால் சேதப்பட்டது. உடனே மடத்தில் பாலாலயம் அமைத்து, விக்கிரகங்கள் பாலாலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டன ஒன்றரை லட்சம் ரூபாய் செலவில், பழைய கோயில் இருந்த இடத்திலேயே புதிய கோயிலை நகரத்தார்கள் கட்டியிருக்கின்றனர். 1963-இல் தொடங்கிய இந்தத் திருப்பணி 1967-இல் நிறை

வேறியது. இதைக்குறித்து, டாக்டர் பிலிப் சீகல்மென் என்னும் அமெரிக்கப் பேராசிரியர் பின்வருமாறு எழுதி யிருக்கிறார் :—

> இந்த நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கும் ஒரு சமூகத்தவர் இவ்வாறு இடிந்துபோன கோயிலை மீண்டும் கட்ட, பெரும் பணம் செலவிடுவது, வியப்புக்கும் பாராட்டுக்கும் உரியது.

நகரத்தார்கள் தர்மபரிபாலன சபை, தமிழ்நாட்டி லிருந்து சைவ சமய அறிஞர் பலரை வரவழைத்து உரைகள் நிகழ்த்த ஏற்பாடு செய்திருக்கிறது. இரங்கூனில் வாழும் இந்துக்களின் தலைமையான அமைப்பான சமரச சமாஜம், மார்க்கட்டுக்கு அருகேயுள்ள காளியம்மன் கோயில், 24-ஆம் வீதியிலுள்ள சித்தி விநாயகர் கோயில் ஆகியவற்றுக்கும் தர்ம பரிபாலன சபை வாரி வழங்கி யிருக்கிறது. இந்த அமைப்புக்களின் செயற்குழுக்களில் இப்போது நகரத்தார்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கப் பட்டிருக்கிறது.

புத்தர் பெருமானின் 2500 ஆவது ஆண்டு விழா வுக்கும் இதுபோன்ற தகுதியான பிற நிகழ்ச்சிகளுக்கும் தர்ம பரிபாலன சபை, தாராளமாக நன்கொடை வழங்கி யுள்ளது.

தைப்பூசத்தில் 1950 வரை வசூலிக்கப்பட்ட பணங்கள் தக்கவாறு முதலீடு செய்யப்பட்டு, இப்போது பல மடங்காகப் பெருகியிருக்கின்றன.

பகவான்தாஸ் மாளிகையில் மார்வாரிகள் நடத்தி வரும் அநுமான் கோயில், குஜராத்திகள் நடத்திவரும் சமணர் கோயில், மற்றும் சூல பகோடா, சுவே டகான் பகோடா போன்ற பௌத்தர் கோயில்களுக்கும் நகரத் தார்கள் நன்கொடைகளை வழங்கியுள்ளனர்.

திருவானைக்கா சிதம்பர ரெட்டியார் தம் பெயரால் இரங்கூனில் ஓர் உயர்நிலைப் பள்ளியை நிறுவினார். இக் குடும்பத்தார் 51-ஆவது வீதியில் ஒரு பெருமாள் கோயில் கட்டினர். அவர்கள் அக் கோயில் நிர்வாகத்தை ரெட்டியார் அறையில் (59/61 மொகல் வீதி) கடை வைத்திருந்த பள்ளத்தூர் சித. ப. சி. ராம. கடையினரிடம் ஒப்புவித்தனர்.

கம்பைச் சந்நிதி முறை என்ற நூல் 1903 - ஆம் ஆண்டில் வெளியிடப்பெற்றது. அதிலிருந்து சில பாடல் களைத் தருவோம் :—

### சப்பாணிப் பருவம்

மண்டலமடந்தை முகமண்டல மெனுங்காஞ்சி
வளநகர்க் கண்ணின் மணியா
வளர்மணிக் குமரகோட்டத் தருச்சகராய்
மாக்கச்சியப்ப மறையோன்

கொண்டநன் கனவிடைத்தி கடசக்கரமெனக்
கூறுமொழி முன்கொடேத்திக்
குதுகலித்துத் தினமொரிநூறு கவிசெய்தருள்
குலாவத்த சாமத்தினிற்

கண்டவர்கள்பவ நீக்குசந்நிதியின் வைத்துமெய்க்
காப்பிட்ட கன்றிடப்பின்
கற்பவர்கள் கேட்பவர்கள்யாவர் களுமுய்ந்திடக்
கந்தப்புராண மெனுமத்

தண்டமிழ் சிறப்பத்திருத்து வனசப்பாணி
சப்பாணி கொட்டியருளே
சம்பகாட விமருவுகம்பை மாநகர்முருக
சப்பாணி கொட்டியருளே.

## வெண்பா மாலை

அன்பே வடிவாய வசமடைந் தோர்பெ
ணின்பேருரைக் குநிலையறிந்து — முன்போய்
வரந்தந் தாய்காந்தண் மலர்போலும் வெட்டுண்
கரத்தந் தாய்கம்பை முருகா.

## பெரிய கட்டியம்

உருவெனவு மருவெனவு முருவருவ மெனவுமறை
யொன்ரு வுணர்ந்து தொடர்மூலா
மருவுமுருவினை துலையினுறு மெயடியரை வலிய
வந்தேகலந்த வநுகூலா
கருணைபுரி மருகனெனவரி திருவினுட னினிது
கண்டோகை கொண்டுபுகழ் கோலா
தெருவுதொறு மணிபணிகள் சிலினுறு துகளொடலை
சிங்கார கம்பைவளர் சீலா.

## சிறுதேர்ப் பருவம்

மருவார்சடைப் பிரான்கயிலாச கிரியென்ன
மாதிமய சயிலமென்ன
மாலாலெனக் கமலவல்லிபாற் கடலென்ன
மலரயன் வேதமென்னத்
தருவாணிசங்க மெனவிந்திரன் வண்பரன்
சயிலமென விந்திராணி
தண்கற்பதரு வென்னமாரனென் கணையெனத்
தக்கரதியின்புருவென
வொருவாதமுனிவர் மகவேதியென வவர்மாத
ரொண்மணித் தீபமென்ன
வுயர்தெய்வயானை வெள்ளானை யெனவள்ளிமா
ஞெளிர்புனத்தி தணமென்னத்

திருவாளரெமது பெருவாழ்வென்ன வொளிருநின்
சிறுதேரு ருட்டியருளே
செகராசர்புகழ் கம்பைநகர்வாச மகிழெந்தை
சிறுதேரு ருட்டியருளே.

இந்நூலை இயற்றிய காஞ்சிபுரம் குமரகோட்டம் சோணாசல பாரதி, பின்வருமாறு எழுதியிருக்கிறார்.

## 1903-ஆம் ஆண்டில் வெளியிடப்பெற்ற 'கம்பைச் சந்நிதி முறை' என்ற நூலில் ஆசிரியர் முகவுரை

திருத்தொண்டைநாட்டின்கண் பிரதான க்ஷேத்திர மாகிய ஸ்ரீ காஞ்சி மாநகரத்தில் ஸ்ரீ ஏகாம்பரநாதர் திருவாலயத்துக்கும் ஸ்ரீ காமாட்சியம்மையார் திருவாலயத்துக்கும் நடுவில் சோமாஸ்கந்த சொரூபமாய் விளங்கும் ஸ்ரீ குமர கோட்டத்துள் அடியார்கள் உய்யும்பொருட்டு வீற்றிருந் தருளும் ஸ்ரீவல்லி கல்யாணசுந்தரராகிய ஸ்ரீசுப்பிரமணியப் பெருமானுக்கு நித்தியநைமித்திய பூசை முட்டின்றி நடந் தேறும்படி செந்நெல் விளையும் நன்னிலக்கிராமம் ஒன்று பிரதிஷ்டை செய்யவேண்டுமென்று எண்ணி, யான் இரங்கோன் நகரத்துக்கு வந்து அந்நகரத்திற் கனதன வியாபாரஞ் செய்கின்றவரும் பாண்டி நாட்டில் வசிக்கும் எழுகுலவணிகோத்தமர்களென்று பெயர் பெற்றவரும் சிவாலயத் திருப்பணி கும்பாபிஷேகம் நித்தியநைமித்திய பூசைகிராமம் திருவிழாசொர்ணவிமானம் வெள்ளிவாகனம் தங்கவாகனம் முதலான பல தருமங்களைத்தலங்களும் புரிகின்றவரும் சிவபக்தி குருபக்தி அடியார்பத்தி பூதிசாவன ஒழுக்கமுடையவரும் ஆகிய நாட்டுக்கோட்டைச் செட்டி மார்களென்னும் நகரத்தாரை அடுத்து வினவிக்கொள்ள. நகரத்தாரும் அன்புகொண்டு முயற்சித்துப் பதினாயிரம் ரூபா சேகரித்து இன்னும் பதினாயிரம் ரூபா முயற்சித்துக்

கிராமபிரதிட்டை இன்னும் செய்யச் சிரத்தையுடையவர்களாயிருக்கின்றனர். இத்தகு புண்ணியசீலர்கள் இரங்கோன் நகரத்திற்கு அடுத்த ஸ்ரீ கம்பையென்னும் நகரத்தில் ஸ்ரீகாஞ்சிக் குமர கோட்டம்போல் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுள் திருவாலயம் நூதனமாக அற்புத கோபுர முதலான அளவில்லாத திருப்பணியும் நித்திய பூசை திருவிழாவும் இனிது நடத்திக்கொண்டு வருகின்ற தருமவான்கள் ஆதலால், அவர்கள் அத்திருக்கம்பை முருகப்பிரான்மீது பிள்ளைத்தமிழ் ஒன்று பாடவேண்டும் என்று கேட்டுக்கொள்ள, அவர்களது அன்பைநோக்கி இக்கந்தபிரான் திருவருளால் எனது சிற்றறிவுக்கு எட்டிய மட்டும் சந்நிதிமுறையாகப் பாடியச்சிடுவித்தனன்.

இங்ஙனம்,

காஞ்சிபுரம் குமரகோட்டம்,

சோணாசலபாரதி

**மோல்மீன்**

மோல்மீன் என்பது பர்மியத் துறைமுக நகரம். அரிசி, தேக்குமர ஏற்றுமதிகளால் புகழ் பெற்றது. பர்மாவில் நகரத்தார் முதலில் தொழில் செய்த ஊர் இதுவே. பிரிட்டிஷார் பர்மாவைக் கைப்பற்றுவதற்கு முன்னரே, நகரத்தார் இவ்வூருக்குச் சென்றனர்.

ஆற்றோரமாக அமைந்த ஸ்டிராண்டு சாலைக்கு இணையாக அமைந்த லோயர் மெயின் ரோடில், 214-ஆம் இலக்கம் கொண்டது நகரத்தார் கோயில். இங்கு சுப்பிரமணியரின் வேல் ஊன்றப்பட்டிருக்கிறது. சுப்பிரமணியர் போல உருவம் தெரியுமாப்போல, இந்த வேலுக்கு உடை உடுத்தப்படுகிறது. அன்றாடம் பூசைகளை ஒரு பண்டாரம் செய்து வருகிறார்.

தங்கக் கவசம் அணிவிக்கப்பெற்று இந்த உருவம் தைப்பூசம் முதலிய திருவிழா நாட்களில் வெள்ளி ரதத்தில் மோல்மீன் நகரின் முக்கிய வீதிகள் வழியாக எடுத்துச் செல்லப்படுகிறது. தெருச் சந்திகளிலும் மரம் அறுக்கும் ஆலைகளின் முகப்புக்களிலும் குறிப்பிட்ட கடைகளின் வாயில்களிலும் நின்று அர்ச்சனை முதலிய செய்யப்பெற்ற பிறகு ஊர்வலம் தொடர்ந்து சென்று மோல்மீனிலிருந்து 5 கி. மீ. தொலைவிலுள்ள டியாங்கோவை அடையும். திருவிழாக் காலத்துக்கு சுவாமி அங்கேயே தங்கி யிருக்கும்.

மோல்மீனிலிருந்து 20 கி. மீ. தொலைவில் சௌதலம் என்ற ஊர் இருக்கிறது. நகரத்தார்கள் இவ்வூர்ப் பெயரைச் சிவதலம் ஆக்கியுள்ளனர். சிவதலத்து மலைமீது சுப்பிரமணியர் கோயிலும் கட்டியுள்ளனர். இந்த சுப்பிர மணியரை இங்கு பல கோணங்களில் காணுமாறு கோயில் அமைப்பு உள்ளது. மோல்மீன், தத்துவம் மாவட்டங்களைச் சேர்ந்த பர்மியர்களும் ஆயிரக்கணக்கான தமிழ் உழவர்களும் தங்கள் நாக்குகளைக்கீறி வெள்ளிவேல் தாங்கியும் காவடி எடுத்தும் சுப்பிரமணியர்க்குப் பிரார்த்தனை செய்கின்றனர். வேல் குத்திவிட நாகப் பட்டினத்துக்கு அருகேயுள்ள எட்டுக்குடி என்னும் முருகன் கோயிலிலிருந்து அனுபவப்பட்டவர்களை வர வழைப்பதும் அந்த காலத்தில் வழக்கமாக இருந்தது.

மலையின் அடிவாரத்தில் நகரத்தார் மடம் இருக்கிறது. சாதி மத வேறுபாடின்றி, திருவிழா நாட்களில் அனை வர்க்கும் உணவு படைக்கப்படும். மலை மீதுள்ள கோயி லுக்கு நகரத்தார்கள் பெரிய அளவில் கட்டளைகளை ஏற் படுத்தியுள்ளனர்.

மோல்மீனிலிருந்து 70 கி.மீ. தொலைவில் மோல்மீன் ஆறு, கடலுடன் கலக்கும் தெற்குமதி என்ற இடத்திற்கு

மோல்மீன் நகரத்தார்கள் அமாவாசை, பௌர்ணமி புத்தாண்டுப் பிறப்பு போன்ற நாட்களில் சென்று கடல் நீராடி வந்தனர்.

மோல்மீனிலுள்ள நகரத்தார் கோயில், பர்மாவில் குறிப்பிடத்தக்க இந்துக் கோயில்களுள் ஒன்ருகும். இக் கோயிலைக் கட்டுவதற்காக இந்தியாவிலிருந்து வரவழைக் கப்பட்ட தச்சர், கொல்லர், ஸ்தபதி ஆகியோர் கோயில் வேலை முடிந்த பிறகு நகரத்தார்களின் கடைகளில் கணக்குப்பிள்ளைகள் ஆயினர். சிலர் பின்னர் சொந்த முதலாளிகளாகவும் ஆனுர்கள்.

மோல்மீன் மாவட்டத்துப் பர்மியர், தம் மதத்தால் பௌத்தராக இருப்பினும் பழக்க வழக்கங்களில் இந்துக்கள் போலவே உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பர்மாவில் நகரத்தார் கோயில்கள் யாவும் திராவிடக் கட்டிடக் கலைப்படி கட்டப்பட்டன. கோயில்களும் அவற்றைச் சார்ந்த நந்தவனங்களும் மடங்களும் மிகப் பெரிய அளவில் ஏற்படுத்தப்பெற்றுள்ளன. பெரிய நகரங் களை அடுத்த சிற்றூர்களில் வசித்த செட்டியார்கள் நகரங் களில் உள்ள கோயில்களில் பங்கு கொண்டு வழிபட்டு வந்தார்கள்.

இரங்கூனில் போல மோல்மீனிலும் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் கோயில்கள் தர்ம பரிபாலன சபை என்று பதிவு செய்யப் பெற்ற சங்கங்கள் இருந்து வருகின்றன. நகரத்தார்கள் சார்பில் கோயில் அலுவல்களை அவை செய்து வருகின்றன.

பர்மாவில் நகரத்தார்களின் கோயில்கள் மடங்கள் உள்ள ஊர்களாவன:-

1. இரங்கூன்
2. பசுமந்தான்
3. கீமந்தான்
4. லேகூ
5. மோபி
6. தக்கி
7. அவுக்கான்
8. தொவுஞ்சை
9. லேப்பட்டான்
10. மீன்லா
11. அவுப்போ
12. சூப்பிங்கான்
13. சீக்கோன்
14. நத்தலின்
15. பவுண்டை
16. தேக்கோன்
17. புரோம்
18. ஈஞஞ்சான்
18. தயட்மியோ
20. ஈந்தட்டா
21. நத்தஞ்சான்
22. பாசியன்
23. மைஞங்
24. உவாக்கமா
25. மியாங்மியா
26. சூமங்கை
27. அய்மென்
28. பியாப்பம்
29. சைலா
30. டேரியா
31. தொந்தை
32. போக்கலே
33. மோல்மேன்சூன்
34. சைப்பி
35. சோசான்
36. மூப்பின்
37. எவுண்டம்
38. மவுஞ்சவுட்டான்
39. தோங்குவா
40. கட்டப்பிறு
41. கய்யான்
42. டாப்பின்
43. பக்கோ
44. தன்னப்பின்
45. சைட்டோ
46. சைக்கோ
47. தத்துவம்
48. சுவைச்சான்
49. மோல்மீன்
50. டய்யூ
51. நவுலியப்பன்
52. பென்விக்கோன்
53. பியூ
54. டாங்கோ
55. பின்மெறு
56. மீஞ்சான்
57. மாந்தலே
58. மணியுவா
59. மீன்பு

ஒவ்வோர் ஊரிலும் ஆண்டுதோறும் ஒரு திருவிழா சிறப்பாக நடைபெற்றுவந்தது. அவற்றுள் தைப்பூசம்,

பங்குனி உத்திரம், சித்திராபௌர்ணமி முதலிய உற்சவங்கள் மிகச் சிறப்புள்ளன. பல ஊர்களில் திருவிழாவையொட்டி சுவாமி பவனி வருதல் நன்ருக நடைபெற்று வந்தது. பெரும்பாலான ஊர்களில் அந்த நாட்களில் அன்னதானம் நடத்தப்பெற்றது.

இரங்கூன், மோல்மீன், ஈந்தட்டா, பாசியன் முதலிய ஊர்களில் தைப்பூசம் பல்லாயிரக்கணக்கான மக்களைக் கவர்ந்தது. வெள்ளித்தேர்களில் சுவாமி எழுந்தருளி வந்த காட்சி மிகவும் உன்னதமானது. இரங்கூன் தைப்பூச விழாவன்று அரசாங்க அலுவலகங்களில் செட்டியார்கள் சம்பந்தப்பட்ட எல்லா அலுவல்களுக்கும் தவணை கொடுக்கப்பட்டது. கவர்னர் உள்ளிட்ட பல பிரமுகர்கள் சுவாமி பவனி செல்வதைவந்து கண்டுகளித்தார்கள். தைப்பூசத்தன்று செலுத்தப்பெறும் காவடிகள் ஏராளமானவை.

பெரும்பாலும் எல்லா நகரக்கோயில்களுக்கும் குறிப்பிடத்தக்க அளவில் சொத்துக்கள் இருந்துவருகின்றன.

பர்மாவில் பொருளாதாரப் போக்கின் மாறுதல்கள் காரணமாக இந்தியர்களின் குறிப்பாக நகரத்தார்களின் தொகை மிகவும் குறைந்து விட்டது. மேலும் இரண்டாவது உலகப் போரில் ஓரளவு பாதிக்கப்பட்டதால் நகரத்தார்களின் பொதுச் சொத்துக்கள் சீர்கேடுஅடைந்துள்ளன. பல ஊர்களில் பொதுச்சொத்துக்கள் பழுதடைந்துவிட்டன. அவற்றை மீண்டும் செப்பம் செய்வதற்குத் தகுந்த அளவு நகரத்தார்கள் அந்தந்த ஊர்களில் இல்லை. குறிப்பாகச் சொன்ஞல், சில ஊர்களில் செட்டியார்களின் தர்மச் சொத்துக்கள் தேடுவாரற்றுக் கிடக்கின்றன.

1979-இல் பர்மா முழுவதும் நகரந்தார் 76 பேர் மட்டுமே உள்ளனர். இவர்களில் 36 பேர் (ஆடவர் 35 பெண்டிர் 1) இரங்கூனில் வாழ்கின்றனர்.

இவர்களில் பாதிப் பேருக்குமேல் குடும்பத்துடன் (இந்தியப் பெண்களையும் பர்மியப் பெண்களையும் மணந்து) இருந்து வருகிறார்கள். இவர்கள் மக்கள் டாக்டர், எஞ்சினியர், வழக்கறிஞர், தாதிமார் ஆகவும் பர்மிய அரசாங்க அலுவலர்களாகவும் பணி புரிகின்றனர்.

இந்த 76 பேரின் ஆட்சியிலேயே பர்மாவிலுள்ள நகரத்தார்களின் கோயில்களும் பொதுச் சொத்துக்களும் உள்ளன. இவர்களில் சிலரைப் பற்றிப் பின்வரும் தகவல்களை, திரு. காந்தி அண்ணாமலை தெரிவிக்கிறார்.

## காந்தி அண்ணாமலை

1968 டிசம்பரில் சூழ்நிலையின் காரணமாக தைப்பூச விழாவை நடத்துவதில் சபையில் பெரும்பாலோர் தயக்கம் காட்டியபோது இவர் விடாப்பிடியாக எக்காரணத்தாலும் தைப்பூச விழாவை நிறுத்தலாகாதெனக் கூற இவரையே அருள்மிகு முருகப்பெருமான் ஆறறையிலிருந்து புறப் பட்டும் திரும்பவும் ஏற்படும் இரண்டுநாள் செலவையும்ஏற்க வேண்டுமெனக் கூறி, அதற்கு சம்மதித்து வழக்கம்போல் தைப்பூச விழாவை சிறப்பாக நடைபெறச் செய்தார். அவ்வாண்டில் மேற்படி இரங்கூன் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் கோயில்கள் தர்மபரிபாலனசபைக்கு உப தலைவரானார். மேற்படி சபைக்கு 1969 முதல் 1972 ஜனவரிமுடிய பொதுச் செயலாளர் பதவி ஏற்றார். இவரது காலத்தில் சைவசமய குரவர்களான அப்பரடிகள், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரின் நினைவுநாட்களை சபையார் ஆண்டுதோறும் கொண்டாடச் செய்தார். 20—3—1976-ல் தரும சொத்துக்களின் பாதுகாப்பு பற்றி ஆலோசித்து ஆவன செய்ய அகில பர்மா நகரத்தார்களின் பொதுக் கூட்டத்தைக் கூட்டி வைத்தார்.

**ரெத்தினம்**

தகப்பனுர் பெயர். நா. அருணுசலம் செட்டியார் பாகனேரி: பிறந்ததேதி 29—1—1926 இரங்கூன் நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் கோயில்களின் தர்மபரிபாலன சபையின் காரியதரிசி (1957 முதல் 1959 வரை) 1962 இல் பாலகவி வயினுகரம் தத்புருஷதேசிகரிடம் சிவதீக்ஷை பெற்றுக்கொண்டார். பர்மாவில் பல பகுதிகளிலும் கோயில்களைப் புதிதாக கட்டுவதற்கும் பழைய கோயில்களைப் புதுப்பிக்கவும் ஆலோசனை கூறியும் சுமார் 15 திருக்கோயில்களுக்கு சைவ ஆகமமுறைப்படி கும்பாபிஷேகம் நடைபெற தாமே ஆச்சாரியாராக இருந்து சிறப்பாக கும்பாபிஷேகங்களை செய்து வைத்திருக்கிறுர்.

விலாசம் : 74, சுவேபோந்தா வீதி, இரங்கூன்.

**அருணுசலம் செட்டியார்**

தகப்பனுர் பெயர் க. அரு. சொக்கலிங்கம் செட்டியார் கீழப்பூங்குடி, பிறந்ததேதி 1—7—1916. 1968-69 முதல் இரங்கூன் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் கோயில் தர்ம பரிபாலன சபையின் தலைவராக இருந்து வருகிறுர். மதுரையில் ஆடி வீதியில் 1924-இல் ஸ்தாபிக்கப்பட்ட கீழப்பூங்குடி கூ. க. அரு. பசுமடம் இவரது முன்னேர்களால் நிறுவப்பட்டது.

விலாசம் : 120, சுவேபோந்தா வீதி, இரங்கூன்.

**அண்ணுமலை செட்டியார்**

அ.சா. அ.சா., வலையபட்டி, 1911, எட்வர்ட் வீதி, காளியம்மன் கோயிலில் 16 ஆண்டுகள் டிரஸ்ட்டியாகவும் இரண்டு ஆண்டுகள் மானேஜிங் டிரஸ்ட்டியாகவும் இருந்திருக்கிறுர். இரங்கூன் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் கோயில்கள் தர்ம பரிபாலன சபையில் 5 ஆண்டுகளாக உப காரியதரிசியாக இருக்கிறுர்.

விலாசம் : 114, சுவே போந்தா வீதி, இரங்கூன்.

**முத்துவள்ளியப்ப செட்டியார்**

தகப்பனர் பெயர் அண்ணுமலை செட்டியார். பிறந்த தேதி 22 3.1911. வேந்தன்பட்டி. இரங்கூனில் பிரதான வீதியில் மெட்ராஸ் பின்மென் ஸ்தாபனத்தின் அதிபர். 1909-இல் ஸ்தாபிக்கப்பட்டது. இரங்கூனிலுள்ள சைவ ஆலயங்களின் துணிமணிகளை இலவசமாக சலவை செய்து கொடுக்கும் பழக்கத்தை பலவருடங்களாக மேற்கொண்டுள்ளார். சமயப் பணிகளில் பற்றுமிக்கவர்.

விலாசம்: 161, சூலேபகோடா வீதி, இரங்கூன்.

**அண்ணுமலை செட்டியார்**

தந்தை பெயர் சுப.முத்துராமஞ் செட்டியார்.மேலைச்சிவபுரி. பிறந்த தேதி 28—2—1912. ஸ்ரீ காசி நகரச் சத்திரங்களுக்கு மலேசியா போய் நன்கொடை திரட்டியவர்களில் ஒருவர். இரங்கூனில் ஷை காசிச் சத்திரதிற்கு 1952 முதல் 1954 வரை காரியதரிசியாகப் பணியாற்றியவர். இரங்கூன் தேவாரக்குழு தலைவராகவும் இருந்து வருகிருர்.

**ராம. ஆத. சொ. இராமனுதன் செட்டியார்**

தந்தைபெயர் சொக்கலிங்கம் செட்டியார். நடராசபுரம். பிறந்ததேதி 3—8—1934. இரங்கூன் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் கோயில்கள் தருமபரிபாலன சபையில் 1916 முதல் காரியதரிசியாக இருந்து வருகிருர்.

**நா. லெ. இராமனுதன்**

தந்தை பெயர் லெட்சுமணன் செட்டியார். ஒக்கூர். 11—1—1922. கம்பை தனவைசிய கல்விக்கழகத்தில் 1946 முதல் 1947 வரை காரியதரிசியாகவும், பர்மா நாட்டுக்கோட்டை செட்டியார்கள் சங்கத்தில் 1960 முதல் 1974 வரை காரியதரிசியாகவும், அகிலபர்மா தமிழர் சங்கத்தில் 1965 முதல் 1969 வரை காரியதரிசியாகவும் பணியாற்றியுள்ளார். அகில பர்மா இந்தியன் காங்கிரசில்

1969 முதல் பொருளாளராக இருந்து வருகிறார். சென்னை லயோலா கல்லூரியில் 1939 முதல் 1944 வரை பயின்று பி.ஏ. (பொருளாதாரம்) பட்டம் பெற்றுள்ளார்.

**பி. மு. பி. தரு. சிதம்பரம்**

தந்தைபெயர் முத்துக்கருப்பஞ் செட்டியார். பிறந்த தேதி 9—10—1925. பாகனேரி, இரங்கூன் நாட்டுக் கோட்டைச் செட்டியார்களின் கோயில்கள் தரும பரிபாலன சபையில் காரியதரிசியாக 1971 முதல் 1976 வரையிலும், தற்போது ஷெ சபையில் உபதலைவராகவும் இருந்து இருக்கிறார். இரங்கூன் காலாபஸ்த்தி ஸ்ரீநடராசப் பெருமான் ஆலய பொதுநலக்குழுவில் 1971 முதல் 1972 வரை தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

**சவுஞ்சோம் ராம. மு. முத்தையா செட்டியார்**

ஊர் அரிமழம். வயது 84. பர்மாவில் சதாபிடேகம் கொண்டாடினார்கள். மோல்மேன் நாட்டுக் கோட்டைச் செட்டியார்களின் கோயில் தர்ம பரிபாலன சபைத் தலைவராக இருந்து வருகிறார்.

# 6. சிங்கப்பூர்

தென்கிழக்கு ஆசியாவில் வளம் கொழிக்கும் பெரு நகராகவும், கடற்படைத் தளமாகவும் விளங்குவது சிங்கப்பூர். இங்கும் இதையடுத்துள்ள மலேசியா நாட்டுக்கும் நகரத்தார்கள் 1800-ஆம் ஆண்டுக்குப் பிறகே வந்ததாகப் பலரும் எழுதியிருக்கின்றனர். இது தவருன கருத்து. டச்சு மொழியில் எழுதப்பட்டுள்ள சில ஆதாரங்கள் அண்மையில் கிடைத்திருக்கின்றன. இவற்றிலிருந்து, பத்தாம்/பதினேராம் நூற்ருண்டில் நகரத்தார்கள் மலேசியாவில் இருந்தனர் என்பது உறுதிப்படுகிறது. இராஜ ராஜச் சோழன் ஆட்சியில் நகரத்தார்கள் கடல் கடந்தனர் என்று இதிலிருந்து ஊகிக்கலாம். இதைப் பற்றிப் பிறிதொரு நூலில் பின்னர் விளக்கமாகக் எழுதுவோம்.

புலவர் மணி-சித்தாந்த வித்தகர் முரு. பழ. இரத்தினம் செட்டியார் அவர்கள் பின்வருமாறு இந் நூலாசிரியருக்கு எழுதியிருக்கிருர்கள் :—

"சோழப் பேரரசுக்குப்பின் தமிழகத்தில் கோயில் திருப்பணி செய்த பெருமை நகரத்தார்க்கே உண்டு. 'திருப்பணி' என்னும் சொல் கோயில் பணியை மட்டுமே குறிக்கும். வேறெந்த அறப்பணியையும் 'திருப்பணி' என்னும் சொல்லால் சுட்டுவதில்லை. இதனை நன்குணர்ந்த நகரத்தார் தாம் ஈட்டிய பொருட்செல்வத்தில் மிகப்பெரும்பகுதியை இத்திருப்பணிக்கே செலவிட்

டுள்ளனர் என்பது உலகறிந்த உண்மையாகும். ராஜாஜி, புலாபாய் தேசாய்க்கு அறிமுகக் கடிதம் கொடுத்த பொழுது, "நகரத்தார்கள் திருப்பணிச் செல்வர்கள்" எனக் குறிப்பிட்ட செய்தி ஈண்டு நினைவுகூரத்தக்கது.

"நகரத்தார்கள் பாய்மரக்கப்பலில் 1824 - ஆம் ஆண்டு மலேசியாவுக்கும் சிங்கப்பூருக்கும் வர்த்தகம் செய்வதற்காக வந்தனர். இந்நாடுகளுக்குப் புறப்படு முன்னர் தம் குலகுருவாக இருந்த சிவாசாரியாரிடம், 'கடல் கடந்து செல்லும் நாங்கள் அந்நாடுகளில் எத்தெய்வத்தை வழிபடல் வேண்டும்?' என வினவினர். அக்காலத்தில் கடல்கடக்கக்கூடாதென்னும் சாத்திர விதியைப் பின்பற்றி அந்தணர் யாரும் கப்பல் ஏறுவதில்லை. சிவபெருமானையே தம் குலமுதற் கடவுளாகக் கொண்டுள்ள நகரத்தார் கடல்கடந்த நாட்டில் சிவன் கோயில்கள் எழுப்பித்தால் ஆகமவிதிப்படி பூஜை செய்ய சிவாசாரியார்கள் வேண்டும். வள்ளி தெய்வானையோடு கூடிய சுப்பிரமணியரைப் பிரதிட்டை செய்தாலும் குருக்களே பூசை வைக்க வேண்டும். என் செய்வது? அக்காலத்தில் ஆண்டுதோறும் நகரத்தார் பழநிக்குக் கால் நடையாகச் சென்று வந்தனர். பழநி ஆண்டவராகிய தண்டபாணிக்குப் பண்டாரங்களே அச்சமயம் பூசை செய்து வந்தனர். நாயக்கர் காலத்தில்தான் இதில் மாறுபாடு நிகழ்ந்தது. எனினும் மூலவர் அருகே நின்று பூஜைத்திரவியங்கள் வழங்கும் உரிமை இன்றும் பண்டாரங்களுக்கு உண்டு. இதனை அறிந்த சிவாசாரியர் நகரத்தார்களிடம், 'நீங்கள் கடல்கடந்த நாடுகளில் தண்டபாணியைப் பிரதிட்டை செய்து வழிபடுங்கள். தண்டபாணிக்குப் பண்டாரங்கள் பூஜை செய்யலாம். அந்தணர்கள் கடல்கடக்க மாட்டார்களாதலால் பண்டாரங்களை அழைத்துச்சென்று பூஜை செய்வியுங்கள். நிறைந்த செல்வத்தைத் தண்டபாணி வழங்குவார்' எனக் கூறித் திருநீறளித்தார். குலகுருவின் ஆணையைச் சிரமேற்கொண்ட நகரத்தார் தாம்

வந்திறங்கிய மலேசிய நாட்டிலும் சிங்கப்பூரிலும் தண்டபாணிக்குக் கோயில்கள் எடுப்பித்து வழிபடலா யினர். குடும்பம் இன்றிக் கடல் கடந்ததால் நகரத்தார் தண்டபாணியை வழிபடத் துவங்கினர் என நகைச்சுவை யாகச் சொல்வதுண்டு. ஆனல் அது நகைச்சுவையே அன்றி உண்மை அன்று. மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் நகரத்தார்கள் தம் வர்த்தக வளத்திற்கேற்பத் தண்டபாணி கோயில்களை எடுப்பித்து, அக்கோயில்களில் வழிபாடு முட்டின்றி நடைபெறுவதற்காக மகமை எழுதி அதன் மூலம் வந்த வருவாய்க்குத் தக்கவாறு சொத்துக்களையும் நகைகளையும் சேர்த்துவைத்துள்ளனர்.

"சிங்கப்பூரிலுள்ள நகரத்தார் தண்டாயுதபாணி கோயில் 1859 - இல் நிறுவப்பெற்றது. பல இலட்சம் வெள்ளிக்குச் சொத்துக்கள் உண்டு. நாள்தோறும் பூசைகள் குறித்த காலத்தில் செவ்வனே நடைபெறு கின்றன. தைப்பூசத் திருவிழாவில் மலாய், சீன மக்களும் காணிக்கை செலுத்துவர். தமிழ்ப் பெருமக்கள் அலகுக் காவடிகள் எடுப்பர். தண்டபாணி கோயிலுக்குள்ளேயே சிவன் கோயிலும் உண்டு. இக்கோயில், குருக்கள்மார் கடல்கடக்கத் துவங்கிய பின்னர் கட்டப்பெற்றது. தண்டபாணிக்குப் பண்டாரமும் சிவபெருமானுக்குக் குருக்களும் பூசை செய்கின்றனர். இத்தண்டபாணி கோயில் நீங்கலாக நகரத்தார்க்குத் தனியே பிள்ளையார் கோயில் ஒன்றும் உண்டு. இக்கோயில் 1976-இல் புதுப்பிக்கப்பெற்றுள்ளது."

இக்கோயிலைப் பற்றி, இந்திய அரசின் முன்னாள் நிதியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் 11—8—1968 ஆனந்தவிகடன் இதழில் பின்வருமாறு எழுதியிருக்கிறார் :

"நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் தமிழ்நாட்டில் ஆலயப் பணிகள் பல செய்துள்ளார்கள். இம்மரபை

ஒட்டியே சிங்கப்பூரிலும் அவர்கள் ஓர் ஆலயம் கட்டியிருக்கிறார்கள். அக்கோயிலுக்கு என்னை அழைத்துச் சென்று தெய்வ வழிபாடுசெய்ய வாய்ப்பளித்தார்கள். தமிழ்நாட்டுக் கோயில் ஒன்றுக்குச் சென்ற எண்ணம் தான் என் மனத்தில் தோன்றியது. ''

இந்தக்கோயில் மிகத்திறமையாக நடத்தப்படுவதாக, 1966 முதல் 1971 வரை சிங்கப்பூர் வாழ் இந்துக்கள் இந்து சமயம், பண்பாடு குறித்து நடத்திய கருத்தரங்க வெளியீட்டில் ப. 183-184இல் பாராட்டப்பட்டிருக்கிறது.

சிங்கப்பூரைப் பற்றி எந்நாட்டினர் நூல் எழுதினாலும் இந்தக் கோயிலைக் குறிப்பிடத் தவறுவதில்லை என்பதிலிருந்தே இக்கோயிலின் முக்கியத்துவத்தை அறியலாம். சிங்கப்பூர் தைப்பூசத்தை அறிஞர் ரோலண்ட் பிராடல், தாம் எழுதிய நூலில் சிறப்பாகப் படம்பிடித்துக் காட்டியிருக்கிறார்.

ஆனந்தவிகடன் சிங்கப்பூர் மலரில் 3-10-1971-இல் பின்வரும் பகுதி வெளிவந்தது :-

டேங் ரோடு ஸ்ரீ தெண்டாயுதபாணி கோயில் டிரஸ்டி திரு. கண. மா. வெள்ளையப்பச் செட்டியாரும் செயலாளர் திரு. எம். பி. சாத்தப்பனும் நம்மை வரவேற்கிறார்கள்.

சிங்கப்பூர் நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தின் பெரியதோர் ஆலயத்தில் நுழைகிறோம். திருமுருகன் புகழ்ப் பாடல் நம்மைச் சிலிர்க்க வைக்கிறது. ஒரு நூற்றாண்டுக்கு முன் கட்டப்பட்ட இந்தக்கோயில் செட்டியார் கோயில் என்று அழைக்கப்படுகிறது.

கோயிலில் சீக்கியர்களும் சீனர்களும் நடமாடுவதைப் பார்க்கிறோம்.

"சீக்கியர்களும் வருகிறார்களா ?"

"ஆம். அவர்கள் அதிகமாகவே வந்து அர்ச்சனை செய்கிறார்கள். சிங்கப்பூர் சீனர்களிலே பலர் நேர்ச்சை பண்ணி காவடி எடுக்கிறார்கள். பால் காவடிஎன்று நினைக்காதீர்கள். அலகுக் காவடிதான், காவடி எடுக்கிற சீனர் எண்ணிக்கை ஆண்டு தோறும் கூடிக்கிட்டே போகிறது".

"தைப் பூசத்துக்கு முன்பெல்லாம் அரசாங்க விடுமுறை இருந்தது. இப்போது கிடையாது. எனினும் ஆயிரம் ஆயிரமாகக் கூட்டம் கூடும். தைப் பூசத் துக்கு ஆண்டுதோறும் சிங்கப்பூர் அதிபர் கோயிலுக்கு வருவார். பிரதமர் லீ குவான் இயூவும் வருவது வழக்கம். எல்லாச் சமூகத்தவர்களும் வருவார்கள். நவராத்திரியும் நம் கோயிலில் சிறப்பாக நடக்கும். இசை, நாட்டியம், கலை நிகழ்ச்சிகள்-பத்து நாள் நடத்துகிறோம்" என்கிறார் திரு. வெள்ளையப்பச் செட்டியார்.

திரு. சாத்தப்பன் கூறுகிறார்:

"ஒவ்வொரு மாதமும் கார்த்திகையைச் சிறப்பாக நடத்துகிறோம். ஓராண்டில் மொத்தம் ஏழு குருபூஜை நடத்துகிறோம் 12 - கார்த்திகைகளிலும் பகலில் நானூறு ஐந்நூறு பேருக்குச் சாப்பாடு போடு கிறோம். தைப்பூசத்தன்று 6000, 7000 பேருக்குச் சாப்பாடு நடக்கும்."

மயில் வாகனம் தங்கப் பூச்சுடன் தகதகக்கிறது. வெள்ளி ரதமும் இருக்கிறது. "எனக்கு ஊர் வேதா ரண்யம் பக்கம். பல ஆண்டுகளாக இங்கே நான் தான் பாடிக்கிட்டிருக்கேன். எல்லாம் இந்த நகரத் தார்களின் ஏற்பாடுதான். சிங்கப்பூரிலே இந்தக்

கோயிலிலே நவராத்திரி ஒரு பெரிய கலைவிழா மாதிரியே நடக்கிறது!'' என்று அடக்கமாகச் சொல்கிறாரே, அவர்தான் கோயிலில் பாடும் கணபதி தேசிகர்.

சிங்கப்பூர் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களுக்குச் சொந்தமான இக்கோயில் தேங் ரோடில் இருக்கிறது. ஸ்ரீதண்டாயுதபாணி கோயில் என்பது இதன் பெயர். இக்கோயில் 4—4—1859-இல் ஏற்பட்டது.

மூர்த்திகளின் பெயர் :

1. ஜம்பு விநாயகர்
2. ஸ்ரீ தெண்டாயுதபாணி (மூலஸ்தானம்)
3. இடும்பர்

இதைச் சேர்ந்தசிவன் கோயிலில் உள்ள விக்கிரகங்கள் :

1. ஸ்ரீ சுந்தரேசுவரர்
2. சித்தி விநாயகர்
3. தெண்டாயுதபாணி
4. ஸ்ரீ மீனாட்சி அம்பிகை
5. தெட்சிணாமூர்த்தி
6. சண்டிகேசுவரர்
7. ஸ்ரீநடராஜர், சிவகாமி அம்பிகை
8. வயிரவர்
9. நவக்கிரகங்கள்

சுற்றுப் பிராகாரத்தில் :

1. அண்ணாமலையார்
2. பிரம்மா

திருவிழாக்களும் சுவாமி புறப்பாடும்:

1. வருடப்பிறப்பு
2. சித்திரா பௌர்ணமி

3. வைகாசி விசாகம்

4. ஆவணி மூலம்.

5. புரட்டாசி மாதம் நவராத்திரி பத்து நாளும் கச்சேரிகள், நடனங்கள் சுவாமி அலங்காரங் களும் உண்டு. 10ஆவது நாள் சுவாமி வெள்ளிக் குதிரை வாகனத்தில் எழுந்தருளி அம்பு போட்டு வீதி சுற்றிவரும். வெளியூர் அன்பர்களுக்கு 10 நாளும் இரவில் சிற்றுண் டிகள் கொடுக்கப்படுகின்றன.

6. கந்தர் சஷ்டி சுவாமி புறப்பாடு

7. கார்த்திகை மாதம் சோமவாரங்களில் சுவாமி தங்கமயில் வாகனத்தில் புறப்படுகிறது. கடைசிச் சோமவாரத்தில் வெள்ளிக் குதிரை வாகனம் கார்த்திகைப் பூசை. எல்லோருக்கும் சிற்றுண் டியும் பேருண்டியும் படைக்கப்படுகிறது. சொக்கப்பனை கொழுத்தும் நிகழ்ச்சியும் நிகழும்.

8. மார்கழித் திங்கள் முழுவதும் திருப்பள்ளி எழுச்சி நடைபெறுகிறது. திருவாதிரை ஆருத்ரா தெரிசனத்தன்று நடராசரும் சுப்பிரமணியரும் புறப்பாடு — வருடத்தில் ஆறு நடராசர் அபிஷேகங்களும் நடைபெறுகின்றன.

9. தைப்பூசக் கொண்டாட்டம். முதல் நாள் புனர் பூசத்தன்று காலையில் சுவாமி வெள்ளி ரதத்தில் தேங் ரோடு ஸ்ரீ தெண்டாயுதபாணி கோயிலி லிருந்து கியோங்சேக் ரோட்டிலுள்ள நகரத்தார் பிள்ளையார் கோயிலுக்குப் போய்ச் சேர்ந்து, மாலை அங்கிருந்து சர்க்கரைக் காவடிகளுடன் நகரத் தார்கள் தொழில்செய்யும் மார்க்கட்வீதி வழியாக இரவு 11-மணிக்கு தேங் ரோடு திரும்பும். பூசத் தன்று காலை 7மணியிலிருந்து சர்க்கரைக் காவடி, பால் காவடி, வேல் காவடி, ரதக் காவடிகளை

பல பக்தர்கள் சில சீனர்கள் உள்பட ஆண், பெண், குழந்தைகள் அனைவரும் இரவு 7 மணி வரை செலுத்துகின்றனர். அன்று பகல் மகேசுவர பூசை வெகு சிறப்பாக நடைபெறும். பத்தாயிரம் பேருக்கு அன்னதானம் நடைபெறும். அன்று இரவு சுவாமி கொலுவீற்றிருக்கும்போது, அரசாங்க அதிபர், மந்திரிகள், அதிகாரிகள், பிரமுகர்கள், அயல்நாட்டுத் தூதுவர்கள் எல்லாருக்கும் அழைப்பு அனுப்பப்படுகிறது. வருபவர்களுக்கு மாலை மரியாதை உண்டு.

சிவராத்திரி யன்று இரவு நாலுகால பூசை அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பாக நடந்து வருகிறது.

பங்குனி உத்திரத்திற்கும் காவடிகள் வருகின்றன. ஒவ்வொரு மாதக் கார்த்திகையின்போதும் பகல் உணவு எல்லோருக்கும் அளிக்கப்படுகிறது. இரவு சுவாமி புறப்பாடும் உண்டு.

பங்குனி மாதத்தில் கோவிலூர் ஆண்டவர் குரு பூஜையும், சைவசமயாசாரியர்கள் நால்வர் குரு பூஜையும், சேக்கிழார் குருபூஜையும் நடைபெறுகின்றன.

ஓதுவா மூர்த்திகள் இருந்து நாள்தோறும் தேவார இசை பாடி வருகிறார்கள்.

இந்தியாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் வரும் சமயச் சொற்பொழிவாளர்களுக்கும், இயல் இசை வல்லுநர்களுக்கும் இக்கோயிலார் இடம் அளித்து உதவி செய்கின்றனர்.

அன்றாட வழிபாட்டிற்கும் விசேட நாட்களிலும் சில சீனர்களும் வருகிறார்கள்.

திருவிழாக்களைச் செவ்வனே நடத்தச் சிங்கப்பூர் அரசாங்கம் போலீஸ் பாதுகாப்பும், போக்கு

வரத்து ஏற்பாடுகள் முதலியனவும் மிகவும் சீரிய முறையில் செய்து தருகிறது. சிங்கப்பூர் வானொலியிலும், டெலிவிஷனிலும் நவராத்திரி, தைப்பூச நிகழ்ச்சிகள் ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு செய்யப்படுகின்றன.

நாள்தோறும் பக்திப் பாடல்களும் மார்கழி மாதத்தில் திருப்பாவை, திருவெம்பாவை இசைத் தட்டுக்களும் ஒலிபரப்பப்படுகின்றன.

சிவன் கோயிலில் பன்னிரு திருமுறைகள் வைக்கப்பட்டுள்ளன. அடுத்துள்ள சங்கத்தில் நூல் நிலையம் இருக்கிறது.

நாதசுரம் வழக்கமாக இசைக்கப்படுகிறது. கடைசியாக ஏர் விளம்பி ஆவணி 15-இல் குடநீராட்டு விழா நடைபெற்றது.

கியோங் சேக் ரோடு பிள்ளையார் கோயில் நாட்டுக் கோட்டைச் செட்டியார்களால் நடத்தப்பெறுகிறது.

மூர்த்தியின் பெயர் : லயன் சித்தி விநாயகர்.

தத்புருஷ தேசிகர் பாலகவி வே. இராமநாதன் செட்டியார் அவர்கள், பின்வரும் பாடல்களைப் பாடியிருக்கிறார்கள்.

## சிங்கப்பூர் – தேங் ரோடு
## ஸ்ரீ தண்டாயுதபாணி பதிகம்

### காப்பு

செல்வஞ் செழித்துயருஞ் சிங்கப்பூர்
நன்னகரில்
நல்வணிக ராய நகரத்தார்க் —
கொல்லையருள்
செய்யுந்தண் டாயுதக்கைச்
சேய்க்கோது மிந்நூற்குத்
துய்யமா தங்கந் துணை.

## நூல்

எண்ணிய வெண்ணியாங்
கெய்துவித் தின்ப மெளிதருளுங்
கண்ணிய மிக்க கயற்கண்ணி
யோர்பங்கு காதலித்த
புண்ணியன் மன்சோம சுந்தரன்
சேய்சிங்கப் பூரிலமர்
திண்ணியன் மெய்ஞ்ஞான
தண்டா யுதபாணி சேவடியே.

புண்ணியஞ் செய்வார்க்குப்
பூவுண்டு நீருண்டு போற்றுவதற்குத்
தண்ணிய மீனாட்சி தாளுண்டு
சார்ந்தவர்க் கின்னமுதா
நண்ணிய நஞ்சோம சுந்தர
னற்பத முண்டுதண்டத்
திண்ணிய கைக்கொண்ட சேயுண்டு
சிங்கப்பூர் சேர்மின்களே.

ஆண்டுதோறும் சிங்கப்பூர்க் கோயிலில் நகரத்தார்கள் நவராத்திரி விழாவை எவ்வளவு விரிவாக நடத்துகிறார்கள் என்பதை ஏனையோர் அறிய உதவியாக மூன்று ஆண்டுகட்கு முன் நடந்த அவ்விழாவின் நிகழ்ச்சி நிரலைக் கீழே தந்திருக்கிறோம்.

## முதல் நாள்

அலங்காரம் : ராஜாங்கம்

இரவு

7-00— 7-30 திரு. K. முத்துரெத்தினம்
குழுவினர் ... நாதஸ்வரம்

7-30— 8-00 திரு.சோம.கணபதி தேசிகர்
... தேவார இசை

8-00— 8-15 செல்வி இந்திராணி ரத்னவேலு ... தனி வயலின்

8-15— 8-30 குமாரிகள்: அருந்ததி கார்த்திகேசு, சுலோசனு கார்த்திகேசு ... பாட்டு

8-30— 9-00 திரு. S. அமிர்தலிங்கம் ... பாட்டு

9-00— 9-15 செல்வன் சதீஸ்வரன்...வயலின் இசை

9-15— 9-45 திருமதி. செல்வநாயகி ரத்னவேலு ... பாட்டு

9-45— 9-55 நாகப்பன் சுசீலாதேவி ... நடனம்

9-55—10-05 A. R. விஜயகுமரி ... நடனம்

10-05—10-15 R. நிர்மலாதேவி ... நடனம்

10-15—10-25 விமலா அப்பாத்துரை ... நடனம்

## இரண்டாம் நாள்

அலங்காரம் : வெண்ணெய்த் தாழி

இரவு

7-00— 7-30 செல்வி பவானி வடிவேலு ... பாட்டு

7-30— 7-45 திருமதி சுசீலா கிருஷ்ணசாமி ... வீணை

7-45— 8-15 திரு. V. ராமச்சந்திரன் ... பாட்டு

8-15— 8-30 செல்விகள் : உஷா நடராஜா, ஆஷா நடராஜா ... வயலின் இசை

8-30— 9-00 திருமதி கஸ்தூரி சுப்பிரமணியன் ... பாட்டு

9-00— 9-30 செல்வி சீதாலெக்ஷ்மிசதாசிவம்...பாட்டு

| | | |
|---|---|---|
| 9-30—10-00 | திரு. மாணிக்கம், திரு. பழனிச்சாமி | ... பாட்டு |
| 10-00—10-15 | செல்விகள் : ருக்குமணி, ரஞ்சினி | ... பாட்டு |
| 10-15—10-25 | துரைசாமி சாரதாம்பாள் | ... நடனம் |
| 10-25—10-35 | P. சின்னத்தம்பி Ansiah Beir | ... நடனம் |

## மூன்றும் நாள்

அலங்காரம் : மார்க்கண்டேயர்

இரவு

| | | |
|---|---|---|
| 7-00— 7-30 | திரு. சோலமலை | ... பாட்டு |
| 7-30— 7-45 | செல்வன் R. கானமூர்த்தி | ... வயலின் இசை |
| 7-45— 8-00 | திருமதி பத்மாவதி கிருஷ்ணன் | ... பாட்டு |
| 8-00— 8-30 | திரு. KR. ராஜு | ... பாட்டு |
| 8-30— 9-00 | குமாரி சோபா சங்கர் | ... வீணை |
| 9-00— 9-15 | செல்வி சுஜாதா கிருஷ்ணன் | ... பாட்டு |
| 9-15—10-00 | திருமதி மங்களா கிருஷ்ணன் | ... பாட்டு |
| 10-00—10-30 | சித்ரா வாத்திய குழு | ... வாத்திய இசை |
| 10-30—10-40 | செல்வி கிருஷ்ணகுமாரி அய்யாவு | ... நடனம் |
| 10-40—10-50 | பார்வதி தெண்டாயுதபாணி விஜயகுமாரி | ... நடனம் |

இவ்வாறு ஒவ்வொரு நாளும் இரவு 7 மணி முதல் 10-30 வரை பலவகையான இசை, நடன நிகழ்ச்சிகள் தக்க பக்க வாத்தியங்களுடன் ஏற்பாடு செய்யப் பெறுகின்றன.

நான்காம் நாள் அலங்காரம் — **வேணுகானம்.**

ஐந்தாம் நாள் அலங்காரம் — **கண்ணப்ப நாயனார்**

ஆறும் நாள் அலங்காரம் — **ஊஞ்சல்**

ஏழாம் நாள் அலங்காரம் — **பிட்டுக்கு மண் சுமத்தல்**

எட்டாம் நாள் அலங்காரம் — **காளிங்க நர்த்தனம்**

ஒன்பதாம் நாள் அலங்காரம் — **சரசுவதி பூஜை**

பத்தாம் நாள் விஜயதசமி அன்று மாலை 6-30-க்குச் சுவாமி அம்பு எய்யும். 7 மணிக்கு சர்வ அலங்கார நாயகராக, வெள்ளிக் குதிரை வாகனத்தில் இறைவன் எழுந்தருளச் செய்யப் பெற்று 9 மணிக்கு இருக்கை சேரும்.

# 7. மலேசியா

மலேசியா, வளம் கொழிக்கும் நாடாக இருப்பதற்கு அடிப்படை அந்த நாட்டிலுள்ள ரப்பர் என்னும் மூலச் செல்வம்.


'தமிழ் நேசன்' நாளிதழின் முன்னாள் ஆசிரியர் திரு. முருகு சுப்பிரமணியன் அவர்கள் ஒரு கட்டுரையில் எழுதியிருப்பது போல, "ரப்பர் மரங்களில் பால் வடித்து அவற்றைப் பணம் காய்க்கும் மரங்களாக விளங்கச் செய்யும் மகத்துவம் தமிழ்ப் பாட்டாளிகளுக்கு உண்டென்றால் ஆதியில் ரப்பர்த் தோட்டங்களைப் பயிர் செய்ய மூலதனம் கொடுத்த பெருமை நகரத்தார்களையே சாரும்" ஆதி நாளில் இவர்களில் ஒருவரான சந்திரதத்தன் என்பார் தம் சொந்த மரக்கலத்தில் மலேயா வந்து காவிரிப் பூம்பட்டினம் திரும்பியதாக மணிமேகலை கூறுகிறது.

மலேசியாவின் பலநகரங்களிலும் ஏராளமான சிற்றூர்களிலும், நகரத்தார்கள் கோயில்களைக் கட்டியிருக்கிறார்கள். அவற்றுக்கு நல்ல இடமும் உறுதியான கட்டிடங்களும் தேவையான நகைகளும் வாகனங்களும் சொத்துக்களும் வழங்கி, அவை என்றும் நின்று நிலவ வகை செய்திருக்கிறார்கள்.

பினாங்கில் நகரத்தார்கள் (1) தண்டாயுதபாணி கோயிலை 1850-இலும் (2) தண்ணீர் மலைக் கோயிலை 1857-இலும் ஏற்படுத்தினார்கள்.



பொய்யாத விநாயகர் கோயில் — மலாக்கா



சிங்கப்பூர் தைப்பூசத்தில் தண்டாயுதபாணி சுவாமி பவனி

எல்லா ஊர்களிலும் நாள்தோறும் பூசை நடைபெறு கிறது. தைப்பூசம், பங்குனி உத்திரம் போன்ற திருவிழாக் களும் நடைபெறுகின்றன.

நகரத்தார்களின் நிர்வாகத்தில் இருந்துவரும் கோயில்கள் பெரும்பாலும் தண்டாயுதபாணி கோயில்களே ஆகும். பிறுெங்கில் சிவன் கோயிலும் சிரம்பானில் செல்வ விநாயகர் கோயிலும் மலாக்காவில் பொய்யாத விநாயகர் கோயிலும், மற்றவர்களால் கட்டப்பட்டு நகரத்தார்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு திருவிழாக் கொண் டாடப்படுவதால், ஏனைய ஊர்களிலுள்ள நகரத்தார்கள் சென்று கலந்துகொள்ள வசதியாக இருக்கிறது. திரு விழாக்களின்போது அன்னதானத்தையும் பெரும்பாலும் எல்லா ஊர்களிலும் நகரத்தார்கள் ஏற்பாடு செய்கிறுர்கள்.

திருவிழாக்களில் காவடி எடுத்தல் முதலியவை, பழனி, திருத்தணி போன்ற தமிழ்நாட்டுத் தலங்களின் நிகழ்ச்சிகளை நினைவூட்டும் வண்ணம் நடத்தப் படுகின்றன.

எல்லாக் கோயில்களும் திராவிடக் கட்டிடக் கலையைப் பின்பற்றியும், நல்ல வெளிச்சமும் காற்றும் உள்ளேவரத் தக்கவாறும் கட்டப்பட்டுள்ளன. மேலும் அவை தூய் மைக்கும் ஒழுங்குக்கும் எடுத்துக் காட்டாக விளங்கு கின்றன. அந்த நாட்டின் வாழ்க்கைத் தரமும் சூழலும் இதற்குக் காரணம் எனலாம்.

" இங்கே துப்பக் கூடாது ",

" கால் அணிகளை வெளியே போடவும் ".

" திருவாலவாயன் திருநீற்றை வீணாக்காதீர் ".

" சந்தனம், குங்குமம் முதலியவற்றைத் தூண்களில் தடவக்கூடாது ".

என்பன போன்ற வேண்டுகோள்களும் ஆணைகளும் அடங்கிய அறிவிப்புக்களும் மலாய் நாட்டுக் கோயில்களில் இல்லை. அவை அங்கு தேவைப்படவில்லை.

குருக்கள் அல்லது ஓதுவார், சிறு அளவில்தான் திருநீறு/குங்குமம் கொடுக்கிறார். எனவே அதை வீணாக்க இயலாது.

மற்றும் அங்கு வழிபாட்டிற்குப் பயன்படுத்தப்படும் சூடம், சாம்பிராணி ஆகியவை தரமானவையாக உள்ளன. அபிஷேகத்திற்குச் சுத்தமான பால் வழங்கப் படுகிறது. இவற்றையெல்லாம் நேரில் பார்த்துத் தெரிந்து கொள்வதே நன்று.

கிள்ளான் போன்ற ஒரு சிறு ஊரில்கூட நகரத்தார் கோயிலுக்கு நாள்தோறும் நல்ல கூட்டம் வருகிறது. சீக்கியர்களும் பௌத்த மதத்தினரும் இக்கோயிலுக்குவந்து வழிபடுகிறார்கள். திருவிழாக்களுக்குத் திரளான கூட்டம் (அதிகாரிகள், உள்ளூர்ப் பெருமக்கள், வியாபாரிகள், தொழிலாளர்கள் உட்பட) வருகிறது. ஒவ்வொரு திரு விழாவிலும் 3000 பேர் வரைக்கும் உணவு படைக்கப் படுகிறது. பட்டாசு, வாணவேடிக்கைகளுக்கும் குறைவு இராது. சீனர் தங்கள் புத்தாண்டுப் பிறந்தநாளில் பயன் படுத்துவதைவிடக் கூடுதலான அளவில் இந்த ஒலியும் ஒளியும் சில ஊர்களில் இருக்கும்.

சாதாரண நாட்களிலும் திருவிழாக்களிலும் மற்றவர் களைப்போல ஹரிஜனங்களும் கோயிலுக்கு வருகிறார்கள். அவர்களுக்கு எவ்விதமான தடையும் இல்லை. மலேசியா வில் சமுதாய வாழ்வில் ஹரிஜனங்களுக்கு எவ்வித அநீதியும் இழைக்கப்படுவதில்லை. அவர்கள் செல்வர் களாகவும் உள்ளனர். குறிப்பாக, தமிழ்நாட்டிலிருந்து சென்றுள்ள தலைமுடி அலங்காரக் கலைஞர்கள், தங்கள் கைத் திறமையாலும் ஈட்டியிருக்கும் செல்வத்தாலும் சமுதாயத்தில் தனி மதிப்பும் மரியாதையும் பெற்றுள்ளனர்.

கோயில்களிலேயே நகரத்தார்களின் சமுதாயக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. திருமணங்கள் கோயில் களில் நடைபெறுகின்றன. அவற்றை நடத்திவைக்கும் புரோகிதருக்கு, உரிய மந்திரங்கள் அவ்வளவாகத் தெரியாது. எனவே மந்திரங்களை ஒலிப்பதிவு செய்த நாடாக்களை இந்தியாவிலிருந்து வரவழைத்து, திருமணத் தில் உபயோகிக்கும் பழக்கம் பரவியிருக்கிறது.

மலேசியாவில் சைவம் தழைப்பதற்கு நகரத்தார் கோயில்கள் நிலைக்களனாக உள்ளன. தமிழ்ப் பண் பாட்டின் இருப்பிடமாகவும் இவை திகழ்கின்றன.

சைவ சமய, மற்றும் இந்துமத நிகழ்ச்சிகள் அனைத் திலும் நகரத்தார்கள் ஏனைய இந்தியர்களுடனும் இலங்கை யர்களுடனும் ஒத்துழைத்து வருகிறார்கள்.

ஊர்வாரியாக நகரத்தார்களின் கோயில்களையும் அவற்றில் நடைபெறும் திருவிழாக்களையும் அடுத்த பக்கத்தில் ஒரு பட்டியலில் தெரிவித்துள்ளோம்.

**தண்டாயுதபாணி கோயில்கள்**

| | | |
|---|---|---|
| 1. | அலோர் ஸ்டார் | — மாசி மகம் |
| 2 | கூலிம் | — தைப்பூசம் |
| 3. | பிறங்கு | — ,, |
| 4. | வாலப்பூர் | — வைகாசி விசாகம் |
| 5 | சுங்குரும்பை | — பங்குனி உத்தரம் |
| 6. | தைப்பிங் | — ஆடிவேல் |
| 7. | ஈப்போ | — வைகாசி விசாகம் |
| 8. | தெலுக்கான்சன் | — சித்திரா பௌர்ணமி |
| 9. | கோலாலம்பூர் | — பங்குனி உத்திரம் |
| 10. | கிள்ளான் | — திருக்கார்த்திகை |
| 11. | சாவி (நிபோங் திபால்) | — சித்திரா பௌர்ணமி |
| | பாரிட் புந்தார் நகரத்தார் நிர்வாகத்தில் உள்ளது. | |
| 12. | மூவார் | — திருக்கார்த்திகை |
| 13. | பத்து பகாட் | — தைப்பூசம் |
| 14. | தாப்பா | — ,, |
| 15. | சந்நாசிமலே | — மாசிமகம் |

**சிவன் கோயில்**

| | | |
|---|---|---|
| 16. | பிறங்கு | — தைப்பூசம் |

**செல்வ விநாயகர் கோயில்**

| | | |
|---|---|---|
| 17. | சிரம்பான் | — ஆவணி விநாயக சதுர்த்தி |

**பொய்யாத விநாயகர் கோயில்**

| | | |
|---|---|---|
| 18. | மலாக்கா | — ,, |

# (அ) கோலா லம்பூர்

கோலாலம்பூர், மலேசியாவின் தலைநகரம். இதைச் சுருக்கமாக 'கே. எல்.' என்பர்.

இந்நகரில் வாழும் பல்லாயிரம் இந்துக்களில் சரிபாதி இந்தியத் தமிழராகவும், மற்றொரு பாதியினர் யாழ்ப் பாணத் தமிழராகவும் உள்ளனர். இவர்கள் அனைவர்க்கும் பொதுவான மாரியம்மன் கோயில், மலேசியாவிலேயே பழமையான இந்துக் கோயிலாகும்

மாரியம்மன் கோயிலில் முக்கியமாக நடைபெறும் திருவிழா, நவராத்திரி. ஆறும் நாள் செலவு முழுவதையும் நகரத்தார்கள் ஏற்றுக் கொண்டு வருகின்றனர்.

நகரத்தார்க்கு உரிய தண்டாயுதபாணி கோயில், கே. எல். இன் ஒரு பகுதியான செந்தூலில் அழகாக அமைந்திருக்கிறது. இந்தக் கோயில் நிர்வாகம், ஒவ் வொரு ஆண்டும் மாறி மாறி ஒவ்வொரு கிட்டங்கிக்கும் ஒப்படைக்கப்படும். திருவுளச் சீட்டுப் போட்டு, இந்த வரிசை முறை முடிவு செய்யப்படும்.

ஒவ்வொரு கிட்டங்கியிலும் பல கடைகள் இருக்கும். எந்தக் கடைக்காரர், கோயிலை மேற்பார்ப்பது என்பது அவ்வப்போது அவர்களுக்குள் முடிவு செய்யப்படும். நாள்பட்ட கடைக்கு, இந்தப் பொறுப்பும் மரியாதையும் கொடுப்பதே வழக்கமாக இருக்கிறது. சில சமயம், பெரிய கடைக்காரர்கள் பொறுப்பை ஒப்புக்கொண்டு, நடைமுறை அலுவல்களைச் செய்துவரும் உரிமையைத் தங்கள் கிட்டங் கிக்குள் உள்ள வேறு கடை ஒன்றிடம் ஒப்படைப்பதும் உண்டு.

கடைகளின் வரவு செலவில் 100க்கு 1½ வீதமும் சொத்துக்களை வாங்கிய விலையில் 100 வெள்ளிக்கு ½ வெள்ளி வீதமும் மகமை வசூலிக்கப்படுகிறது.

கோலாலம்பூர் தண்டாயுதபாணி கோயில்மீது கவிஞர் கண்ணதாசன் அவர்கள் பின்வரும் பாடலைப் பாடியுள்ளார்கள்.

ஆலோலம் பாடுகிற வள்ளியம்மை கழுத்தில்
அணியாரம் இட்ட பெருமான்
ஆகாயம் பூமியிடை நீராவிபோல் வடிவில்
ஆதாரமான பெருமான்

மேலாளர் கீழாளர் பேதங்கள் இல்லாது
மெய்யாள வந்த பெருமான்
மின்னாகி இடியாகி மழையாகிக் காற்றாகி
விளைவாக நின்ற பெருமான்

கோலாலம்பூரில் வளர்கோன் தண்டபாணி — இவன்
கோவில் கொண்டாடு மனமே
கூற்றேதும் வாராது கொடுநோயும் சேராது
குறையாத வாழ்வு மிகுமே!

"ஓ"மென்ற சிறுமுட்டை உள்வீடு அவன் வீடு
உன்வீடும் அந்த இடமே
ஓசைக்கு மணியுண்டு பூஜைக்கு மணமுண்டு
உன் வாழ்வு கந்தன் வசமே.

நாமென்ற ஆங்காரம் நமதென்ற எக்காளம்
நடவாது வேலனிடமே
நடக்கட்டும் பார்ப்போ மென்றிருக்கட்டும் உன் உள்ளம்
நலம்யாவும் வீடுவருமே

கோமன்னன்வாழ்கின்ற கோலாலம்பூர் செந்தூர்
கொடிகட்டி ஆளவிடுமே
கொண்டாடு கொண்டாடு தெண்டாயுதத் தானே
குறையாத செல்வ மிகுமே.

## கோலாலம்பூர் - செந்தூல்
## ஸ்ரீ தண்டாயுதபாணி பதிகம்

(தத்புருஷ தேசிகர் பாலகவி இராமநாதன் செட்டியார் பாடியது)

### காப்பு

கண்டார் விரும்பிக்
கருதுகோ லாலம்பூர்த்
தண்டா யுதபாணி
தாள்மலரைக் — கொண்டாடி
நற்பதிகம் சாற்றுதற்கு
நாடித் துணைநிற்கும்
கற்பகப்பேர் கொண்ட களிறு.

### நூல்

பொன்பெருக்கும் கோலாலம்
பூரில் நகரத்தார்
முன்பெடுக்கும் ஆலயத்தே
முற்றிநிறை — அன்படுத்தார்க்
கின்பருளத் தண்டா
யுதமேந்தி எங்களிறை
துன்பொழிய நின்றான் துணை.

விரும்புவதும் அல்லால்
வெறுப்பதுவும் அல்லான்
சுரும்பர்க் கடம்பணியும்
தோளான் — விரும்புமன்பர்
வேண்டுவதை ஈய
வியன்கோலா லம்பூரை
ஆண்டுதண்ட பாணியா ஞன்.

### வாழ்த்து

மன்னுயிர்கள் வாழ்க
மருவுகோ லாலம்பூர்
தன்னில் நகரத்தார்
சார்ந்தமைத்த — பொன்னிமயக்
கோயில் விளங்கும்
குகன் தண்ட பாணியருள்
மேயினிது வாழ்கபுவி மேல்.
நலமே தழைக.

**கா. இராமநாதன் செட்டியார்**

சைவ சமயத்தை மலேசியாவில் பரப்ப திரு. கா. இராமநாதன் செட்டியார் அவர்கள் பல்லாண்டுகளாகச் செய்த பணிகள் இங்கு நினைவு கூரத் தக்கன.

இவர்கள் பள்ளத்தூரில் பிறந்தவர்கள். பி.ஏ., பி.எல். பட்டம்பெற்றுச் சென்னையில் வழக்கறிஞராக இருந்தார்கள். 1946-ஆம் ஆண்டு அளவில் மலேசியாவுக்கு வந்து 1970-ஆம் ஆண்டு அளவில் உயிர் நீத்தது வரை அவர்கள் பல சிறப்பான செயல்களில் ஈடுபட்டார்கள். 1942-இல் சீகாழியில் சைவ இளைஞர் மாநாட்டுக்குத் தலைமை வகித்தார்கள். 1944முதல் 1946வரை, சைவ சித்தாந்த சமாஜச் செயலாளராக இருந்தார்கள். இராமகிருஷ்ண மடத்தில் நிரம்பிய பற்றுக் கொண்டிருந்தார்கள். திருப்பராய்த்துறையில் சித்பவானந்த சுவாமிகள் இன்று

சீருடனும் சிறப்புடனும் நடத்திவரும் தபோவனத்திற்கு உரிய இடங்கள் திரு. இராமநாதன் செட்டியார் அவர்களுடைய முயற்சியாலும் இவர்கள் பெயரிலுமே வாங்கப் பட்டன. இவர்கள் மலேசியச் சட்டசபை உறுப்பினராகவும் கோலாலம்பூரில் நகரத்தார் சங்கத் தலைவராகவும் வழக்கறிஞராகவும் வருமானவரி நிபுணராகவும் மலேசியா இந்தியக் காங்கிரசின் தலைவராகவும் இருந்தார்கள்.

கோலாலம்பூரில் சமாஜ மாநாட்டை, இராமநாதன் செட்டியார் அவர்கள் நடத்தினார்கள். சைவ மடங்களும் சமாஜமும் வெளியிட்டுள்ள நூல்கள் மலேசியாவில் கிடைக்க ஏற்பாடு செய்தார்கள். பல நூல்களை எழுதி வழங்கினார்கள். சைவ சித்தாந்த வகுப்புக்களை நடத்தினார்கள்.

ஆங்கிலமும் தமிழும் சாத்திரங்களும் கற்று,ஒழுக்கமும் பேச்சு வன்மையும் தொண்டு மனப்பான்மையும் உள்ள சொற்பொழிவாளர்களை மலேசியாவுக்கு வரவழைத்தார்கள்.

இவர்களுடைய பணிகளுக்கெல்லாம் கோட்டையூர் க. வீ. அழ. மு. இராமநாதன் செட்டியார் (ஐயா) அவர்களும் ஏனைய நகரத்தார்களும் உறுதுணையாக இருந்திருக்கின்றனர்.

## ஏனையோர்

இன்னும் இவ்வாறு நகரத்தார் அன்பர் பலர் இத்தகைய பொதுப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். செய்தித் துறையில் பெரும் பொறுப்பேற்றுள்ள திரு. முருகு சுப்பிரமணியம், வானொலி தொலைக்காட்சி நிறுவனங்களில் பணிபுரியும் நகரத்தார் இளைஞர் ஆகியோருடைய சைவப் பணிகளும் குறிப்பிடத்தக்கன. எழுத்தாளராக இருந்து சைவ சமயத்தை ஊக்குவிப்பவர்களும் உள்ளனர்.

## (ஆ) பினங்கு

1938-ஆம் ஆண்டில் சுங்குரும்பை பெ. நா. மு. முத்துப் பழநியப்பச் செட்டியார் ஜே. பி. அவர்கள் 'மலேயாவின் தோற்றம்' என்ற நூலை எழுதினார்கள். அதில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளாாகள்.

"பினங்கு தண்ணீர் மலையாண்டவரின் அடிவாரக் கோயில் 1857-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12-ஆம் நாள் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களால் நிறுவப் பெற்றது இவ்வாலயத்தின் மேற்புறம் அமைந்துள்ள குன்றும் பூங்காவும் இயற்கையின் எழிலைக் காட்டுகின்றன. மேற்புறம் ஓடிவரும் ஆற்றின் அண்மையில் அவ்வாற்றைத் தனக்குள் அடக்கிய தோட்டம் ஒன்றுண்டு. அதில் நகரத்தார் விழாக்காலங்களில் தங்குவதற்காக ஓர் அழகிய கட்டிடமும் நந்தவனமும் அமைத்திருக்கிறார்கள். இவ் வியற்கைத் தோற்றங்களின் எல்லைக்குள் மயிலேறும் பெருமானுக்கு அமைக்கப் பெற்றிருக்கிறது, பெரியதோர் ஆலயம். அதனுள் பழநி மலையில் இருப்பதைப்போல பார்வதி பாலன், பத்தருக்குற்றவன், பால தண்டாயுதன், தண்ணருட் சீலன், தண்ணீர்மலை யாண்டவன் தங்கி யிருக்கின்றான். இச் சிறப்பு வாய்ந்த இளங்குமரனுக்கு ஏராளமான விழாக்களை நகரத்தார்கள் நடத்துகிறார்கள். அவற்றுள் தைப்பூச விழாச் சிறந்தது. அவ்விழாவன்று பினங்கு நகரத்திலுள்ள மக்கள் எல்லோரும் அங்கு வந்து கூடி விடுவர். அவர்களோடு வெளியூர் அன்பர்கள் பலர் வந்து சேருவர். இவர்கள் அனைவரையும் வரவேற்று உபசரிப்பார்கள் நாட்டுக்கோட்டை நகரத்தார்.

" இவ்விழா நான்கு நாட்கள் கொண்டாடப்பெறும். அந்நாட்களில் தைப்பூசத்துக்கு முதல்நாள் காலை பினாங்கு ஸ்ட்ரீட்டில் நகரத்தார்களால் அமைக்கப் பெற்றுள்ள தனது ஆலயத்திலிருந்து சக்தி வடிவேலன் வெள்ளி ரதமேறி வீதிகளில் உலாக் கொள்வான். அப்போது மாசற்ற வெண்டாமரை மலரைப்போன்று பல வயிர அணிகளால் அலங்காரங் கொண்ட கந்தனை அன்பர்கள் பல்லோர் சூழ்ந்து வருவர். சிலர் காவடி தூக்குவர்! சிலர் தேவார திருவாசகங்களை ஓதுவர்! சிலர் பஜனை பாடுவர்! சிலர் பூதங்களைத் தூக்கி ஆடுவர்! பலர் பல வாத்தியங்களை முழங்குவர்! பலர் ஆலவட்டம், சுருட்டி, குடை, தோரண விருதுகளைப் பிடிப்பர்! பல போலீஸ் வீரர் எல்லாவற்றையும் பாதுகாப்பார். அத்துடன் ஒரு தெருச் சந்திப்பில் புறப்பட்ட இரதம் மறு சந்திப்பைச் சேரும் வரை அந்த வழியில் கார், ரிக்ஷா, டிராம், பஸ்கள் வராமல் தடுப்பர்! எலக்ட்ரிக், டிராம் கம்பெனிக்காரர்கள் மின்சாரக் கம்பிகள் இரதத்தின் மேற்படாவண்ணம் தங்கள் ஆட்களைக் கொண்டு தூக்கிக் கொடுப்பர்! இவ் வைபவங்களோடு இரதம் செல்லும் வீதிகள் எங்கும் முனிசிபாலிட்டியார் தண்ணீர் தெளிப்பர். இத்தகைய சிறப்புடன் விழாக் கொண்ட கந்தன் பகற்போதில் தண்ணீர் மலையிலுள்ள தனது ஆலயத்தைச் சார்ந்து தன்னை நாடி வரும் அன்பர்களுக்குத் தண்ணருள் சுரப்பான். அவனை நாடிவரும் அன்பர்களுக்கும் விழாக்காண வரும் மேலோர்களுக்கும் அங்கு நகரத்தார்கள் அன்னம் படைப்பர்!"

" பினாங் காலிங் " என்ற ஆங்கில நூலில் பின்வரும் தகவல் கொடுக்கப்பட்டுள்ளது :-

" இந்தியர்கள் பினாங்கில் பல கோயில்களை நன்றாகக் கட்டியிருக்கிறார்கள். தண்ணீர் மலைச் சாலையிலுள்ள நகரத்தார் கோயில்தான் இவற்றுள் பிரபலமானது. இங்கு நடைபெறும் தைப்பூசத் திருவிழாவுக்கு மலேசியா முழு

வதிலுமிருந்து இந்துக்கள் மட்டுமின்றி எல்லா இனத்தாரும் மதத்தாரும் மொழியாளரும் வருகின்றனர். தங்கள் உடலைத் தாங்களே துன்புறுத்தி வேல் முதலியவற்றைக் குத்திக்கொண்டு ஏராளமான பேர் காவடி எடுக்கிறார்கள்.

பிட் தெருவில் சுப்பிரமணியர் கோயில் இருக்கிறது. இதன் கோபுரத்துச் சிற்ப வேலைப்பாட்டைப் பார்த்தால் தென்னிந்தியாவிலுள்ள ஒரு கோயிலைக் கண்ட உணர்ச்சி நமக்கு ஏற்படும் ".

பினாங்கில் தைப்பூசத்தன்று, சுப்பிரமணியர் திருவுலாவாக எடுத்துச் செல்லப்படும் 5.4 கி.மீ. தொலைவிலும்கூடி 2000, 3000 தேங்காய்களை, நடைபாதையில் செம்மையாகவும் கலையழகோடும் அடுக்கி வைத்திருந்து, சீனர்கள் உடைக்கின்றனர். சீனருள் மிகவும் ஏழைகளாக இருப்பவர்கள் சிதறிய தேங்காய்த் துண்டுகளைப் பொறுக்கித் தின்பர். தேங்காய்களை உடைத்த ஒரு சில விநாடிகளுள் போலீசாரும் நகராண்மைக் கழகத்து ஊழியர்களும் தேங்காய்த் துண்டுகளையும் சிதறிய ஓடுகளையும் அள்ளி அப்புறப்படுத்திவிடுவதோடு, தேங்காய்த் தண்ணீரை, துணி கொண்டு உறிஞ்சி, தெருவைச் சுத்தம் செய்வர்.

சீனர்கள் காவடி எடுத்தும் பிற வகைகளிலும் தைப்பூசத்தில் கலந்து கொள்வதைப் பார்ப்பவர்கள் அவர்களும் இந்துக்களே என்று எண்ணக்கூடிய அளவுக்கு, சீனர்கள் இரண்டறக் கலக்கின்றனர்.

அரசாங்கத்தின் ஒவ்வொரு துறையும் இத்திருவிழா இனிது நிகழ ஒத்துழைப்பது பாராட்டுக்கு உரியது. பாங்குகள் அன்று விடுமுறை விடுகின்றன.

பிரிட்டிஷ் போர்ப்படையில் பணிபுரிந்த ஒரு கூர்க்கா, பினாங்கில் ஒரு சிவன் கோயில் கட்டினார். பிறகு, அதை நிர்வகித்துவரும் பொறுப்பை நகரத்தார்களுக்கு ஒப்

...MALA PU...

படைத்தார். பிராமணக் குருக்கள் இங்கு பூசைகளை நடத்துகிறார்கள். நகரத்தார்கள் இக்கோயிலை விரிவாகக் கட்டி ஏராளமான அறக்கட்டளைகளை ஏற்படுத்தியுள்ளார்கள். சிவன் கோயில் நகர்க்குள்ளும், தண்ணீர்மலையான் கோயில் 10கி.மீ. (6மைல்) தொலைவிலும் உள்ளன.

பினாங்கு மலையாண்டி என்ற தலைப்பில் அரசவைக் கவிஞர் கண்ணதாசன் பின்வருமாறு பாடியுள்ளார் :—

வாஞ்சையுடன் மீனாட்சி
மதுரையிலே தேடுகிறாள்
மகன் முகத்தைக் காண வில்லை !

வண்ணமயில் விசாலாட்சி
காசியிலே வாடுகிறாள்
மைந்தனிடம் கருணை யில்லை !

காஞ்சிநகர்க் காமாட்சி
மகன்முகத்தைக் காண்பதற்குக்
கவலுகிறாள் கிட்ட வில்லை !

காடுநட மாடுசிவன்
கன்னிஇளந் தென்னகத்தில்
கண்கலங்கல் தீர வில்லை !

தீஞ்சுவைத்தேன் பூமலரும்
தெளிவான பினாங்குநகர்
தேடியவன் வந்துவிட் டான் !

திருக்கோவில் கொண்டபடி
மலையடியில் சிலையானான்
தென்னாடன் தண்ட பாணி !

பிஞங்கு தண்ணீர் மலையானைப் பற்றி, காரைக்குடி அழகப்பா ஆசிரியர்பயிற்சிக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் மா. கண்ணப்பன் அவர்கள் பின்வரும் பாடலைப் பாடியுள்ளார்கள்.

துள்ளி விளையாடும் சின்னப்பிள்ளைமுகம் மறந்து
வெள்ளி விளையாடும் மலேயா சீமை தன்னையடைய
நாகபட்டினத்து கடலில் நங்கூரம் பாய்ச்சி நிற்கும்
செட்டிக் கப்பலுக்குத் துணையாகும் செந்திலாண்டவனே

செந்தில் ஆண்டவனே! ஐயா! செந்தில் ஆண்டவனே
செந்தில் ஆண்டவனே! ஐயா! செந்தில் ஆண்டவனே

கப்பல் ஏறுகையில் முதலில் கடல்முகம் தெரியும்
கண்களில் நீரோடு நிற்கும் மனைவிமுகம் தெரியும்
அன்னைமுகம் தெரியும் அன்புப்பிள்ளைமுகம் தெரியும்
அந்தமுகங்களிடைச் செந்தூர் கந்தன்முகம் தெரியும்!

செந்தில் வடிவேலா ஐயா செந்தில் வடிவேலா
வந்தவினை தீர்க்கும் எங்கள் செந்தில் வடிவேலா!

பினாங்குத் துறைமுகத்தைக் கப்பலும் பிடித்துவிட்டதையா
கப்பல் அடியினிலே கூட்டம் கண்டிட வந்திருக்கு
தண்ணீர்ப் பூமலையில் நிற்கும் தண்ணிமலையானே
எங்கள்
பெண்டு பிள்ளைகளைக் காக்கும் பெரியமலையானே!

தண்ணிமலையானே நெஞ்சின் தாகம் தீர்ப்பானே
கண்களில் நீர்வழிய நாமும் கைகள் குவிப்போமே!

தைப்பூச நாளினிலே அவனும் தங்கரதமேறி
நகரத்தை பார்க்க தேரில் நகர்ந்து வந்திடுவான்
பார்க்கு மிடமெல்லாம் தமிழர் பக்திமுகம் தெரியும்
காவடி ஆடிவரும் சீனர் காலடியும் தெரியும்!

கந்தனுக்கு வேல் வேல்—செந்தூர் வேலனுக்கு வேல் வேல்
கடலே தாண்டி — எடுக்கும் காவடிக்கு வேல் வேல்!
கந்தனுக்கு வேல் வேல்! காவடிக்கு வேல் வேல்!
கந்தனுக்கு வேல் வேல்! காவடிக்கு வேல் வேல்!

## (இ) மலாக்கா

மலாக்கா, மலாய் நாட்டின் பழமையான நகரம்; செல்வச் செழிப்புள்ள நகரம். "மலேசியாவில் நகரத்தார் களின் கோட்டைகளுள் ஒன்று" என்று இத்துறைமுக நகரத்தைப் பற்றி ஓர் ஆங்கிலேயர் எழுதியிருக்கிறார்.

1900-ஆம் ஆண்டில் நகரத்தார்கள் மலாக்காவில் கோயில் கட்ட விழைந்தனர். ஓராயிரம் ஆண்டுகட்கு முன் தமிழ்நாட்டிலிருந்து குடியேறி மலாக்காவில் வாழ்ந்து வரும் மலாக்காச் செட்டியார் என்ற இனத்தவர் (தமிழ் மொழியை மறந்து மலாய் மொழியைப் பேசிவருகின்ற போதிலும்) சைவ சமயத்தைக் கைவிடவில்லை. அவர்கள் நகரத்தார்களை அணுகி, "புதிய கோயில் கட்டுவதற்குப் பதிலாக எங்களுடைய கோயிலை எடுத்து, நீங்கள் நடத் தலாம்" என்றனர். அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, நகரத்தார்கள் பொய்யாத விநாயகர் கோயிலைப் பேணியும் நிர்வகித்தும் வருகின்றனர். இக்கோயில் டச்சுக்காரர்களின் ஆட்சிக்காலத்தில் அவர்கள் ஒதுக்கிய இடத்தில் 1781-இல் கட்டப்பட்டதாகத் தெரிகிறது.

நகரத்தார்கள் இக்கோயிலில் புதிய மண்டபங்கள் கட்டியிருப்பதோடு, சிவபெருமானுக்கு ஓர் உட்கோயிலும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். 1,000 வெள்ளி செலவு செய்து ஆண்டுதோறும் மாசிமகம் கொண்டாடுகிறார்கள். இதனால் இக்கோயில் 'நகரத்தார் கோயில்' என்று வழங்கப்

படுகிறது. மலாக்காச் செட்டியார் சமூகத்து இளைஞர்களின் விருப்பப்படி 'மலாக்காச் செட்டியார் சமூகத்துக்குச் சொந்தமான கோயில்' என்ற அறிவிப்புப் பலகை 1966-இல் போடப்பட்டிருக்கிறது.

இக்கோயிலிலிருந்து சுப்பிரமணியர் (தண்டாயுதபாணி) உற்சவ விக்கிரகத்தை நகரத்தார்கள் மாசி மகத் திருவிழாவன்று ஆறுமைல் தொலைவிலுள்ள சந்நாசிமலை ஆண்டவர் கோயிலுக்கு இரதத்தில் எழுந்தருளவும் மீண்டும் திரும்பவும் ஏற்பாடு செய்கின்றனர். அன்று 5,000 பேருக்கு உணவு படைக்கப்படுகிறது.

மலாக்காவில் சைவத்தையும் தமிழையும் வளர்த்தவர்களில் இராமச்சந்திரபுரம் உ.அரு.அருணாசலம் செட்டியார் (1901-1951) குறிப்பிடத்தக்கவர் ஆவார். 1949-இல் யான் மலாக்காவில் இவர் விருந்தாகத் தங்கியிருந்தேன்.

## (ஈ) சந்நாசிமலை

சந்நாசிமலையில் ஒரு வங்காளி, சிவலிங்கம் ஒன்றைப் பிரதிட்டை செய்தார். அதற்குப் பூசைகள் நடத்திவர வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, நகரத்தார்கள் ஒரு குழு அமைத்து தங்களுக்குள் நிதி திரட்டி, சொத்துக்கள் வாங்கினர். வெள்ளி ரதமும் செய்தனர்.

ஒன்பது ஏக்கர் பரப்புள்ள நிலத்தை விலைக்கு வாங்கி அதில் ஒரு பகுதியில் கோயில் உபயோகத்துக்காக நந்தவனம் உண்டாக்கப்பட்டிருக்கிறது. கோயில் நிர்வாகச் செலவுகளை ஈடுசெய்ய, மூன்று ஏக்கர்ப் பரப்பில் ரப்பர் மரங்கள் பயிரிடப்பட்டிருக்கின்றன. கோயிலைப் புதுப்பிக்கவும் விரிவாக்கவும் நகரத்தார்கள் இரு நூறாயிரம் வெள்ளி செலவிட்டுள்ளனர்.

## (உ) மூவார்

நகரத்தார்கள் இவ்வூரில் கட்டியிருக்கும் தண்டாயுத பாணி கோயில் மிக அழகானது. அறுபடை வீட்டுச் சித்திரங்கள் கண்ணைக் கவரும் வகையில் வனப்பாக அமைந்துள்ளன. நடராசர்-சிவகாமி அம்மையும் நால்வர் திருவுருவமும் ஐம்பொன்னால் ஆகியவை. திருக்கார்த்திகை விழா இங்கு கொண்டாடப் பெறுகிறது

ஜாலன் முகமடியா என்னும் வீதியில் 1898-ஆம் ஆண்டு அளவில் இக்கோயில் கட்டப்பெற்றது. கடைக் குத்தக்கவாறு, நகரத்தார்கள் ஆஸ்தி வரி எழுதிப் பணம் சேர்த்துச் சிறிய அளவில் கோயிலை அமைத்தனர்.

1922-இல் மேற்படி வீதியிலுள்ள கோயிலை விடுத்துப் புதியதொரு கோயில் பெரிய அளவில் சாலன் மரியாம் என்னும் வீதியில் கட்டப்பெற்றது. கும்பாபிஷேகச் செலவு உட்பட, அந்நாளில் திருப்பணிக்கு ஓர் இலட்சம் வெள்ளி ஆயிற்று.

திருக்கார்த்திகையன்று அனைவர்க்கும் அன்னதானம் வழங்கப்பெறும். இறைவனுடைய திருவுருவம் முக்கிய வீதிகளில் திருவுலா வரும். கரக ஆட்டம், நாதஸ்வரம் ஆகிய நிகழ்ச்சிகள் உண்டு. இரண்டாம் உலகப் போர்க் காலத்திலும் இவ்விழா நடைபெற்றது.

ஐப்பசி மாதத்தில் நகரத்தார் மகமை எழுதுவர். கார்த்திகைப் பூசையில் ஏலத்தொகை வசூலிக்கப்பெறும்.

இரண்டு இலட்சம் வெள்ளி மதிப்புள்ள நகைகள், வீடுகள், இடங்கள் உள்ளன.

1944-இல் ஜப்பானியர் வீசிய குண்டால், இரதக் கொட்டகை சேதமுற்றது. நகரத்தார் ஒருவர் உயிரிழந்

தார். மூல விக்கிரகம் பின்னமடைந்தது. 1946-இல் தமிழ்நாட்டிலிருந்து புதிதாகத் தண்டாயுதபாணி விக்கிரகம் வரவழைக்கப்பெற்றுச் சிறிய அளவில் குடமுழுக்கு விழா நடத்தப்பெற்றது.

1973-இல் 30,000 வெள்ளி செலவில் இக்கோயில் புதுப்பிக்கப்பெற்றது. ஆறுபடை வீடுகள் மேல்தளத்தில் மிக அழகாக வரையப் பெற்றன. மதில் சுவர்ப் பகுதியில் தேவாரம், திருப்புகழ், கந்தரலங்காரம் முதலிய நூற்பாக்கள் எழுதப்பெற்றுள்ளன. சம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகர் திருவுருவங்களும் நடராசர் — சிவகாமி திருவுருவங்களும் தமிழ்நாட்டிலிருந்து செய்து வரப்பெற்று சிறப்பான முறையில் குடமுழுக்கு நடத்தப்பெற்றது.

கவியரசர் கண்ணதாசன் பின்வரும் பாடலைப் பாடியிருக்கிறார் :—

"மூவார் முருகன் முன்னிலையில்
முழந்தாள் இட்டு வேண்டியவர்
மூவார் இறவார் பிணி இல்லார்
முதலும் முடிவும் ஒன்றுவார்
ஆவார் வாழ்வார் உயர்வார் என்று
அறிவோம் என்போம் அவன் காவல்
பூவார் சோலைப் புனற் காவல்
பொய்யாக் காவல் புகழ்க் காவல்
நாவால் அவனைப் பாடுதிரோ
நாளும் நலமே நாடு திரோ"

விரையாச்சிலை ஊரினரும் சைவ சமயப் புலமை மிக்கவருமான புலவர்மணி சித்தாந்த வித்தகர் முரு. பழ. இரத்தினம் செட்டியார் அவர்கள் மூவாரில் இருந்து கொண்டு, மலேசிய நாடெங்கும் சைவப்பயிரை வளர்த்து வருகிறார்கள்.

## (ஊ) அலோர் ஸ்டார்

கிட்டா மாநிலத் தலைநகரான அலோர்ஸ்டாரில் நாட்டுக்கோட்டை நகரத்தார் பெருமக்களால் நிறுவப் பெற்றுள்ள ஸ்ரீ தெண்டாயுதபாணி கோயிலில் கோயில் கொண்டுள்ள ஸ்ரீ தெண்டாயுதபாணி மீது ஏற்கெனவே வருகை தந்துள்ள திருவையாறு அறுபத்து மூவர் மடத்துத் தலைவர் திருப்பெருந்திரு பண்டித சித. நாராயணசுவாமி அவர்கள் 5 பாடல்கள் கொண்ட பஞ்சகம் ஒன்று அழகுறப் பாடியுள்ளார்கள். 8—8—69-இல் அலோர் ஸ்டாருக்கு வருகை புரிந்த சித்தாந்த சைவவித்தகர், விரிவுரை அரசு, பாலகவி, சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் அவர்கள் ஸ்ரீ தெண்டாயுதபாணி மீது 10 பாடல்கள் கொண்ட பதிகம் ஒன்று பாடியருளினார்கள். அவற்றில் சில வருமாறு :—

### காப்பு

மணிமருவு மாடங்கள்
        மன்னுமலோர் ஸ்டாரில்
அணிகிளர்தண் டாயுதக்கை
        அண்ணல் — இணையடியைப்
போற்றிப் பதிகம்
        புகலத் துணைநிற்கும்
சாற்றுமத வாரணத்தின் தாள்.

### நூல்

அமரர் பணிந்து நிதம்பரவும்
        அண்ணல் கடார அலோர்ஸ்டாரில்
குமர வடிவங் கொண்டிருந்துங்
        கோலத் துறவி யாயமர்ந்து

நமரும் பிறரும் நாள் நாளும்
நன்மை பெருகி இன்புறுவான்
சமரம் புரிபொன் தண்டமொன்று
தாங்கி யிருந்தான் தகவுறவே.

மிக்கார் ஒருவர் இல்லாது
விளங்கும் குமரன் அலோர்ஸ்டாரில்
புக்கார் வத்தில் அடியடைந்து
போற்றித் தொழுவார் தமக்கெல்லாம்
மிக்கார் செல்வம் பெருங்கல்வி
மேன்மைப் போகம் சந்தானம்
எக்கா லமும்நோய் இல்வாழ்க்கை
எல்லாம் ஈவான் ஏத்துமினே.

### வாழ்த்து

அண்டர் பரவும்
அலோர்ஸ்டார் நற்பதியில்
தண்டுகைக் கொண்ட
சரவணனூர் — மண்டுபுகழ்ப்
பாதபலர் வாழ்க
பரவும் அடியார்கள்
நீதமுடன் வாழ்க நிலைத்து.

## (எ) ஈப்போ

நகரத்தார்கள் இந்நகரில் 1904-இல் தண்டாயுதபாணி கோயில் கட்டினர். அந்த ஆண்டு தொடங்கி, இக்கோயிலில் வைகாசி விசாக விழா இனிது நடைபெற்று வருகிறது. விசாகத்தன்று வேலன் இரதமேறிப் பவனி வரும் காட்சியைக் காண உள்ளூர் மக்கள் அனைவரும் திரளுவர், அயலூர்களிலிருந்தும் நகரத்தார்களும் சைவ நன்மக்களும் முருக பக்தர்களும் வருவார்கள்.

சித்தாந்த சாத்திரங்களை நன்கு கற்றுப் புலமை பெற்றிருந்த சித்தாந்த மணிமொழிச் செல்வர் சிவநெறி தழீஇய செம்மல் மகிபாலன்பட்டி சி. இராம. இராமசாமிச் செட்டியார் அவர்கள் முப்பதாண்டுகளுக்கு மேலாக ஈப்போவில் வாழ்ந்து, மலேசியாவெங்கும் சைவ சமயம் தழைக்க உறுதுணையாக இருந்துவந்தார்கள்.

## ஏனைய ஊர்கள்

**சிரம்பான் :**

இங்கே உள்ளது செல்வ விநாயகர் கோயிலாகும்; ஆவணி மாதம் விநாயக சதுர்த்தியில் திருவிழா உண்டு.

**சிகாமட் :**

இங்குள்ள தண்டாயுதபாணிக்குச் சிங்காரவடிவேலர் என்று பெயர். சித்திரா பௌர்ணமியில் திருவிழா உண்டு.

**கிள்ளான்:**

இங்கே உள்ள தண்டபாணி கோயில் அண்மையில் புதுப்பிக்கப்பெற்றுக் குடமுழுக்கு விழா நடந்தது. திருக்கார்த்திகையில் திருவிழா உண்டு.

**தெலுக்கான்சன்:**

இங்கே தண்டபாணி மிகஅழகியது; சித்திரா பௌர்ணமியில் திருவிழா நாடபெறும்.

**கிபோங் திபால்:**

பல ஊர்களுக்கும் மையமாக இங்குள்ள சாவிச் சுப்பிரமணியர் கோயில் விளங்குகிறது. சித்திரா பௌர்ணமியில் திருவிழா உண்டு.

**தைப்பிங்:**

இங்கே உள்ள தண்டபாணி கோயிலில் ஆடிவேல் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகிறது.

**கலிம்:**

இங்குள்ள தண்டபாணி கோயிலில் திருக்கார்த்திகை விழா நடைபெறுகிறது.

**சுங்குரும்பை:**

இங்குள்ள தண்டபாணி கோயிலில் பங்குனி உத்தரத் திருவிழா கொண்டாடப்பெறும்.

**வாலப்பூர்:**

இங்கே அம்மன் கோயில் இருக்கிறது; விசாகத் திருவிழா நடைபெறுகிறது.

**பத்துப்பகாட்:**

இங்கே தண்டபாணி கோயில் உள்ளது; வைகாசி விசாகத்தில் திருவிழா நடைபெறும்.

**மெர்சிங்:**

இங்கே தண்டபாணிகோயில் ஒன்றுள்ளது. திருவிழா இல்லை

# முடிவுரை

மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந் தத்துக்கு ஒரு பேராசிரியக் கட்டில் அமைக்கப் பெற்றிருக் கிறது. மலேசியாவாழ் தமிழர்கள் அனைவரும் மூன்று இலட்சம் ரூபாய் வழங்கி இப்பேராசிரியக் கட்டிலை நிறுவ வழி வகுத்தனர். இதற்காக நன்கொடை வழங்கியதிலும் இம்முயற்சியில் ஈடுபட்டதிலும் நகரத்தாரின் பங்கு பெரிது.

எல்லாத் திருவிழாக்களிலும் அன்னதானம் மிகவும் முக்கியமான நிகழ்ச்சியாகும். ஒரு கோடிக்கு மேற்பட்ட சொத்துக்கள் இக்கோயில்களுக்கு உண்டு. சுருங்கச் சொன்னால் மலேசியாவின் வடகோடியிலிருந்து தென் கோடிவரை உள்ள முக்கிய நகரங்களில் நகரத்தார் திருப்பணியைக் காணலாம்

கோலா லம்பூரில் நகரத்தார் தண்டபாணி உயர் நிலைப்பள்ளி ஒன்று நடைபெறுகிறது. மலேசியாவில் நடைபெறும் பொதுநலப்பணிகள் பலவற்றிற்கு நகரத்தார் நன்கொடை அளித்துள்ளனர். நகரத்தார் கட்டுவித்துள்ள கோயில்கள் மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் அவர்கள் செய்துள்ள திருப்பணித் தொண்டுகளை என்றென்றும் விளக்கி நிற்கும் என்பதைக் கூறவேண்டுவதில்லை.

# 8. தாய்லந்து

1860 முதல் நகரத்தார்களுக்கும் தாய்லந்து (என்ற சயாம்) நாட்டுக்கும் தொடர்பு இருந்து வருகிறது.

இந்நாட்டின் தலைநகரம் பாங்காக். இந்நகரின் நடுப் பகுதியான சீலம் சாலையில் 1890-ஆம் ஆண்டு அளவில் கட்டப்பட்ட மாரியம்மன் கோயில் இருக்கிறது.

இக்கோயிலைப் பற்றி 4—4—1971 - இல் திரு. கே. ஆர். என். சாமி என்பவர் பாங்காக்கில் மாரியம்மன் கோயில் என்ற தலைப்பில் பின்வருமாறு எழுதியிருக்கிறார் :—

"குருக்கள் தமிழ்நாட்டவர். அவருடைய ஊர் மயூரம். பாங்காக்கில் இந்தக் கோயில் எப்படிக் கட்டப் பட்டது, யாரால், எப்போது? என்று நான் அவரைக் கேட்டேன்."

"19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் நகரத்தார்கள் இந்நகரில் வாழ்ந்தனர். ஒரு கோயில் கட்ட, தங்களுக்கு இடத்தை மானியமாக வழங்குமாறு சயாம் நாட்டு மன்னர் சவுலங்காணை வேண்டினர். அரசர் உடனே இந்த இடத்தை வழங்கி, இடத்துக்கோ அல்லது அதில் கட்டப்படும் கட்டிடத்துக்கோ வரி செலுத்த வேண்டியதில்லை என்று ஆணை பிறப்பித்தார். அப்போது அரண்மனையும் நகரின் நடுநாயகமான பகுதியும் இக்கோயிலிலிருந்து நெடுந் தொலைவில் இருந்தன. கடந்த 80 ஆண்டுகளில் பாங்காக் நகரம் இக்கோயிலை நோக்கி வளர்ச்சியடைந்திருக்கிறது.

கோயிலைச்சேர்ந்த 12,000 சதுர அடி பரப்பு உள்ள பகுதி தான் இன்று பாங்காக்கிலேயே அதிகமான விலைகொடுத்து யாவரும் வாங்குவதற்கு விரும்பக்கூடிய இடமாக உள்ளது.”

இந்தியன் ஓவர்சீஸ் பாங்கின் பாங்காக் கிளை மேலாளர் திரு. ஆர். வினைதீர்த்தன் (ஆர். வி. தான்) 10—9—1971-இல் இந் நூலாசிரியருக்குப் பின்வருமாறு எழுதியிருக்கிறார் :—

“நகரத்தார்களின் எண்ணிக்கையானது பாங்காக்கில் ஒரு காலத்திலும் 30, 40க்குமேல் இருந்ததில்லை. அவர்களுடைய கிட்டங்கியிலேயே பிரார்த்தனை அறை அமைத்துத் தண்டாயுதபாணியை வழிபட்டு வந்தனர். பிறகு ஒரு கோயில் கட்ட முடிவுசெய்து அரசனை, இடம் கேட்டனர். உடனே இடம் கிடைத்துவிட்டது. கோயில் அமைக்கத் திட்டம் தீட்டியபோது, தங்களுடைய பாங்காக் மனைவியர் விருப்பத்தையும் மாரியம்மனை வழிபடும் படையாச்சிகள் (என்ற தமிழ் இனத்தார்) பாங்காக்கில் ஏராளமாக இருப்பதையும் கருதி, மாரியம்மன் கோயிலைக் கட்ட முன்வந்தனர்.

இக்கோயிலைப்பற்றி 1951-இல் அடைக்கப்ப செட்டியார் என்பவர் ஒரு நூலை வெளியிட்டிருக்கிறார். நம் ஆராய்ச்சிக்குத் தேவையான விவரங்கள் அந்த நூலில் இல்லை.

# 9. தெற்கு வியட்நாம்

இந்தோ சீனு என்ற பெயரில் பிரெஞ்சு ஆட்சியில் சில நூற்ருண்டுகள் இருந்த நாட்டின் ஒரு பகுதி தெற்கு வியட்நாம் என்ற பெயரில் இப்போது தனிநாடாக உள்ளது. இதுதான் இந்தோ சீனுவின் வளமான பகுதி. இந்நாட்டின் தலைநகரம் செய்கோன்.

பௌத்த சமயத்தவர் பெரும்பாலாக உள்ளதும் கிறிஸ்தவர்கள் ஆட்சியில் அமைந்ததுமான இந்த நாட்டில் நகரத்தார்கள் இந்து மதத்தைப் பரப்பியும் பேணியும் வருகின்றனர்.

1880-ஆம் ஆண்டு அளவில் செய்கோனில் நகரத்தார்கள் தண்டாயுதபாணிக்குக் கோயில் கட்டினர். இக்கோயிலுக்கு உள்ள நகைகள், சொத்துக்கள் ஆகியவை 1979-ஆம் ஆண்டு விலைவாசியில் இந்திய ரூபாய் ஆறு கோடி மதிப்பு உள்ளது.

இந்தச் சொத்துக்களிலிருந்து கிடைக்கும் வருவாயைக் கொண்டு நாள்தோறும் நான்கு காலப் பூசையும் ஒவ்வொரு மாதமும் கார்த்திகை முதலிய சிறப்பான நாட்களும் ஆண்டுக்கு ஒருமுறை திருக்கார்த்திகை, தைப்பூசம் போன்ற பெரிய திருவிழாக்களும் நடத்தப்படுகின்றன.

நிறைந்த வருமானம் தங்குதடையின்றிக் கிடைத்து வருவதால், இக்கோயில் சீரிய முறையில் கண்காணிக்கப் பெற்று வருகிறது. பூசைகள் தமிழ்நாட்டுப் பண்பிலிருந்து அணுவளவும் வழுவாத வகையில் நடத்தப் பெறுகின்றன.

தைப்பூச விழாவுக்குச் சுவாமி நகர்வலம் வருவது நலந்தரு காட்சியாகும். இத் திருவிழாவில் பயன்படுத்துவதற்காக 1933-ஆம் ஆண்டு அளவில் செட்டி நாட்டில் செய்து ஒரு வெள்ளித்தேர் செய்கோனுக்குக் கொண்டு வந்து இணைக்கப்பெற்றது.

முக்கியமான நாட்களிளெல்லாம் செய்கோன் நகரத்தார்கள், அங்குள்ள ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கி வருகிறார்கள்.

சைவ மரபு தழைத்தோங்க, செய்கோன் நகரத்தார்கள் ஒவ்வொரு திங்கட்கிழமையும் சிவபுராணம் படித்துக் கூட்டுவழிபாடு நடத்தி வருகிறார்கள். சைவ சமய குரவர் நால்வருக்கும் திருவாரூர் தட்சிணாமூர்த்தி சுவாமிகட்கும் குருபூசை நடத்தி அந்நாட்களில் ஏழைகளுக்கு அமுது படைக்கிறார்கள்.

திருவாரூர் வன்மீகபுரத்தில் உள்ள தட்சிணாமூர்த்தி சுவாமிகள் சமாதிக் கோயில் நிகழ்ச்சிகளிலும் செய்கோன் நகரத்தார்களுக்குப் பெரும் பங்கு உண்டு.

செய்கோனில் உள்ள புத்தர் கோயில்களுக்கும் நகரத்தார்கள் தாராளமாக நிதி வழங்கி வருகிறார்கள்.

# 10. இந்தோனேசியா

பவளம், முத்து வாணிபங்களில் பல நூற்றுண்டுகளாக நகரத்தார் ஈடுபட்டு வந்திருக்கின்றனர். இப்பொருள்களைக் குறிக்க, பவளம், முத்து என்ற தமிழ்ச் சொற்களே இன்றளவும் இந்தோனேசிய நாட்டில் வழங்குகின்றன.

இந்தோனேசியத் தீவுகளில், பரப்பளவால் இரண்டாவது இடத்தையும் செல்வ வளத்தால் முதலாவது இடத்தையும் பெற்றிருப்பது சுமத்திரை என்ற தீவு ஆகும். இதன் தலைநகரான மைடான் டில்லியிலும் அதைச் சுற்றியுள்ள தஞ்சம்பாலை, கேந்தான், திப்பன் தங்கி என்ற சிற்றூர்களிலும் நகரத்தார்கள் தொழில்செய்து வருகின்றனர்.

மைடான் டில்லியில் தமிழ்நாட்டுப் பாணியில் தண்டாயுதபாணிக்கு ஒரு கோயில் கட்டிய பெருமை நகரத்தார்க்கு உரியது. அந்நாட்டில் கருங்கல் கிடையாமையால், கோயிலின் மூலப் படிமம் வெள்ளைக் கல்லால் ஆக்கப்பெற்றிருக்கிறது. விழாப் படிமம் (உற்சவர்) மட்டும் வெண்கலத்தால் அமைந்திருக்கிறது.

கோயிலில் நாள்தோறும் இரண்டு காலப் பூசை நடைபெறுகிறது. தைப்பூசம் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகிறது. அப்போது இறையுருவம் மரத்தேரில் ஏற்றப்பட்டு ஜலஹிந்து, ஜலமஜீது, ஜலகேசவன் என்ற நெடுஞ்

சாலைகளின் வழியாக வீதி வலம் வருவது வழக்கம். ஏராளமான ஏழைகளுக்கு அன்று சோறு படைக்கப் பெறுகிறது.

சுமத்திரா தீவில் உள்ள சீனர்களும் வட இந்தியர்களும் இக்கோயிலுக்கு வந்து வழிபடுகின்றனர். தைப் பூசத்தன்று அரசாங்க அலுவலகங்களில் பணிபுரியும் இந்தியர் அனைவருக்கும் விடுமுறை கொடுக்கப்படுகிறது.

இக்கோயிலுக்கு இரண்டு வீடுகளும் சுமார் ஒரு இலட்சம் ரூபாய் மதிப்பு (1960-இல்) உள்ள நகைகளும் இருக்கின்றன.

கோயிலின் ஆட்சி, மைடான் டில்லிவாழ் நகரத்தார்களிடம் இருந்து வருகிறது. வழிபாடுகள் யாவும் தமிழிலேயே நடந்து வருகின்றன. தமிழ்நாட்டு முறைப்படி பண்டாரம், கோயில் பூசைகளைச் செய்து வருகிறார்.

இக்கோயிலைக் கட்ட 1890-இல் மதுரை மாவட்டம் சின்னாளப்பட்டி குமாரசாமி செட்டியார் என்பவர் காண்டிராக்ட் எடுத்தார். தண்டாயுதபாணி அருளால் அவர் அதன் பின்னர் பெருஞ்செல்வரானதோடு, அந்த நாட்டின் அரசாங்கத்தில் உயர் பதவியும் பெற்றார். 1905-இல் ஓய்வு பெற்று, தாய்நாட்டுக்குத் திரும்பி, தம்மைச் செல்வராக்கிய தண்டாயுதபாணிக்குத் தம் சொந்த ஊரான சின்னாளப்பட்டியில் கோயில் கட்டத் தொடங்கினார். ஆனால் அவர் அந்தப் பணியை முடிக்காமலே இறந்துவிட்டார். அவருடைய பேரன், சென்னை தங்கசாலைத் தெரு டாக்டர் ஜி. எஸ். குமாரசாமி எம்.பி.,பி.எஸ். 1964-இல் அக்கோயிலைக் கட்டி முடித்தார். அக்கோயில் இப்போது பெரும்புகழ் பெற்றிருக்கிறது.

# இந்தோனேசியாவில் தைப்பூசம்

உ

## குகப் பெருமான் துணை
## மைடான் தண்டாயுதபாணி கோயில்
## தைப்பூச மகோத்ஸவப் பத்திரிகை (1918)

### விக்கினேஸ்பரர் துதி

திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவுங்
கருணை பூக்கவுந் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

### குகப்பெருமான் துதி

ஞால மைடானில் நற்குமரன் காட்சி
சாலப் புகன்றழைக்கச் சாருமிந்த பத்திரிகை
தென்பரவு பூசத் திருவுழா கண்டுதொழற்
கன்பர்தமைக் கூவியழைக்கவரும் பத்திரிகை

ஸ்ரீமத் அகண்டா கார சச்சிதா நந்தரூபராய் அருளே உருவாகக் கொண்டு, இம்மையுடன் புளோணியாவின் கண் வீற்றிருக்கும் நம்வழிபடு கடவுளாகிய எம்பெருமான் க்ஷேத்திரத்திற்கு நிகழும் பிங்கள தைமீ 12 தேதி சுக்கிர வாரம் புனர்பூச நக்ஷத்திரத்தில் அன்று காலை 9 மணிக்கு இந்து ஸ்ட்ரீட் 25 நிம்பர் கிரகத்தில் நின்றும் மெய்யன்பர்கள் புடைசூழ விசேஷ வாத்தியக் கருவிகளின் கோஷ்டத்துடன் சர்வாபரண அலங்கிருதராயும், வெள்ளிமயில் வாகனரூடராயும் இந்திர விமானத்தமர்ந்து அடியார்களின் சர்க்கரைக் காவடிகளோடு பத்தி சன்மார்க்கமாக தமதாலயம் சென்றமர்ந்தருளியும், 13-ந் தேதி மந்தவாரம் பூச நக்ஷத்திரத்தில் தமதடியார்களால்

ஆங்கு நடத்தும் மயேஸ்வர பூசையையும் பால்க் காவடிகளின் அபிஷேகத்தையும் ஏற்று பன்னிரு கண்களாலும் அருளுடன் கடாக்ஷித்து 14-ந் தேதி ஆதித்தவார தினம் அதிஅற்புத சர்க்கரைக் காவடிகளின் அபிஷேகத்தைப் பெற்றருளி அன்று மாலை 6 மணிக்கு ஆங்கு நின்றும் சர்வாபரண பூசிதருயும் புகர்வாறணரூடருயும், சங்கீத கானத்துடன் இந்திர விமானத்தாரோ கணிந்து திருவீதியில் திருவுலாக்கொண்டு இரவு 9 மணிக்கு தாரு வாப்பானில் நடக்கும் வானக்காட்சியைக் கண்ணுற்று மீண்டும் மிகு ஆடம்பரத்துடன் தமதிருக்கையில் சேர்ந் தருளுவார்.

இம்மகோற்சவ மாகாத்மியத்தை தாங்கள் இஷ்ட மித்திரருடன் இங்கு விஜயமாகி வழிபடும் நம் யெம்பெருமானை திரிகரணங்களோடு இறைஞ்சிலோகர அனுபவகர்ம பந்தங்களை நீக்கி இப்பூவின்கண் உள்ள கால முழுதும் அஷ்டஐஸ்வரியங்ளொடு பெருவாழ்வையும் கைப்பற்றி பிர்மானந்தமுறக் கோருகின்றோம்.

இங்ஙனம்,

நாட்டுக்கோட்டை நகரத்தார்

டில்லி சுமத்ரு.

# 11. மொரிசியஸ்

இந்தியப் பெருங்கடலில் ஆப்பிரிக்காவின் தென் கோடிக்கு அருகே உள்ள தனித்தீவு மொரிசியஸ். இது நெடுங்காலம் பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்து இப்போது சுதந்திர நாடாக உள்ளது. இங்கு பெரும்பாலான மக்கள் இந்தியர்களே ஆவர். பிரெஞ்சுப் பண்பாடும் நாகரிகமுமே இங்கு ஏற்றம் பெற்றுள்ளன.

19-ஆம் நூற்றுண்டுக்கு முன்னர் இந்தத் தீவின் தலைநகரான போர்ட்லூயி என்னும் நகரில் நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் சிலர் சென்று வியாபாரம் செய்தனர். அவர்கள் அப்போது சொக்கலிங்கம் மீனுட்சி அம்மன் கோயிலைக் கட்டினர். தைப்பூச விழாவும் ஏற்பாடு செய்துள்ளனர்.

இப்போது நகரத்தார் ஒருவர்கூட இத்தீவில் இல்லை எனினும் கோயில் நன்ருக நடைபெற்றுவருகிறது. தைப்பூச விழா மொரிசியசில் சிறப்பாகக் கொண்டாடப் பெற்று வருகிறது.

பிரெஞ்சு, கிரியோல் மொழிகள் மூலமாக முருக வழிபாடு, சைவ சித்தாந்தக் கருத்துக்கள் ஆகியவற்றை அறிய மொரிசியஸ் தமிழர்கள் ஆவலாக உள்ளனர்.



17 APR 1979

# 12. இங்கிலாந்து

லண்டன் மாநகரில் முருகன் கோயில் ஒன்றைக் கட்டும் முயற்சி நடைபெற்று வருகிறது. இம் முயற்சியில் கண்ட மாணிக்கம் திரு. மெய்யப்பன் ஈடுபட்டார்.

சிங்கப்பூரிலும் பினாங்கிலும் உள்ள நகரத்தார் கோயில்களிலிருந்து, லண்டன் முருகன் கோயிலுக்கு நிதி வழங்கப்பெற்றது.

இந்தப் பணியில் உதவுவதற்காக இந்தியாவில் இயங்கும் குழுவில் திரைப்பட அதிபர் திரு ஏ. வி. மெய்யப்பன், தொழிலதிபர்கள் திரு.அ.மு.மு.அருணாசலம், திரு. மு.அ.சிதம்பரம், திரு. லெ.நாராயணன் செட்டியார், திரு. அ. மு. க. மு. சித. மு. சிதம்பரம் ஆகிய பலர் உள்ளனர்.

# 13. அமெரிக்கா

நியூயார்க்கு மாநகரில் ஒரு கோயில் கட்டவேண்டும் என்ற எண்ணம் 1968 செப்டம்பரில் டாக்டர் அழகப்பா அழகப்பன் அவர்கட்கு உதித்தது. இவர் காரைக்குடிகாத் தான் ஊரினர். எம் ஏ., எம். எஸ்சி. (பொருளாதாரம்) (லண்டன்), பிஎச். டி. (லண்டன்), பாரிஸ்டர்-அட்-லா பட்டங்கள் பெற்றவர். ஐக்கிய நாடுகள் அமைப்பில் நீர் வளத் துறையின் தலைவராக ஓராண்டில் 250கோடி ரூபாயைச் செலவிடும் பொறுப்பில் இருப்பவர்.

சிறிய அளவில் ஒரு கோயிலைத் திட்டமிட்டார். சைவர், வைணவர் ஆகிய இரு சாராருக்கும் ஈடுபாடு ஏற்பட வேண்டும் என்ற எண்ணத்துடன், பொதுவாக விநாயகர் கோயில் கட்ட முடிவு செய்தார். அதன் பிறகு ஐக்கிய நாடுகள் அமைப்பின் உயர் அலுவலர் திரு. சி. வி. நரசிம்மன் ஐ. சி. எஸ். (இவர் 1978 இறுதியில் ஓய்வு பெற்றார்) என்பவரைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவை டாக்டர் அழகப்பன் 1969 நவம்பரில் அமைத்தார்.

இந்த முயற்சி பல மடங்காகப் பெருகி, ஒரு கோடி ரூபாய்ச் செலவில் கோயில் கட்டிமுடிக்கப் பெற்றுள்ளது. அமெரிக்க நாடு தோன்றிய 200 ஆண்டுகள் நிறைவுவிழா (இரண்டாம் நூற்றாண்டுவிழா) நாளான 1977 ஜூலை நான்காம் நாளில் பிரதிட்டையும் குடநீராட்டு விழாவும் சிறப்பாக நடைபெற்றன.

ஆந்திரப் பிரதேச அரசாங்கமும் திருமலை திருப்பதி தேவஸ்தானமும் இந்தக் கோயிலுக்குப் பெரும்பொருளை வாரி வழங்கியுள்ளனர். (எனினும் அவர்களை எதிர் பார்த்தோ அவர்கள் தூண்டுதலாலோ இக்கோயில் திட்ட மிடப்படவில்லை, இக்கோயிலைக் கட்டும்வேலை அவர்களை நம்பித் தொடங்கப்பெறவும் இல்லை.) சிங்கப்பூரிலும் மலே சியாவிலும் உள்ள நகரத்தார் கோயில்கள் மனமுவந்து வழங்கிய பணங்களைக் கொண்டுதான் பிள்ளையார் சுழி போடப்பெற்றது. அதைத் தொடர்ந்து டாக்டர் அழகப்பன் அவர்களோடு தொடர்பு கொண்டிருந்த நகரத்தார் சிலர் இந்தியாவில் பல வகைகளில் பொருளும் பணமுமாக வழங்கினர். இவ்வாறு கொடுக்கப்பட்ட உதவியின் மதிப்பு சிறியதாக இருப்பினும் இந்த அளவுக்கு ஊக்கப்படுத்தப் பட்டதாலேயே டாக்டர் அழகப்பன் உறுதியுடன் செயல் படவும் நம்பிக்கையுடன் பிறரை அணுகவும் வழிபிறந்தது.

இந்தத் திருப்பணியில் டாக்டர் அழகப்பன் அவர் களின் தம்பி திரு. வள்ளியப்பன் ஐ.ஏ.எஸ். அவர் களுடைய பங்கும் குறிப்பிடத்தக்கது. இவர் ஆந்திரப் பிரதேச அரசின் உயர் அலுவலர்களில் ஒருவர்; திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் தலைவராகவும் இருந் திருக்கிறார்.

நியூயார்க்கு மாநகரில் கும்பாபிஷேகம் நடத்துவதற் குத் தேவையான பல செயல்களை இந்தியாவில் திறமை யாகச் செய்து கொடுத்த பெருமை டாக்டர் அழகப்பன் அவர்களின் தம்பி திரு. அருணாசலம் ஐ.ஆர்.எஸ். அவர் களின் மனைவியார் திருமதி அலமேலு ஆச்சி அவர்கட்கு உரியது. அவர்கள் பல்லாண்டுகளாக இக்கோயில் பணிகளில் காட்டிவரும் ஆர்வத்தை எவ்வளவு போற்றி னாலும் தகும்.

நகரத்தார்களால் அருகுபோல வேரூன்றப் பெற்ற நியூயார்க்கு விநாயகர் கோயில் இன்று ஆலமரம்போல

விரிந்து உயர்ந்து வளர்ந்திருக்கிறது. ஆயிரக்கணக்கான மக்கள் நாள்தோறும் இக்கோயிலுக்கு வந்து வழிபடு கின்றனர். பணம் நிரம்பி வழிகிறது.

இக்கோயில் வட அமெரிக்க இந்துக் கோயில் சங்கம் (ஹிந்து டெம்பிள் சொசைட்டி ஆப் நார்த் அமெரிக்கா) என்ற ஒரு சங்கத்தாரால் நடத்தப்பெற்று வருகிறது. இச் சங்கம் 1975-இல் பதிவு செய்யப்பெற்றது. இச்சங்கத் தின் தலையாய நோக்கம், நியூயார்க்கு மாநகரத்து ப்ளஷிங்ஸ் பகுதியில் பௌனி தெருவில் 45-47 இலக்கங் களில் கட்டப் பெற்றுள்ள (மேலே சொல்லப்பட்ட) விநாயகர் கோயிலை நடத்துவ்தாகும்.

தொடர்ந்து டாக்டர் அழகப்பன் இச்சங்கத்தில் பொறுப்பான பதவி வகித்துவர வேண்டுமென்று, இச்சங் கத்தார் 1978-இல் அவரை வேண்டிக் கொண்டிருக் கின்றனர்.

ஓராண்டுக்கு இக்கோயிலுக்கு ஏற்படக்கூடிய செலவு களைக் கணக்கிட்டு, அதை 365 பங்குகளாக வகுத்து ஒவ்வொரு நாள் செலவையும் ஒருவர் ஏற்பதற்கு வசதி யாக நன்கொடைத் திட்டம் ஒன்றை டாக்டர் அழகப்பன் தீட்டியுள்ளார். ஒரு நாள் செலவை ஆண்டுதோறும் ஏற்பதற்குத் தேவையான முதலீட்டை வழங்க இயலாத வர்களுக்காக அரை நாள் திட்டம், கால் நாள் திட்டம் என்பவற்றையும் வகுத்துள்ளார். ஒவ்வொரு நாளும் ஏறத்தாழ ரூ. 5,000 (600 அமெரிக்க டாலர்) செல வாகும் என்று தெரிகிறது.

இக்கோயிலில் வைத்துப் பூசை செய்ய நடராசர், சிவகாம சுந்தரியம்மன், மாணிக்கவாசகர் ஆகியோருக் குத் தனித்தனியே (மூன்று) உற்சவ விக்கிரகங்களை, கோவிலூர் ஆதினத்துத் தலைவர், நகரத்தார்களின் குரு-

மகா சந்நிதானமாகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ. இராமநாத ஞானதேசிகர் அவர்கள் நன்கொடையாக வழங்கியுள்ளார்கள்.

சாதாரணமாக உற்சவ விக்கிரகங்கள் பித்தளை, ஈயம், செம்பு ஆகியவற்றால் மட்டுமே உருவாக்கப்பெறுகின்றன. கோவிலூர் மகா சந்நிதானம் அவர்கள் வழங்கியுள்ள இந்தத் திருவுருவங்கள் வெள்ளி, தங்கம் ஆகியவையும் சேர்ந்து, பஞ்சலோகங்களில் செய்யப்பெற்றுள்ளன. நடராசரின் திருவுருவம் $1\frac{1}{2}$ அடி உயரத்திலும் சிவகாம சுந்தரி அம்மனின் திருவுருவம் $1\frac{1}{4}$ அடி உயரத்திலும் மாணிக்கவாசகர் திருவுருவம் ஒரு அடி உயரத்திலும் சிதம்பரத்திலேயே உருவாக்கப்பெற்று, நடராசப் பெருமானுடைய ராஜ சபையான ஆயிரங்கால் மண்டபத்தில் வைத்து அபிஷேகம் செய்து விசேஷ அர்ச்சனைகளுக்குப் பிறகு அமெரிக்காவுக்கு அனுப்பப்பெற்றுள்ளன. குனித்த புருவத்துடனும் பனித்த சடையுடனும், அர்ச்சகர் உடன் இருந்து வார்க்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. பனித்த சடை (விரித்த சடை அன்று) யுடன் கூடிய நடராசர் வடிவம் அமைந்தது, அப்பர் பாடலில் கூறப்பெற்றுள்ள முறையாகும்.

**பிறநகரங்களில்**

அமெரிக்காவில் லாஸ் ஏஞ்சல்ஸ், பிட்ஸ்பர்க், ஊஸ்டன் முதலிய பெருநகர்களிலும் கோயில்கள் கட்டப் பெற்றுவருகின்றன. இந்த முயற்சிகளுக்கெல்லாம் அடிகோலியவர், இந்தப் புதிய வேகத்தை முடுக்கிவிட்டு, கோயில் கட்டும் ஏற்பாடுகளுக்கு வழிகாட்டியும் ஆதரவு கொடுத்தும் பல அமைப்புகளுடனும் அச்சங்கங்களுடனும் தொடர்பு ஏற்படுத்தியிருப்பவர் டாக்டர் அழகப்பன் அவர்களே ஆவார்கள்.

**மீனாட்சியம்மன் கோயில்**

டெக்சாஸ் மாநிலம் ஊஸ்டனில் மீனாட்சியம்மன் கோயிலைக் கட்டும் வேலையை அங்குள்ள தமிழர்கள் தொடங்கிவிட்டனர். இக்கோயிலின் அறங்காவலருள்

ஒருவராக, நாட்டரசன்கோட்டை திரு.எஸ் கண்ணப்பன் இருந்து வருகிறார்.

மூலவர் திருவுருவத்தைச் செய்து கொடுக்க, மதுரை கருமுத்து தியாகராசச் செட்டியார் அவர்களின் பேரனும் சுந்தரம் செட்டியார் அவர்களின் மகனுமான திருப்பணிச் செல்வர் திரு. கருமுத்து. எஸ். சொக்கலிங்கம் அவர்கள் முன்வந்துள்ளார்கள்.

அலைகடலுக் கப்பாலும் ஆர்ந்தநக ரத்தார்
சிலைவடித்த ஆலயங்கள் சீராய் — மலையாகச்
செப்பணிகள் சேர்த்தார்காண் செய்யநம்
' சோமலெ '
வையத்தில் வாழ்க வளர்ந்து!

— பழ. ஷண்முகம்.

# 14. பிற்சேர்க்கை

## (1)

## கொண்டு விக்கப்போன நாட்டில் கோயில் கட்டும் தூயர்

### கவிஞர் கொத்தமங்கலம் சுப்பு

1. நான் மறையும் ஒரு மதிலாம் நாட்டுக்கோட்டை மதிலில்
நாமணக்கும் திருமுறைகள் ஆகமங்கள் ரெண்டு
நாதசுரம் வீணைகுழல் நாட்டியமும் மூன்று
நாணயமும் பாநயமும் நாவடக்கம் நான்கு
வெள்ளைக்கார நாகரீகம் விஷத்தைப் போலே பரவி
உள்ள கலைகள் சொல்லிக்காமல் ஓடிப்போன நாளில்
பிள்ளை தாயைக் காப்பது போல்பேணிக்கலையைக் காத்த
வள்ளல்களை கோடித்தரம் வணங்கி வாழ்த்துகின்றேன்.

2. வெள்ளி ரதம் இருக்குமாடி? தங்க அங்கி உண்டா? நல்ல
வீணை உண்டா? சங்கீதத்தில் வித்துவான்கள் உண்டா?
வீதி யெல்லாம் நாதசுரம் மோதிக் காதில் பாயும் — காலை
விழாவுக்காக ரதமிழுக்க விடைகள் புல்லை மேயும்
கோத்திரத்தில் முனிவர் பேரை கோர்த்து சொல்வார் மற்றோர்
கோவிலையே கோத்திரமாய் கொண்டவர் நகரத்தார்.

8. வட்டியிலே சோறை உண்டு வந்த மிச்சமெல்லாம்
கட்டி வைத்துக் கோவிலாகக் கட்டி வைத்தோர்
யாரு?
ஆறுயரம் அண்டா நூறில் சாம்பார் ரசம் கூட்டு
அதுக்குத் தகுந்த காய்கறிகள் உப்புக்காரம் போட்டு
உண்ண
அழைச்சிடுவார் அஞ்சு ஊறு கேட்கும்
அதிருவேட்டு — கும்ப
அபிஷேகமாம் நடக்குதிப்போ பேப்பரிலே போட்டு
செட்டிமார்கள் நம் கலையைக் கட்டிக்
காக்காவிட்டால்
சிற்பம் தச்சு சிலைகலைகள் சீரழிந்திருக்கும்
ஆச்சிமார்கள் நம் தமிழை ஆதரிக்காதிருந்தால்
அயித்தை அப்பன் ஆண்டி - டாடி ஆகிப்
போயிருக்கும்.

4. மோருவித்த காசை இறுக்கி முடிஞ்சு வைப்பார்
ஆச்சி குன்னக்குடி
முருகனுக்கு வெள்ளியிலே வைப்பார் திருவாச்சி
குளம்பு வித்துப் பாக்கை வாங்கி குமிச்சு வைப்பார்
ஆச்சி — திருக்
குளங்கள் வெட்டும் திருப்பணிக்குக் கொடுத்திடுவார்
ஆச்சி
கோயிலிலே அலகிடுவார் கோடீஸ்வரர்
மனைவி — வண்ணம்
கோலமிடும் கைகளிலே குலுங்கும் வைர வளைவி
வாய் மணக்கும் தாலாட்டிலே வருகும் தமிழ் அருவி
வாழ்க்கை யெல்லாம் உழைப்பதிலே வானம்பாடிக்
குருவி.

5. கோவிலும் குளத்தழகும் கொஞ்சும்
கோவிலூரு—நாட்டு
கோட்டையாரின் வளைவழகைக் கோயிலூரில் பாரு

கோபுரம்போல் இருபுறமும் கொஞ்சும் ரெண்டு
தேரு — அந்தக்
கொடிமரத்தை நகரத்தாரு பார்க்கணும் ரிப்பேரு.

6. நல்ல தண்ணி ஊரணிபோல் நகரத்தார்கள்
எல்லாம் — மக்கள்
நாகரீகத்தோடு வாழ நடத்தும் பள்ளிக்கூடம்
பிள்ளை முதல் கிழவர் வரை பெண்கள் ஆண்கள்
எல்லாம்
பெரிய மனிதர் தமிழகத்தின் பெருமை கூறும் மனிதர்.

7. பணத்துக்காக நகரத்தாரைப் பாடவில்லை சுப்பு சும்மா
பழகியதால் ஒருவரைப் பாராட்டுவதும் தப்பு
குணத்துக்காக நகரத்தாரைக் கும்பிடுவான்
சுப்பு — அவனால்
கோவில் கட்ட முடியாததால் பாவில் வைத்தான்
இப்போ.

8. வள்ளுவரின் குறள் வழியே வாழுகின்ற
மக்கள்-பண்டைத் தமிழ்
வழக்க பழக்கம் குறைந்திடாமல் வளர்ந்து வரும்
மக்கள்
கொள்வதிலும் கொடுப்பதிலும் கோணிடாத மக்கள்
கொண்டு விக்கபோன நாட்டில் கோவில் கட்டும்
மக்கள்
வள்ளல் என்றால் இருபத்தோரு வள்ளலோடு
போச்சா? நாம்
வாழும்போது தமிழின் வயிறு மலடியாகிப்
போச்சா? செட்டிப்
பிள்ளைகளில் வள்ளலெத்தனை செப்பும் கோவில் ஏடு
சீரும் சிறப்புமாக என்றும் செழிக்கும் செட்டி நாடு.

## (2)

# தண்டாயுதபாணி வழிபாடு ஏன்?

**அ. பெரி. கண்ணப்ப செட்டியார்,**
**நாட்டரசன்கோட்டை.**

(1956 முதல் 1963 வரை காசி நகரச் சத்திரத்தின் மேலாளராக இருந்தவர்)

நகரத்தார்கள் அனைவரும் சைவராக இருந்தும் வெளி நாடுகளில் அவர்கள் சிவபெருமானைவிடத் தண்டாயுத பாணிக்கே மிகுதியாகக் கோயில் கட்டியும் விழா எடுத்தும் வருகின்றனர். இதற்குக் காரணம் சிவாலயங்களைச் சிவ ஆகம விதிப்படி நிறுவி அவ்வாறே சிவபெருமான் வழி படப்பெற வேண்டும். அந்த ஆகம முறைகளை வெளி நாடுகளில் கடைப் பிடிக்க இயலாது. முறை தவறி நடக்க நேரின் ஏற்படும் அபசாரத்துக்கு — சிவ அபசாரத்துக்கு— நிவர்த்தி செய்ய வழியில்லை. மேலும், சிவலிங்கத்துக்கு கிரகஸ்த சிவா சாரியார்களால் மட்டுமே பூசைசெய்ய வேண்டும். (சான்று: திருவிளையாடற் புராணத்தில் தரு மிக்குப் பொற்கிழி அளித்த படலம்) தொழில் செய்யும் தொலை தூரங்களில் நியம நிஷ்டையுடன் இருப்பதிலுள்ள இன்னலை நகரத்தார்கள் உணர்ந்திருப்பதிலிருந்து அவர் களுடைய அடக்கமும் பக்தியுணர்ச்சியும் புலனாகும்.

மன்னிக்கும் தன்மை தண்டாயுதபாணிக்கு உண்டு. தாங்கள் செய்யக் கூடிய சிறு தவறுகளை மறந்து மன்னித்துத் தங்களை வாழவைக்க வேண்டும் என்பதைக் கருத்திற்கொண்டு, இவர்கள் இக்கடவுளுக்குச் சிறப்பிடம் தந்துள்ளனர். கோயில் கட்டுவதற்கு முன் அல்லது கோயில் கட்ட இயலாத சிறு ஊர்களில் தண்டாயுதபாணி யின் படத்தை வைத்து வழிபடுவதே வழக்கம்.

முருகன் என்றும் தண்டாயுதபாணி என்றும் சுப்பிரமணியர் என்றும் தமிழ் மக்கள் போற்றும் இறைவனை வட இந்தியாவில் பிரபலப்படுத்தியவர்கள் நகரத்தார்களே ஆவர். கல்கத்தாவில் ஒரு பெரிய அறிஞர் நகரத்தார் தொடர்பால் தமிழ் மொழிபயின்று, சுநீதிகுமார் சாட்டர்ஜி என்ற தம்பெயரை 'நன்னெறிமுருகன்' என்று ஆக்கிக் கொண்டார்.

வீடுகளில் பூசை போடும்போது, வேல் ஊன்றிப் பூசை போடுவதும் அதற்குச் சுப்பிரமணியர் பூசை என்று பெயரிடுவதும் மரபு. சுப்பிரமணியருக்கு எத்தனை பெயர்கள் உண்டோ அத்தனை பெயர்களும் செட்டியார் சமூகத்தில் வழங்கக்காணலாம். நகரத்தார்கள் வாழும் சில ஊர்களில் ஏற்கெனவே சிவன் கோயில்கள் — சிவகங்கை ஜமீன்தார் முதலியவர்களால்—கட்டப்பெற்றிருந்தன. இவ் ஊர்களில் நகரக் கோயில் கட்ட முடிவுசெய்தபோது, நகரத்தார்கள் தண்டாயுதபாணிக்கே கோயில் கட்டியுள்ளனர். கல்லுப்பட்டி, கூழிபிறை, கோனபட்டு, நெற்குப்பை ஆகிய ஊர்களிலும் உலகம்பட்டி ஞானியார் மடத்திலும் நகரத்தார்கள் சுப்பிரமணியர்க்குக் கோயில்கள் அமைத்துள்ளனர்.

## (3)

## பர்மா

### (அ) பசுமந்தானில் குடமுழக்கு

1871 - ஆம் ஆண்டில் இரங்கூனைச் சார்ந்த பசுமந்தான் பகுதியில் நகரத்தார்கள் ஸ்ரீ நகர தண்டாயுத பாணி கோயிலை அமைத்தனர். இக்கோயில் புதுப்பிக்கப் பெற்று, 2—2—1979 அன்று திருக்குட நீராட்டுவிழா இனிது நடத்தப்பெற்றது. ஐந்து நாட்களுக்கு யாகசாலை

நடைபெற்றது. தேவார திருவாசகங்கள் ஓதப்பெற்றன. தமிழ், பர்மிய, ஆங்கில மொழிகள் நகரத்தார்கள் அச்சிட்ட குடநீராட்டு அழைப்பிதழில் இடம் பெற்றன.

## (ஆ) இரங்கூனில் உள்ள பெருந்தெருக்கள்

| பழைய பெயர் | புதிய பெயர் |
|---|---|
| 1. மெர்ச்சண்ட் ஸ்ட்ரீட் | — கொவ்ந்து வே லாம் |
| 2. டல்ஹவுசி ரோடு | — மஹா பண்டுலாம் |
| 3. பிரேசர் ரோடு | — அனவரதா லாம் |
| 4. மங்கோமரி ஸ்ட்ரீட் | — போஜா அவுங் ஸான் லாம் |
| 5. மொகல் ஸ்ட்ரீட் | — சுவே பொவ்ந் தாலாம் |
| 6. பேய்ரி ஸ்ட்ரீட் | — பானி ஸொடான் லாம் |
| 7. ஸ்பார்க் ஸ்ட்ரீட் | — போ அவுங்ஜோ லாம் |

## (இ) அச்சுப் பிழைகள்

இந்நூலில் பர்மா பற்றிய பகுதியில் பின்வரும் பிழைகள் ஏற்பட்டுள்ளன.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 61 | கடைசி | 1957 | 1964 |
| 63 | 6 | சித ப.சி.ராம. | சு.தெ.ப.சி.ராம. |
| 66 | கீழிலிருந்து 6 | 214 | 216 |
| 67 | 8 | டியாங்கோவை | டைங்குயினை |
| 67 | 14 | கட்டியுள்ளனர் | உள்ளது |
| 67 | கடைசி | தெக்குமதி | சைக்கமி |

# (ஈ) ஆறறை

வாசீச கலாநிதி கி. வா. ஜ. அவர்கள் கலைமகளில் எழுதியது:—

## மே 1959

ஆறு ஆதாரங்களுக்கு மேலே துவாத சாந்தத் தலத்தில் இறைவன் எழுந்தருளியிருக்கிறன் என்று யோக நூல்கள் கூறுகின்றன. அருணகிரிநாதர்,

"நீடார் சடாதரத்தின் மீதே பராபரத்தை
நீ காண் என அனைச்சொல் — அருள்வாயே!"

என்று பாடியிருக்கிறார்!

"ஆறறை என்பது மொகல் வீதியில் உள்ள கட்டிடம். அதில் ஆறு நீண்ட அறைகள் இருக்கின்றன. ஒவ்வோர் அறையிலும் இருபத்தைந்து பேர்கள் வட்டிக்கடை நடத்துகிறார்கள்."

"அங்கே கோயில் இருக்கிறதா?"

"ஆம்; கீழ்த் தளத்தில் இந்த ஆறு அறைகளும் இருக்கின்றன. மேல் தளத்தில் முருகன் கோயில் இருக்கிறது. இந்தக் கட்டிடம் முருகனுடைய சொத்து. அதில் தொழில் நடத்துகிறவர்கள் யாவரும் மாதந்தோறும் வாடகை தருகிறார்கள். அந்தப் பணத்தைக் கொண்டு கோயிலில் நித்திய வழிபாடுகளும் திருவிழாக்களும் நடைபெறுகின்றன. தைப் பூசத்துக்கு ஆறறை முருகன் பசுமந்தானுக்கு எழுந்தருள்வான்."

## ஜனவரி 1960

மோல்மீனில் நகரத்தார் பாதுகாப்பில் உள்ள முருகன் கோயிலை அடைந்தேன். அங்கே குளமும் இருக்கிறது. நூற்றுக்கணக்கான மக்கள் ஒருங்கே இருந்து விருந்துண்ணும் நீளமான கூடமும் அத்தனை பேருக்கும் சமைக்க வசதியான இடமும் உள்ள பெரிய விடுதி ஒன்று இக் கோயிலைச் சார்ந்து அமைந்திருக்கிறது.

## ஜூலை 1960

தனவணிக மக்கள் தைப்பூசத்தன்று சிவக்கோலம் பூண்டு பவனியுடன் வந்தார்கள். ஆறறையிலிருந்து கீழே இறங்கித் திருவீதிக்கு எழுந்தருளும்போது அவர்கள் இறைவனுக்குச் செய்த உபசாரத்தை என்னென்று சொல்வேன்! முருகன் நேரே எழுந்தருளி வந்து நின்றால் எவ்வாறு மனம் உருகி வழிபடுவார்களோ அப்படி வழிபட்டார்கள்.

ஆறறையிலிருந்து திருவுலாப் புறப்பட்ட முருகன் பசுமந்தானில் உள்ள நகரத்தார் மண்டபத்துக்குச் சென்றான். அங்கே ஒரு கோயில் இருக்கிறது. இந்த உற்சவ மூர்த்திக்கு அங்கே ஆராதனைகள் நடைபெறுவது வழக்கம்.

தைப்பூச விழாவில் தனவணிகர் குடும்பத்தினர் அத்தனை பேரும் — ஒரு சிறு குஞ்சு கூட விடாமல் — பசுமந்தானுக்கு வந்துவிட்டார்கள். அன்றும் மறுநாளும் ஒரே தெய்வீகக் குதூகலம்; ஆராதனை; அலங்காரம்; சாப்பாடு.

# இந்நூல் உருவான வரலாறு

1963-இல் காசி நகரச் சத்திரத்தின் நூற்றாண்டு விழாவையொட்டி ஒரு மலரை உருவாக்கும் பொறுப்பு எனக்கு வழங்கப்பெற்றது. அப்போது சத்திரத்தின் ஆட்சி அலுவலகம் இரங்கூனில் இருந்தது. அந்த நிர்வாகிகள், மலரைப் படைக்க எனக்கு முழு உரிமை அளித்திருந்த போதிலும் பர்மாவிலுள்ள நகரத்தார் கோயில்களைப் பற்றி ஒரு கட்டுரை அனுப்பி அதையும் வெளியிடவேண்டு மென்று பணித்தனர்.

பர்மாவைப்பற்றி வெளியிட்டால் இலங்கை,மலேசியா, செய்கோன் பற்றியும் வெளியிடலாமே என்று நான் கருதி னேன். அவசர அவசரமாக அந்த நாடுகளிலிருந்து சுருக்க மான கட்டுரைகளை வரவழைத்து அம்மலரில் சேர்த்தேன். முழுமையான நூலை வெளியிடவேண்டும் என்ற எண்ணம் அப்போதே — அதாவது பதினாறு ஆண்டுகட்கு முன்னரே — என் மனத்தில் ஆழப்பதிந்தது.

இதன் பின்னர் ஏற்பட்ட மற்றொரு நிகழ்ச்சியையும் குறிப்பிட வேண்டும்.

ஐக்கிய நாடுகள் அவையின் கல்வி அறிவியல் பண் பாட்டு அமைப்பு, தொன்மையான மரபுகளைப் பாதுகாப் பதற்காகச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் மரபு வழியான பண்பாட்டு மையத்தை நிறுவியிருக்கிறது. இந்த மையத் தில் பல்லாண்டுகளாக இயக்குநராக இருந்த பேராசிரியர் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார் அவர்களும் இப்போது இயக்குநராக இருந்துவரும் (என்னுடைய ஆசிரியர்) டாக்டர் கே. கே. பிள்ளை அவர்களும் தென்கிழக்கு ஆசியாவைத் தொடர்புபடுத்தி நான் ஒரு சிறப்புரை நிகழ்த்த வேண்டும் என்று விரும்பினர். ஆசிரியர்களிடத் தில் மரியாதைவைத்து அவர்களுடைய ஆணையை நிறை வேற்றுவதைக் கடமையாகக்கொண்ட ஒரு தலைமுறையில்

வளர்ந்தவனுதலால், அவ்வாறே தென்கிழக்கு ஆசியா வில் நகரத்தார்களின் இறைபணி என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரையை 1971 டிசம்பரில் ஆங்கிலத்தில் படித்தேன். அந்தக் கருத்தரங்குக்கு, அப்போது யுனெஸ்கோவின் தலைமை இயக்குநராக இருந்த டாக்டர் மால்கோம் ஆதிசேஷையா அவர்கள் போன்ற அறிஞர்கள் வந்திருந்து என்னை ஊக்கப்படுத்தினர்.

காஞ்சி காமகோடி பீடாதிபதி அவர்கள் நடத்திய ஒரு சதசிலும் இதைப்பற்றிப் பேசும் வாய்ப்புக் கிட்டியது.

1976-இல் திருவண்ணாமலைக் கோயில் குடமுழுக்கு மலரில் எல்லா நாடுகளிலும் நகரத்தார் திருப்பணிகளைப் பற்றி விரிவாக எழுதத் திட்டமிட்டேன். மலேசியாவி லிருந்து முரு. பழ இரத்தினம் செட்டியார் அவர்கள் விவரங்களைச் சேகரித்து அனுப்பியிருந்தாகள். பிற நாடுகளிலிருந்து உரிய தகவல்கள் வரவில்லை. தனி நூலாக எழுதும் முயற்சி தொடர்ந்து நடைபெற்றுக் குறிப் புக்களைப் பல நாடுகளிலிருந்தும் வரவழைத்தேன். அதன் விளைவே இந்நூல்.

சமய வரலாறு, கடல் கடந்த இந்தியர் வரலாறு ஆகியவற்றில் ஈடுபாடும் அக்கறையும் உள்ள அனைவர்க் கும் இந்த நூல் உதவும்.

நகரத்தார் வரலாற்றில் ஒரு பெரிய திருப்பம் ஏற்பட் டுள்ளது. பர்மா, இலங்கை நாடுகளிலுள்ள ஊர்களை — இந்நூலில் குறிப்பிட்டிருப்பவற்றைப் பற்றி — இந்தத் தலை முறையினர் கேள்விப்பட்டிருக்கக்கூட மாட்டார்கள். முன்னோர் வாழ்வும் முயற்சியும் இந்நூல் வாயிலாகச் சிறி தளவாவது விளக்கம்பெற இந்நூல் உதவும்.